பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இரத்தின முஹம்மது

கருணைச் சரித்திரம்

Q7t35.2
N51

வசன ரூபகம்.

(திருத்தப்பட்ட பதிப்பு)

பேட்டை ஆம்பூர். வா. அப்துல் காதிர்
ஸாஹிபவர்களால் பாடப்பட்டதை
கண் அஹ்மது மருதூம் முஹம்மது
புலவரவர்களால் வசன ரூபமாக
எழுதப்பட்டு

---

சென்னை திருவல்லிக்கேணி
ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
அவர்களால்
தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

1951 [அணா 12.

MADRAS
27 APR 1951

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இரத்தின முஹம்மது

## காரணச் சரித்திரம்

## வசன ரூபகம்.

(திருத்தப்பட்ட பதிப்பு)

பேட்டை ஆம்பூர். வா. அப்துல் காதிர்
ஸாஹிபவர்களால் பாடப்பட்டதை
கண் அஹ்மது மருதூம் முஹம்மத்
புலவரவர்களால் வசன ரூபமாக
எழுதப்பட்டு

---

சென்னை திருவல்லிக்கேணி

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை] 1951 [அணா 12.

# அன்வாருல் குர்ஆன்

## என்னும் திருமறைப் பிரகாசம்

### 1-வது ஒளி

### குர்ஆன் ஷரீபின் 30-வது பாகமாகிய

### அம்மயத் ஜுஸுவின் தர்ஜுமா

(புதிய பதிப்பு)

Q7:332
N51

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸுவில் உள்ள எல்லா ஸூறுக்களும் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆயத்தும் முதலில் அரபியில் நூதன டைப் எழுத்தைக் கொண்டு அச்சிடப்பட்டு, அதை யடுத்த அதற்குத் தமிழில் உச்சரிப்பு காயிதாவும் போடப்பட்டு அதனை யடுத்து அந்த ஆயத்தின் பொருள் சுத்த தமிழில் போடப்பட்டிருக்கிறது. இந்த புஸ்தகம் அம்மயத் ஜுஸுவிலுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் பொருளை அறிந்து கொள்ள உதவுவதுடன் அறபியே தெரியாதவர்களும் தமிழ் எழுத்து மூலம் அம்மயத் ஜுஸுவிலுள்ள எல்லா ஸூறுவையும் ஓதத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

இதன் விலை அணா 12

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
111228

### அன்வாருல் குர்ஆன் 2-வது ஒளி

### ஸூரத்து யாஸீன் தர்ஜுமா

(புதிய பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் மேற்கண்ட அம்மயத் போலவே ஸூறத்து யாஸீனில் உள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் தமிழ் உச்சரிப்புடன் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8

## ஸூறத்து யாஸீனும் துஆவும்.

இந்த கிதாபில் யாஸீன் ஸூராவை அறபு வாக்யங்களைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான நூதன அமைப்புகளுடையதாக இயற்றப் பட்டிருக்கிறது. இத்துடன் பெரிய துஆவும் பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும் சேர்த்து கோர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இரத்தின முஹம்மது காரண சரித்திரம்.

(வசன ரூபகம்.)

## முகவுரை.

الحمد لله رب العلمين والعاقبة للمتقين والصلوة والسلام
على رسوله سيدنا محمد وعلى اله وصحبه اجمعين

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், வல்ஆகிபத்து லில்
முத்தகீன், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலிஹி, ஸைய்
யிதினா முஹம்மதின் வ அலா ஆலிஹி, வஸஹ்பிஹி அஜ்மஈன்.

எல்லாப் புகழும் உலகங்களை யெல்லாம் படைத்தாள்கின்ற
அல்லாஹு தஆலாவிற்கே உரியது. ஒடுக்கத்தின் நல்பேறு முத்த
கீன்களுக்கா யிருக்கும். இன்னும் ஸலாத் என்னும் கருணையும்
ஸலா மென்னும் ஈடேற்றமும் அவனது திருதூதராகிய நமது
நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்கள் மீதும் அவர்கள் கிளை கோத்திரத்தார் தோழன்
மார்கள் மீதும் உண்டாவதாகுக.

எல்லாப் புகழையும் வணக்கத்தையு மேற்கின்ற அல்லாஹு
தஆலாவுடைய திருத்தூதராகிய நபி முஹம்மது முஸ்தபா றஸூல்
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், பூர்வீகத்தில் சகல வஸ்
துக்களு முண்டாகிறதற்கு முதற்காரணமாக ஆதி ஒளியாயிரு
தார்கள். அவர்கள் மூலமே சகல வஸ்துகளு முண்டாயின. பின்னர்,
பூலோகத்தில் மனித ரூபமாய்ப் பிறந்து வளர்ந்தும், தீனுல் இஸ்லா
மென்னும் பயிரை விதைத்தும், அதிலே காண்பித்த சில காரணங்
களும், மிஃறாஜிற்குப் போனதும், திரு மக்கமா நகரத்திலிருந்து
திரு மதீனமா நகரத்திற்கு ஹிஜ்றத்தானதும் ஆகிய விஷயங்க
ளெல்லாம் கஸஸுல் அன்பியா, பவாயிதுல் புதூரியா, ஹஸ்துபே
ஹஸ்து, ஜீனனுஸ்ஸியர், தஹாயிக்குல் அக்பர், நூர்நாமா, மதாரி
ஜின்னுபுவா முதலாகிய பற்பல கிதாபுகளிலெழுதி யிருந்தவை
களிற் சில வற்றைத் தெரிந்தெடுத்து கோர்வை செய்து இரத்தின
முஹம்மது காரணச் சரித்திரம் (வசனம்) என்று பேர் கொடுத்து,

பேட்டை ஆம்பூர். வா. அப்துல் காதிறு ஸாஹிபவர்கள் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்த புத்தகத்தில் எழுத்துப் பிழை சொற்பொருள் பிழைகள் மிகவும் மலிந்து கிடந்தமையால், அவைகளை சீர்திருத்தி ஒழுங்காக அச்சிட்டுத் தரவேண்டுமென்று நமது முஸ்லிம் சகோதரர்களில் அனேகர் கேட்டுக் கொண்டனர். எனவே அதனை யாவருக்கும் எளிதில் விளங்கும் பொருட்டு நன்ருகப் பரிசோதித்து சுத்தத்தமிழினுல் திருத்தி எழுதி அச்சிட்டுப் பிரசுரித்திருக்கிறேம். எல்லாவற்றிற்கும் அல்லாஹு தஆலா கிருபை றஹ்மத்துச் செய்வானுகவும். ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

இங்ஙனம்:

காதிரி-கண்ணமதுஹ்மகுதூ முஹம்மதுப் புலவர்.

## நூற்பயன்.

நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் இந்தக் கிதாபில் அடங்கி யிருக்கின்றன. யாராகிலும் ஒரு மூமினுனவன் இதை வாசித்தாலும், இன்பமாகக் காது கொடுத்துக் கேட்டாலும், வாசிக்கத் தெரியாதவன் வாசிக்கத் தெரிந்தவரை வாசிக்கச் சொல்லிக் கேட்டாலும், வாசிக்க வேண்டுமென்று ஆசையோடு கித்தாபை வாங்கி படிக்க கற்றுக் கொண்டாலும், அப் பேர்ப்பட்டவர்களுக்கு அல்லாஹுத ஆலா இந்த இம்மையில் வாழ்வும், பறக்கத்தும், வெற்றியும் சங்கையும், நற்குணமும், நற்செய்கையும், நல்வழி யொழுக்கமும், நிறைந்த பூரண வணக்கத்தின் தக்வாவும் கொடுப்பான். மறுமையிலும் நரகவேதனையும், கொடூரமான கேள்வியும், நெருக்கமான வருத்தமும், கண்டிப்பான தண்டனையும் இல்லாமலாக்கி சொர்க்கவாழ்வும், அதிலுள்ள ஹூறுல் ஈனென்னும் தெவிட்டாத இன்பசுகபோக வாழ்க்கைப் பேரின்பமும், ஹவுலல்கவுஸர் தண்ணீரும், ஆபேஹயாத்தின் தண்ணீரும், அளித்து நன்மை தீமை நிறுக்கும் மீஸான் திராசில் நன்மைத் தட்டுக்கனதியும், ஸிறுத்தல் முஸ்தக்கீம் பாலத்தை மின்னல் போல் கடக்கவும், நன்மைப்பட்டோலையை வலது கையிலும், வெயிற் சூட்டுக்கும் அர்ஷின் நிழல் குடையும் சுவர்க்க குடையும், இன்னும் பற்பல நன்மகிழ்ச்சியுந் தருவான்.

இன்னும், யாராகிலும் ஒரு மூமினானவன் தெரிந்தும் தெரியாமலும் செய்த சிறுபாவங்களையும் ஆண்டவன் பொறுப்பான். சக்ருத்தில் கஷ்டமானவேதனையும் நீங்கும். அந்த வேளையில் கண்ணொளி மங்காமல் மிகுந்த வொளியைக் கொடுக்கும். கபுறின் கேள்வியும் இலேசாகும். சரீர எலும்புகளும் நொறுங்கிப் போகாது.

இன்னும், அல்லாஹு தஆலா, இதை அறிந்தவனுடைய ஈமானை ஷைத்தான் மூடுகாமற் காப்பாற்றுவான். இன்னும் நாற்பது ஹஜ்ஜு செய்த பலனும்; தவுறுத்து, ஸபூர், இன்ஜீல், புர்க்கான் இந்நான்கு வேதத்தையும் ஓதின பலனும் பெறுவான். இன்னும், அவனுடைய தாய் தகப்பன் குற்றங்களையும் அவனுடைய எழுபது தலைமுறையார் குற்றங்களையும் ஆண்டவன் மன்னிப்பான். இன்னும், தூஷணம் பேசுகிறவர்கள் தூஷணம் பேசாமலும், புறம் பேசுகிறவர்கள் புறம் பேசாமலும், கோள் சொல்கிறவர்கள் கோள் சொல்லாமலும், பொய் சொல்கிறவர்கள் பொய் சொல்லாமலு மிருக்கும்படி யாக்கி அவர்களை நன்மையாளர்கள் கூட்டத்திற் சேர்ப்பான். இன்னும், நபியுடைய நன்மையும், ஷஹீதுகளுடைய பாக்கியமும் கிடைக்கும். இன்னும், அல்லாஹு தஆலா அவனை தஜ்ஜாலுடைய தீவினையிலகப்பட வொட்டாமற் காப்பாற்றிக் கொள்ளுவான். இன்னும் அவனுக்கு சொர்க்கத்தில் இருப்பிடம் நிச்சயமாகாமல் துனியாவில் மவுத்தாக மாட்டான்.

## றிவாயத்து.

ஹஜ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானதாக றிவாயத்து செய்திருக்கிறார்கள். அஃதென்னெனில்: நபிகள் நாயகம் ஒருபோது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் இந்தப் புனித சரித்திரத்தை இன்பத்துடனே படிப்பவர்களுக்கும், இன்பத்துடனே படிக்கக் கேட்பவர்களுக்கும் அல்லாஹு தஆலா கியாமத்நாளையில் என்ன பலனைக் கொடுப்பானென்று கேட்டதற்கு, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், அவ்விதம் செய்பவர்களுக்கு அல்லாஹு தஆலா றஹ்மத்தையும், 70 வருஷம் பகலெல்லாம் நோன்பாயிருந்தும் இரவெல்லாம் வணக்கஞ்செய்த நன்மையையும்

70 தடவை பீஸபீல் செய்த நன்மையையும் கொடுப்பா னென்று சொன்னர்.

இன்னும், இந்த நபி சரித்திர மெழுதிய கிதாபை விசுவாசத் தோடும் வைத்து புகழ்ச்சி செய்பவர்களுக்குப் பேய், பில்லி, சூனிய மேருது. மேலும் அவர்கள் கல்பிலுள்ள பர்தாக்களும் வெளிப்பட்டு இருதயம் வெளிச்சமாகும்.

இன்னும், அஸ்துபஹஸ்த்யென்கிற கிதாபில் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய திக்ருனது எல்லா திக்ர்களிலும் தலைமையானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும், ஆலிம், உலமாக்கள் எல்லோரும் சொல்லி யிருப்பது யாதெனில் ;—கல்புடைய கண்ணாடிக்கு இரசத்தைப் போலவும், இரவைக்கு வெளிக் காண்பிக்கப் பட்டதாகவும், நெஞ்சுடைய வீட்டிற்கு அணையாத விளக்குபோலவும், உயி ருடைய தோப்பிற்கு மழைபோலவுமிருக்கும். இன்னும் அந்த திக்ரில் துக்கமும் துயரமும் நீங்கிப்போகும். சந்தோஷமும் வாழ்வு முண்டாகும். நீங்காத வியாதியும் நீங்காத தரித்திரமும் நீங்கிப்போகும். இன்னும் அந்த திக்ரினல் மனிதர் குற்ற மெல்லாம் பொறுக்கப்படும். இன்னுமனிதர் ஹக்கில் நரகமும் அவிந்து போகும். சுவர்க்கத்தின் கற்பதவியுங் கிடைக்கும். இவைகளல்லாமல் எழுதமுடியாத பலன்களும் கிடைக்கும்.

ஆகையால் மூமினன சகோதரர்களே! அந்தத் திக்ரை இரவும் பகலும் மிகுந்த இன்பத்துடனே ஓதவேண்டும். திகிர் செய்யவேண்டும். அல்லாஹு தஆலா குர்ஆனிலே நபி நாயகத் தை " திக்றுல் ஆலமீன் "யென்று திருவுளமாயிருக்கிறன். இன் னும் முன்னுள்ள நபிமார்களெல்லாம் "ஆண்டவனே! எங்களுக்கு நபிபட்டம் வேண்டாம். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்தில் எங்களை தாக்கலாக்கிவை என்று துஆக் கேட்டிருக்கிறர்கள். அப்பேர்ப்பட்ட வுயர்ந்த தீன் மார்க்க மல்லவா, இஸ்லாம். அந்த தீன்மார்க்கத்தில் உள்ள மூமி னன பேர்களே நாமெப்படித் திகிர் செய்யவேண்டும் யோசித்துப் பாருங்கள்.

ஈமானுள்ளவர்களே! நல்வணக்க முள்ளவர்களே! நன்ன டத்தை யுள்ளவர்களே! நீங்கள் நன்ருக ஆலோசியுங்கள். நமது

நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை, அல்லாஹு தஆலா ஹதீது குதுஸியில் "லவுலாக்" என்று மிகவும் புகழ்ந்திருக்கின்ருன். அப்படி அல்லாஹு தஆலா புகழ்ந்திருக்கிற நபி நாயகத்துடைய தீன் மார்க்கத்திலாய் அவர்களின் கலிமாவை ஓதுபவர்களாகிய நாம், எப்படிப் புகழ வேண்டும். ஆனபடியினுல் மூமினுன பேர்களே, இந்தக் கிதாபை வாங்கி வைத்துக் கொண்டு இரண்டு றக்க அத்து நபிற்ருெழுது பின்னர் தினந்தோறும் வழமையாக ஓதிவந்தால், உங்களுக்கு மேலெழுதிய பிரயோசனமும் கிடைத்து, கியாமநாளில் அல்லாஹு தஆலாவுடைய தீதாறும், நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ஷபா அத்தும்கிடைக்கும். நாயகத் தனத்திற்கும் நாயகத்தனமாகிய ஆண்டவனே! நீ எல்லாருக்கும் மேலெழுதிய பலாபலன்களைப் பெறும் படியாக உதவிசெய்வாயாக! ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

## றிவாயத்து.

நூறுநாமா வென்னும் கிதாபில் சொல்லப்பட்டிருப்பது யாதெனில், அல்லாஹு தஆலா பூர்வீகத்தில் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒளியைப் படைத்து, அவ்வொளியைப் பார்த்து:—என்னுடைய ஒளிவுந் தெளிவு முள்ள ஜோதியே! உன்னைக்கொண்டு நான்பதினெண்ணுயிரம் ஆலத்தையும் அதிலுண்டான படைப்புகளையும், ஆதமையும் ஹவ்வாவையும் உண்டாக்கிச் சகல காரணங்களையும் விளைவிப்பேனென்று சொன்னுன். பின்னர் அவ்வொளியைப் பார்த்து ஸுஜூது செய்யச் சொன்னுன். உடனே அவ்வொளி அல்லாஹு தஆலாவுக்கு ஸுஜூது செய்தது. அது கண்டு அல்லாஹு தஆலா ஒளியைப் பார்த்து என்நாட்டமுந் தேட்டமும் நீயே அல்லாமல் வேருென்று மில்லையென்று திருவுளமானுன்.

பின்னர், அல்லாஹு தஆலா தன்னுடைய கிருபையினுல் ஏழு கடலைப் படைத்தான். அதில் 1-வது அறிவென்னுங் கடல் 2-வது ஹக்குஎன்னுங் கடல், 3-வது ஸபர்என்னுங் கடல், 4-வது ஐபென்னுங் கடல், 5-வது பக்றுவென்னுங் கடல், 6-வது நிஃமத்தெனுங் கடல், 7-வது ஒளியென்னுங் கடல். இவ்விதம்ஏழு கடலையும்படைத்து, ஒவ்வோர் கடலும் அந்த வொளியை எழுபதி

ணுயிரம் வருஷம் வைத்துப் பின்னர் அந்த வொளியைத் தன் குத றத்தினுல் மயில் வடிவமாக்கினுன். பின்னர், அம்மயிலை ஹைபத் என்னும் பார்வையினுல் பார்த்தான். அப்பார்வையினுல் மயில் நடுங்கினது. அந்த நடுக்கத்தினுல் மயிலினுட லெல்லாம் வியர்த்து இலட்சத்திருபத்து நான்காயிரம்துளிகள் விழுந்தது. இத்துளிகளிலிருந்து, மூந்நூற்றுப் பதிமூன்று துளிகள் வெவ் வேருகப் பிரிந்து நின்றன. அந்த துளிகளினுல் முந்நூற்றுப் பதின்மூன்று மூர்ஸலான நபிமார்களையும், மற்ற துளிகளினுல் மற்ற நபிமார்களையும் படைத்தான்.

பின்னர், மயிலின் வலது கண்ணிலிருந்து இரண்டு துளிவிழுந் தன. அதிலொரு துளியினுல் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தையும், மறு துளியினுல் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின்னர் மயிலின் இடது கண்ணிலிருந்து இரண்டு துளி விழுந்தன. அதிலொரு துளியினுல் இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாத்தையும் மறு துளியினுல் இஸ்ருபீல் அலைஹிஸ்ஸலாத்தையும் படைத்தான்.

பின்னர்மயிலின்வலது காதிலிருந்து இரண்டு துளிவிழுந்தன. அதிலொரு துளியினுல் லவ்ஹுல் மஹ்பூலையும், ஒரு துளியினுல் கலமையும் படைத்தான். பின்னர் மயிலின் இடது காதிலிருந்து இரண்டு துளி விழுந்தன. அதிலொரு துளியினுல் அர்ஷையும் மறு துளியினுல் குர்ஸையும் படைத்தான். பின்னர் மயிலின் மூக் கிலிருந்து இரண்டு துளி விழுந்தன. அதிலொரு துளியினுல் சுவர்க் கத்தையும் ஒரு துளியினுல் நரகத்தையும் படைத்தான். பின்னர் மயிலின் புருவத்திலிருந்து இரண்டு துளி விழுந்தன. அதிலொரு துளியினுல் பொழுதையும், ஒரு துளியினுல் பிறையையும் படைத் தான். பின்னர் மயிலின் வலது கையிலிருந்துஐந்து துளி விழுந்தன. அதில் 1-வது துளியினுல் ஸித்றத்துல் முந்தஹாஎன்னும் மரத் தையும், 2-வது துளியினுல் தூபாவென்னும் மரத்தையும், 3-வது துளியினுல் ஹவ்லுல்கவ்தர் எனும் ;தடாகத்தையும், 4-வது துளி யினுல் ஏழுவானம் ஏழு பூமிஅவைகளிலுண்டான படைப்புகள் யாவையும் 5-வது துளியினுல் எறும்பு முதல் யானை ஈருகவுள்ள எண்பத்துநாலு நூறாயிரம் ஜீவ ஜந்துக்களையும் படைத்தான்.

பின்னர், மயிலின் இடது கையிலிருந்து ஐந்துதுளிவிழுந்தன அதில் 1-வது துளியினுல் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய

கையில் பிடிக்கும் அஸாகோலையும், 2-வது துளியினல் சுலைமான் நபியவர்களுடைய முத்திரை மோதிரத்தையும், 3-வது துளியினல் ஸூறென்னும் குழலையும், 4-வது துளியினல் வானத்தில்இடிக்கிற இடியையும், 5-வது துளியினல் மின்னலையும் படைத்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் வேறோர் கிதாபில் சொல்லியிருப்பது யாதெனில் அல்லாஹுத் தஆலா வானம், பூமி, அர்ஷு, குர்ஸு, லவ்ஹு, கலம், சுவர்க்கம், நரகம், மலக்குகள், ஜின்கள், மனிதர்கள், நபிமார்கள் முதலிய சகல படைப்புகளையும் உண்டாக்குகிறதற்கு முன்னே ஆதியில் நபிகள்நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஒளியை உண்டாக்கி அவ்வொளியைத் தன் குத்ரத்தை கொண்டும், தன்னுடைய பெருமையான முஷா ஹிதாவும், தஸ்பீஹும், ஸிஜிதாவும், தாவாபுஞ் செய்து கொண்டு மிருக்கு ம்படியாய் ஒளியினல் அநேக திரைகளை உண்டாக்கி அத்திரைகளுக்குள் வைத்தான். அப்படியேஒளிவு ஆயிரம் வருஷம் தவாபும், முஷாஹிதாவும், தஸ்பீஹும் செய்து கொண்டிருந்தது.

தஸ்பீஹு செய்த, அந்த கால அளவு, பூலோக வருஷம் ஆயிரம், அவ்வருஷத்திற் கொருநாளாக இருக்கும். இவ்விதம் நீண்டநாளையும் நீண்ட மாதத்தையுங் கொண்ட வருஷமாயிருந்தது. அதில்அதுபன்னீராயிரம வருஷமிருந்ததாயும், கோடிவருஷமிருந்ததாயும்,எத்தனையோகாலமிருந்ததாயும், பலறிவாயத்துக்கள் வந்திருக்கின்றன. இதைஹதீதைக்கொண்டும், தஹாயிக்குல் அக்பர் என்னுங் கிதாபிலும் அறியலாம்.

## றிவாயத்து.

அல்லாஹு தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஒளியை மயில் வடிவாகச் செய்து, வெண்முகத்தினல் திரைகளுண்டாக்கி, அத்திரை களுக்குள் மயிலை வைத்துப் பின்னர், ஷஜாத்துல் எக்கீனென்கிற மரத்தை யுண்டாக்கி, அதற்கு நான்கு கொப்புகளையும் உண்டாக்கி, அதிலே மயிலை இருக்க வைத்தான். அம்மரத்தில் மயில் 70,000 வருஷம் அல்லாஹு தஆலாவை தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தது.

பின்னர், அல்லாஹு தஆலா வெட்கமென்னும் கண்ணுடியை உண்டாக்கி அந்த மயிலுக் கெதிரில் வைத்தான். அக்கண்ணுடியை மயிலானது பார்த்தது. அதிலே மயில் தன்னுடைய வடிவையும் மிகுத்த அழகையும்கண்டு வெட்கித்து, அல்லாஹு தஆலாவுக்கு ஐந்து ஸுஜூது செய்தது. அந்த ஐந்து ஸுஜூது நாயகம் பேரில் பர்லாயிற்று. அந்த பர்லு எவ்விதமானல் அவ்வைந்து ஸஜ்தாவையும், அல்லாஹு தஆலா அவர் பேரிலும், அவருடைய உம்மத்துகள் பேரிலும், ஐந்து நேரத் தொழுகையாக கட்டளையாக்கி உத்திரவு செய்தான்.

பின்னர் அல்லாஹு தஆலா அந்த மயிலைப்பார்த்து, என்னுடைய ஒளியாகிய மயிலே! உன்னுடைய நான்கு பக்கத்திலும் பாரென்று சொன்னான். அப்படியே மயில் பார்த்தது. அப்போது, தனக்கு முன்னால் ஓர் ஒளியும், பின்னால் ஓர் ஒளியும் வலது பக்கத்தில் ஓர் ஒளியும் இடது பக்கத்தில் ஓர் ஒளியுமாக இருக்கக்கண்டது. அந்த நான்குஒளியும் மாகிறது நான்கு பேர்களின் ஒளியாகும். பின்னர் அந்த மயில் வடிவாகிய ஒளியானது 70,000 வருஷம் அல்லாஹு தஆலாவைத் தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தது. இவ்விதம் ஸெய்யிதுல் கவ்னைன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஒளியாக மயில் இலங்கிக் கொண்டிருந்தபோது அது எத்தனையோ மூச்சுகள் விட்டது. அந்தமூச்சுகளைக் கொண்டும் அல்லாஹு தஆலாநபிமார்கள், ஷஹீதுகள், ஸித்தீக்குகள், ஸாலிஹீன்கள், மூமின்கள் இவர்களுடைய அர்வாஹ்கள் அடங்கலையும், மலக்குகள் அடங்கலையும் மற்றுமுண்டான படைப்புகளடங்கலையும்உண்டாக்கினான்.

இன்னுமொரு ரிவாயத்திற் சொல்லப்படுகிறதுயாதெனில்: அல்லாஹு தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒளியை முத்தாகச்செய்து, அம்முத்தைத் தன்னுடைய குதரத்தானபார்வையைக் கொண்டும்பார்த்தான். அதனால், அம்முத்தானது ணீராய்உருகி ஆயிரம்வருஷம் அலைந்து கொண்டிருந்தது. பின்னர் அல்லாஹு தஆலா அத்தண்ணீரை பத்துபங்காகப் பிரித்தான். அதில் முதற் பங்கினால் அர்ஷையும், இரண்டாம் பங்கினால் குர்ஸையும், மூன்றும் பங்கினால் லௌஹுல் மஹ்பூலும் பலகையையும், நான்காம் பங்கினால் கலத்தையும், ஐந்தாம் பங்கினால் பிறையையும், ஆறும் பங்கினால் பொழுதையும், ஏழாம் பங்கினால், சுவர்க்கத்

தையும், எட்டாம் பங்கினற் நரகத்தையும், ஒன்பதாம் பங்கினல் மலக்குகளையும், பத்தாம்பங்கினல்நபிகள்நாயக முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர் களுடைய அர்ஷையுவாம் படைத்தா னென்று சொல்லப்படுகிறது.

இன்னும் கஸஸுல் அன்பியாவிற் சொல்லப்படுகிறதாவது :— அல்லாஹு தஆலா ஸெய்யிதுல் மூர்ஸலீன், ஹபீபுறப்பில்ஆல மீன் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள் ஒளியை 4-பங்காகப்பிரித்து, அதில்1-வது-வதுபங்கினல் அறு ஷையும், 2 வது பங்கினல் கலத்தையும், 3-வது பங்கினல் சுவர்க் கத்தையும், 4-வது பங்கினல் மற்றப்படைப்புக ளெல்லாவற்றையும் படைத்தான். மறுபடியும், அல்லாஹு தஆலா அந்த நான்கு பங்கு ஒளியிலிருந்து, நான்கு பங்கு ஒளி எடுத்து, அதிலிருந்து ஒரு பங்கு ஒளியில் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களையும் ஒரு பங்கு ஒளியினல் அறிவையும், ஒருபங்கு ஒளியினல் வெட்கத்தையும் ஒரு பங்கு ஒளியினல் இஷ்க்கையும் படைத்தான்.

## றிவாயத்து.

தகாயிக்குல் அக்பர் என்கிற கிதாபிற் சொல்லப்படுகிறது யாதெனில், அல்லாஹு தஆலா அந்த ஒளியாகிய மயிலை உற்றுப் பார்த்தான்- அதனல், மயில் நடுங்கினது. அந்த நடுக்கத்தினல் அதனுடைய சரீரமெல்லாம வியர்த்தது. அப்படி வியர்த்தபோது, மயிலின்தலைவியர்வையினல் மலக்குகள் அடங்கலையும்,முகவேர்வை யினல்அறுஷு, குறுஸு,லவ்ஹுகு, கலம்,பொழுது, பிறை,நட்சத் திரம் முதலாகிய வானத்திலுள்ளவைகள் அடங்கலையும், மார்பின் வியர்வையினல் நபிமார்கள், முர்ஸல்கள், ஆலிம்கள், ஸாலிஹீன் களடங்கலையும், புருவ வியர்வையினல் ஈமான் உடையோர்களையும், காதின் வியர்வையினல் எஹூதிகள், நஸ்ருனிகள், மஜூஸிகள் மற்றக் காபிரீன்களையும், முதுகின் வியர்வையினல் பயித்துல் மஃமூறு, கஃபா, பயித்துல் முகத்தஸ் முதலாகிய மஸ்ஜிதுக ளுள்ள இடங்களையும், கால் வியர்வையினல் எழுவானிலிருந்து படுவான் வரைக்குமுள்ள பூமியையும், பூமியிலுள்ளவை அனைத் தையும் படைத்தான்.

இவ்விதம், அல்லாஹு தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களது ஒளியினால் சகல வஸ்துக்களையும் படைத்தபோது, நபிமார்களுடைய அர்வாஹுகளைப் பார்த்து "லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுற் றஸூலுல்லாஹி" என்ற கலிமாவை ஓதச் செய்தான்.

## றிவாயத்து.

பாவாயிதுல் பதுரியாவில் சொல்லப்படுகிறது யாதெனில்:— அல்லாஹு தஆலா, நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஒளிவுக்கு, மற்ற நபிமார்க ளுடைய ஒளிகளைப் பார்க்கும் படிக்கு உத்திரவு செய்தான்: அப்படி பார்த்தபோது, அந்தப் பார்வையின் ஒளிவு போய், நபிமார்க ளெல்லோருடைய வொளியையும் மூடிக் கொண்டது. அது கண்டு அந்த நபிமார்கள் அல்லாஹு தஆலாவிடம், எங்கள் நாயனே! இது யாருடைய ஒளி? எங்க ளெல்லாவற்றையும் வந்து மூடிக் கொண்டதே என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா அந்த நபிமார்களுடைய றூஹ்களிடம் இது அப்துல்லா வுடைய மகனான முஹம்மதுடைய ஒளிவு, ஆதலால், நீங்கள் யாவரும், இவர் பேரில் ஈமான் கொண்டால் நான் உங்களுக்கு நபிப் பட்டம் கொடுப்பேன் என்று சொன்னான்.

அந்த நபிகள் அல்லாஹு தஆலாவிடம் எங்களாண்டவனே! நாங்க ளெல்லோரும் இந்த முஹம்மது பேரிலும், இவருடைய நபித் தனத்தின் பேரிலும் ஈமான் கொண்டோம் என்று சொன் னார்கள். அது கேட்டு அல்லாஹு தஆலா, நானும் சாட்சியானே னென்று சொன்னான்.

## றிவாயத்து.

அல்லாஹு தஆலா நபிமாருடைய அர்வாஹு மனிதருடைய அர்வாஹுகளடங்கலையும் படைத்தவுடனே எல்லா அர்வாஹு களிடத்திலும் இக்றூர் செய்து கொண்டான். அஃது யாதெனில், எல்லா அர்வாஹுகளையும் அணியணியாக நிறுத்தி, நான் உங்க ளுடைய றப்பல்லவா? என்று கேட்டான். அதற்கு அந்த அர்வாஹு களெல்லாம் அல்லாஹு தஆலாவைநோக்கி நீ எங்களுடைய றப்பு தான். அதை நாங்கள் கபூல் செய்து கொண்டோமென்று இக்றூறு

செய்து கொண்டார்கள். அவர்களில், முந்தி இக்ரூறு செய்தவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களே. அதன் பின்னர் அல்லாஹு தஆலா நபிகள் நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது ஒளியிலிருந்து மனிதர்களுடைய அர்வாஹுகளை உண்டாக்கினுன்.

அதன் பின்னர் அல்லாஹு தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் துனியாவிலெப்படி ரூபம் பெற்றிருந்தார்களோ அப்படியே அவர்கள் ஒளியை உற்பத்தி செய்து தொழுகையில் நிலை நிற்பது போலே நிற்கச் செய்து சிவந்த மாணிக்கத்தினுலொரு கிந்தீலுண்டாக்கி, அந்த கிந்தீலினுல் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மூடி வைத்துப் பின்னர், மற்ற நபிமார்களுடைய அர்வாஹுகளையும், மனிதர்களுடைய அர்வாஹுகளையும் அந்த கிந்தீல் விளக்கைச் சுற்றித் தவாபு செய்து கொண்டிருக்கும்படி கட்டளையிட்டான்.

அப்படி அந்த அர்வாஹுகளெல்லாம் 7,000-வருஷம் அந்த கிந்தீலை சுற்றித் தவாபு செய்து கொண்டிருந்தன. அப்போது அல்லாஹு தஆலா அந்த கிந்தீலின் மூடியைத் திறந்து விட்டு, அர்வாஹுகளை நோக்கி அதைப் பாருங்களென்று சொன்னுன். அவ்விதம் அர்வாஹுகளடங்கலும், அந்த கிந்தீலைப் பார்க்கும்போது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தெரிந்து கொண்டன. ஆனுல் அவ்வருவாஹுகளுடைய கூட்டம் மிகவும் பெருங் கூட்டமான படியால், நபி முஹம்மது முஸ்தபா றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உறுப்புகளில் சிலர் காதையும், சிலர் கண்ணையும், சிலர் கன்னத்தையும், சிலர் மூக்கையும், சிலர் வாயையும், சிலர் தாடியையும், சிலர் பிடரியையும், சிலர் தோளையும், சிலர் கையையும், சிலர் நெஞ்சையும் சிலர் முதுகையும், சிலர் விலாவையும், சிலர் வயிற்றையும், சிலர் முழங்காலையும், சிலர் பாதத்தையும் பார்த்தார்கள்.

அப்போது நபிகள் நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமர்களுடைய தலையைப் பார்த்தவர்கள் கலீபாக்களும், சுல்தான்களுமானுர்கள். நெற்றியைப் பார்த்தவர்கள் நீதமுள்ள அமீர்களானுர்கள். புருவத்தைப் பார்த்தவர்கள் சித்திர மெழுதுகிற

ஓவியர்களானார்கள். காதைப் பார்த்தவர்கள் பணக்கார தவுலத்துக்காரர்களானார்கள். கண்ணைப் பார்த்தவர்கள் வேதத்தை மனப்பாடம் செய்த ஹாபில்களானார்கள். கன்னத்தையும் முகத்தைப் பார்த்தவர்கள் கிலாபத்காரர்களும், அறிவாளிகளுமானார்கள். கையைப் பார்த்தவர்கள் ஹக்கீம்களும், அத்தர்க்காரர்களுமானார்கள். வாயைப் பார்த்தவர்கள் நோன்பிருப்பவர்களானார்கள். உதட்டையும், பல்லையும் பார்த்தவர்கள் அழகான முகத்தையுடையவர்களானார்கள். நாவைப் பார்த்தவர்கள் பாதுஷாக்களிடம் போய்த் தூது சொல்பவரானார்கள். தொண்டையை பார்த்தவர்கள் புனிதமான இஸ்மும், பாங்குஞ் சொல்பவரானார்கள். தாடியைப் பார்த்தவர்கள் பீஸபீல் செய்யும் வீரரானார்கள். பிடரியைப் பார்த்தவர்கள் வர்த்தகரானார்கள். இரண்டு தோள்களையும் பார்த்தவர்கள் கத்தி வெட்டும், அம்பு எய்தலுமுடையவர்களானார்கள். வலது தோளைப் பார்த்தவர்கள் காவிதர்களும், இடது தோளைப் பார்த்தவர்கள் பணங் காசு எண்ணுபவர்களும், இடதுஉள்ளங் கையைப் பார்த்தவர்கள் பாதுஷாக்களுடைய ஹுகும்படி வெட்டுபவர்களுமானார்கள். வலது உள்ளங்கையைப் பார்த்தவர்கள் அளக்கிறவர், நிறுத்துவரானார்கள். உள்ளங்கை இரண்டையும் பார்த்தவர்கள் கிலாபத்துகளும் சகல அலுவல்களும் செய்பவர்களானார்கள். புறங்கை இரண்டையும் பார்த்தவர்கள் இரக்கமில்லாத பகீல்களானார்கள். வலது கை விரல்களைப் பார்த்தவர்கள் தைரியக்காரர்களானார்கள். நெஞ்சைப்பார்த்தவர்கள் ஆலிம்களும் இமாம்களாகிய முஜ்தஹிதுகளுமானார்கள். முதுகைப் பார்த்தவர்கள் தாழ்மையுள்ளவர்களும் ஷரீஅத் உடைவர்களுமானார்கள். விலாபக்கத்தைப் பார்த்தவர்கள் அல்லாவுக்காக பீஸபீல் சண்டை செய்பவரானார்கள். வயிற்றைப் பார்த்தவர்கள் அல்லாஹு தஆலா கொடுத்த மட்டுமுள்ள புசிப்பை போதுமென்கிறவர்களும், உலக ஆசையை நீக்குபவர்களுமானார்கள். முழங்கால்களைப் பார்த்தவர்கள் ருக்கூவும் ஸுஜூதும் செய்பவர்களானார்கள். பாதங்களைப் பார்த்தவர்கள் வேட்டையாடுகிறவர்களானார்கள். உள்ளங்கால்களைப் பார்த்தவர்கள் மிகவும் நடப்பவர்களானார்கள். குதிக்கால்களைப் பார்த்தவர்கள், வீணை, தம்பூரு, பிட்டில், சித்தார், டோல், முதலிய மேளதாள முழக்குஞ் செய்பவர்களானார்கள். முஹம்மது

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் திரும்பிப் பாராதிருந்தவர்கள், எஹூதி, நஸாரு முதலிய காபிரீன்களும், மதமாச்சரிய தீயதன்மையுள்ளவர்களுமானார்கள். இவ்விதம் தகாயிக்குல் அக்பாரில் சொல்லப்பட்டிருக்கிறது.

## றிவாயத்து.

நூர்நாமா என்ற கிதாபிற் சொல்லியிருக்கிறதாவது:—ஒரு சமயம் ஸெய்யிதுல் முர்ஸலீன் நபிகள் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தங்கள் புத்திரி பீபீ பாத்திமத்துஸ் ஸுஹறா காத்தூனே ஜன்னத் அவர்கள் வீட்டிலிருக்கையில், ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வஹி கொண்டு வந்து, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டு வாசலில் நிற்பதை, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா கண்டு, ஜிபிரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை "வாருங்கள், சிறிய தகப்பனாரே' அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஸலாம் சொல்லி அருமையாக அழைத்தார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் யாதொன்றும் ஜவாபு சொல்லாமல் நின்றூர்கள் அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து, நான் உங்களுக்குச் சொன்ன ஸலாமுக்கு ஜவாபு சொல்வது உங்கள் பேரில் வாஜிபாயிருக்க, நீங்கள் ஏன் ஜவாபு சொல்லாமல் சும்மா நிற்கிறீர்களென்று கேட்டார்கள். அதற்குப், பின் ஜிபுரீல் அலைஹஸ்ஸலாமவர்கள் ஜவாபு சொல்லிவிட்டு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப் பார்த்து, நான் உமது தகப்பனார் அவர்களுக்கு வயதால் மூப்பாயிருக்க, நீசென்னை 'வாருங்கள் சிறிய தகப்பனாரே' என்றழைத்த படியால், நான் ஸலாமுக்கு ஜவாபு சொல்லாமற் சும்மா நின்றேனென்று சொன்னார்கள். அதுகேட்டு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து, நான் போய் இவ்விஷயத்தை என் தகப்பனாரவர்களுக்கு தெரிவிக்கிறேனென்று சொல்லிக்கொண்டு நிற்கும்போது, அவ்விடம், நபிகள் நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வந்தார்கள். அவர்களிடம், பீபி பாத்திமா நாயகி இங்கே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் தங்களுக்கும் நடந்த சங்கதிகளைச் சொன்னார்கள்.

அதுகேட்டு நபிகள் நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து, ஜிபுரீலே! நீர் எனக்கு வயதால் மூதிர்ந்தவரென்பதற் கென்ன அதிசயத்தைத் தெரிந்திருக்கிறீரென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நாயகமவர்களைப் பார்த்து, நானொரு அதிசயத்தைத்தெரிந்திருக்கிறேனென்று சொன்னார்கள். அப்போது நபி நாயகம் அவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப்பார்த்து, நீர் தெரிந்திருக்கிற அதிசயமென்னவென்று கேட்டதற்கு, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வடபுறத்தில் ஓர்நக்ஷத்திரமுதயமாகி 70,000 வ்ருஷம் மறையாமலிருந்து பின்னர் மறைந்து போகும். இவ்விதம் 70,000 தரம் கண்டிருக்கிறேனென்று சொன்னர்.

அதுகேட்டு, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமைப் பார்த்து இப்போது அந்த நக்ஷத்திரத்தைகண்டால் முன்னர் கண்டதென்றும், அதல்லவென்றும் சொல்வீராவென்று கேட்டதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், ஆம் சொல்வேனென்று சொன்னார்கள். உடனே, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தங்கள் தலைப்பாகையை கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு, தலையைக் காண்பித்தார்கள். அந்த முபாரக்கான அர்ஷாகிய தலையை ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பார்த்த போது உச்சந்தலையில் அந்த நக்ஷத்திரம் இலங்கிக்கொண்டிருக்கக்கண்டு, மிகுந்த ஆனந்தப்பரவசமாகி கட்டியணைத்து முத்தமிட்டு, தாஜுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பார்த்து, அல்லாஹ்வுடைய றஸூலே, இதில் மூன்றடையாள மிருந்தனவே, அவைகளை இப்போது காணோமே யென்று சொன்னார்கள்.

அது கேட்டு, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து, என்னுயிர்த் தோழராகிய ஜபுரீலே! அஃதென்னென்ன அடையாளஞ் சொல்லுமென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள, நபிநாயக மவர்களைப் பார்த்து, யாறஸூலல்லாவே! இந்த நக்ஷத்திரத்துடைய தலையில் தாஜென்னுந் தொப்பியும், இரண்டு காதில் இரண்டு முத்துகவச குண்டலமும், கழுத்தில்

இரத்தின பதக்கமுமிருந்ததென்று சொன்னார்கள். அது கேட்டு நபிநாயகமவர்கள் ஜிபுரீலவர்களைப்பார்த்து, ஜிபுரீலே! தலையிலிருந்ததாஜ் அலிறலியல்லாஹு அன்ஹுவும், இரண்டு காதிலிருந்த முத்துகவச குண்டலம் இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹும், இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹும், கழுத்திலிருந்த இரத்தின பதக்கம் பீபிபாத்திமா நாயகியுமாவர்என்று சொன்னார்கள். அது கேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மிகவும் மரியாதை செய்தார்கள்.

அப்போது நபிகள்நாயகமவர்கள் ஜிபுரீலவர்களைப் பார்த்துச் சொன்னார்கள் :—ஜிபுரிலே! அல்லாஹு தஆலா, ஆதியில் முதலில் ஒளியினால் 10-கடலை உண்டாக்கினான். அதில் 1-வது அறிவென்னுங் கடல். 2-வது நற்செய லென்னுங் கடல். 3-வது ஆசை யென்னுங் கடல். 4-வது ஸலா மென்னுங் கடல். 5-வது பயமென்னுங்கடல். 6-வது பொறுமையென்னுங் கடல். 7-வது இஷ்க் என்னுங் கடல். 8-வது ஹயா வென்னும் கடல். 9-வது எம்மைத்தன மென்னுங் கடல். 10-வது புதுமை யென்னுங்கடல். இவ்விதமாகப் படைக்கப்பட்ட கடல் ஒவ்வொன்றிலும், அந்த ஒளி ஐம்பதைம்பதாயிரம் வருஷம் ஸுஜூது செய்து கொண்டிருந்து, பின்னர் அந்தஒளி கடல்களை விட்டும்வெளியே வந்தது. அப்படிவெளிவந்த ஒளியானது, அல்லாஹு தஆலாவுடைய குத்றத்தினால் அசைத்தது. அப்போது, அந்த அசைவிலிருந்து லக்ஷத்திருபத்துநான்காயிரம் துளிகள்விழுந்தன. அந்தத் துளி ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் நபிமார்களானார்கள். பின்னர் இரண்டாவதுமுறை அந்தவொளி அசைத்தது. அப்போது அதனுடலிலிருந்து விழுந்த துளிகளினால் மலக்குகளானார்கள். பின்னர், மூன்றாவதுமுறை அவ்வொளி தனதுசிரசை அசைத்தது. அச்சிரசிலிருந்து முந்நூற்றுப் பதின்மூன்று முர்ஸலான நபிமார்களானார்கள். பின்னர், நான்காவதும், அந்த ஒளியின்நெற்றியிலிருந்து ஓர் துளி விழுந்தது. அத்துளியினால் அர்ஷு படைக்கப்பட்டது. அவ்வர்ஷினுடைய வலுப்பம் எப்போர்பட்டதானால் ;—அல்லாஹு தஆலா அறுஷினுடைய வாசற்படியில் ஸ்தாபித்திருக்கும் பலகையின் பேரில் கலிமாவை எழுதும்படி கலத்துக்குஉத்திரவு செய்தான். அப்படியே கலம் முதலில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி, என்றெழு

தினது. ஆனால் இவ்விதம் கலிமாவை எழுத கலத்துக்கு நான்கு நூறு வருஷஞ் சென்றது என்று ஒரு ரிவாயத்தில் சொல்லப்படுகிறது. அந்த கலம் "லா இலாஹ இல்லல்லாஹு" வரைக்கும் எழுதின பிறகு அல்லாஹு தஆலாவைப் பார்த்து யாறப்பல் ஆலமீன்! நீ ஒப்புவமை இல்லாதவனாக இருக்கிறாய்! அப்படியிருக்க உன் பேருடனே முஹம்மதென்று மருவுதலான பெயரை எழுதச் சொல்கிறாயே அவர் யாரென்று கேட்டது.

அதற்கு அல்லாஹு தஆலா திருவுளமானான்:—ஏ கலமே! அவர் என்னுடைய மக்பூலான ஹபீபாக இருக்கிறார். ஆதலால் நீ அவருடைய பெயரை எழுதென்று சப்தத்துடனே உத்திரவு செய்தான். இவ்வித உத்திரவு பிறந்தவுடனே கலம் அல்லாஹு தஆலாவுக்குப் பயந்து, அப்பயத்தினால் கலத்தினுடைய நுனி இரண்டாகப் பிளந்து முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்றெழுதினது. இவ்விதம் லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்கிற கலிமாவை அர்ஷினுடைய வாசற்படிமேல் பாரிசத்திலெழுதினது. பின்னர், அல்லாஹு தஆலா அந்த அர்ஷுக்குப் பதினெண்ணாயிரம் புரிசை உண்டாக்கினான். அப்புரிசு ஒவ்வொன்றுக்கும் பதினெண்ணாயிரம் தூண்களை நிறுத்தினான். அத்தூண் ஒவ்வொன்றுக்கும் பதினெண்ணாயிரம் கங்கூரு என்னுஞ் செவந்தமாணிக்கக் கற்களை வைத்தான். அந்தக் கங்கூரு ஒன்றுக்கொன்று எழுபதினாயிரம் வருஷத் தொலையாக இருக்கும். இதில் ஒவ்வோர் கங்கூருவுக்கு மேலே பதினெண்ணாயிரம் கிந்தீல்களை வைத்தான். அந்த கிந்தீல்களினுடைய பருமனாகிறது ஒவ்வோர் கிந்தீலினுள்ள ஏழு வானத்தையும், ஏழு பூமியையும், அவைகளிலுள்ள வஸ்துகளடங்கலையு மெடுத்து வைத்தால், அவைகள் ஓர் பெரிய மைதானில் மானிடர்கள் கைவிரலில் அணியும் ஓர் மோதிரம் விழுந்து கிடந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கும்.

இவ்விதம் மகத்தான அர்ஷை, அல்லாஹு தஆலா உண்டாக்கி அதைஎடுக்கும்படி நான்கு மலக்குகளை யுண்டாக்கினான். அவர்களிலொருவருக்கு மனிதருடைய முகமும் ஒருவருக்குப் புலியினுடைய முகமும், ஒருவருக்குப் பசுவினுடைய முகமும், ஒருவருக்குக் கழுதையுடைய முகமுமாகச் செய்தான். அந்த மலக்குகள்

நான்கு பேருடைய பருமன் யெவ்வளவென்றால் தலைகள் அர்ஷிலும், கால்கள் ஏழுபூமிக்குக்கீழே தஹ்தஸ்ஸறாவிலும் உறிஞ்சிக் கொண்டிருக்கும். இன்னும் அம்மலக்குகள்நடக்கவேண்டிக் காலடியெடுத்துவைத்தால் ஒரு காலுக்கொரு காலிடையில் ஏழாயிரம் வருஷத்து அடிப்பாட்டின் தொலைதூரமாக இருக்கும். இப்பேர்ப் பட்ட மலக்குகள் நான்குபேர்களையும் பார்த்து, உங்கள் தோளின் மேல் அர்ஷைத் தூக்கி வைத்துக்கொள்ளுங்களென்று அல்லாஹு தஆலா கட்டளை செய்தான்.

பின்னர் அந்தவொளியின் வலது சுல்பாவிலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால் அல்லாஹு தஆலா தகத்தை உண்டாக்கினான். பின்னர் அந்த ஒளியின் இடது சுல்பாவிலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால் அல்லாஹு தஆலா குரிசை உண்டாக்கினான். பின்னர் அந்த ஒளியின் வலது கன்னத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால் அல்லாஹு தஆலா கலமைப்படைத்தான். பின்னர் அந்த ஒளியின் இடது கன்னத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அந்த துளியினால் அல்லாஹுதஆலா லஹுகுல் மஹ்பூலையுண்டாக்கினான். பின்னர் அந்தஒளியின் வலது புருவத்திலிருந்து இரண்டுதுளிகள் விழுந்தன. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹு தஆலா பைத்துல் முகத்தஸையும், மற்றோர்துளியினால் கஃபத்துல்லாவையு முண்டாக்கினான். பின்னர் அந்த வொளியின் இடது புருவத்திலிருந்து இரண்டு துளிகள் விழுந்தன. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹு தஆலா பைத்துல் மஃமூறையும் மற்றோர் துளியினால் நபிமார்களுடைய அர்வாஹுகளையும் படைத்தான். பின்னர் அந்த வொளியின் வலது கண்ணிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தன. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹு தஆலா, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமையும், மற்றோர் துளியினால் மீக்காயில் அலைஹிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின்னர் அந்த ஒளியின் இடதுகண்ணிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தன. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹு தஆலா இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமையும் மற்றோர் துளியினால் இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாமையும் படைத்தான். பின்னர் அந்த ஒளியின் வலது காதிலிருந்து ஒரு துளி விழுந்தது. அந்தத் துளியினால் அல்லாஹு தஆலா, ஏழு வானத்தையும் படைத்தான். அவ்வானங்களின் சிறப்பைப கஸஸுல் அன்பியா

வென்னுங் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிற படியால் இவ்விடத்தில் விவரித்துச் சொல்லவில்லை.

பின்னர் அல்லாஹு தஆலா குரிஸின் கீழே ஒரு முத்தை உண்டாக்கினன். அது இன்னேர் றிவாயத்தில் மாணிக்க மென்றும் சொல்லப்படுகிறது. அம்முத்து 500-வருஷ அடிப்பாட்டின் நீளமும், 50-வருஷ அடிப் பாட்டின் அகலமும் வுள்ளதா யிருந்தது. அதை அல்லாஹு தஆலா தன்னுடைய குத்றத்தான பார்வையைக் கொண்டு பார்த்தான். அப்போது முத்தானது அல்லாஹு தஆலாவுடைய பெருமையான அச்சத்தினுலும் பயத்தினைலும் உருகித் தண்ணீராய்ப் போனது. இதல்லாமல் இன்னும் அல்லாஹு தஆலா நான்கு, காற்றுகளைப் படைத்தான். அவைகளில் ஒன்று மேல் காற்றும், ஒன்று கீழ் காற்றும், ஒன்று வடகாற்றும், ஒன்று தென்காற்று மாயிற்று. அக்காற்றுகள் நான்கையும் அல்லாஹு தஆலா பார்த்து, முதலில் அம்முத்தை உருகத் தண்ணீரினுடைய நான்கு பக்கங்களிலும் வைத்து தண்ணீருக்கு மேல் வீசி அடிக்கும்படி உத்திரவு செய்தான். அவ்விதம் நான்கு பக்கக் காற்று தண்ணீரின் மேல் வீசியடித்த போது அதில் அலை உண்டாயிற்று. அவ்வலைகளில் நுரை உண்டாயிற்று. அந் நுரையில் சூடுண்டாயிற்று. அச்சூட்டிற் புகையுண்டாயிற்று. அப்புகையானது தண்ணீருக்கு மேலும் குருசுக்குக் கீழுமாகி நின்றது.

பின்னர் அல்லாஹு தஆலா, அப்புகையைப் பிளக்கும் படியாக உத்திரவு செய்தான். உடனே புகை தானகப் பிளந்து ஏழு துண்டாயிற்று. இதில் ஒரு துண்டு தண்ணீரும், ஒரு துண்டு இரும்பும், ஒரு துண்டு வெள்ளியும், ஒரு துண்டு பொன்னும், ஒரு துண்டு முத்தும், ஒரு துண்டு மாணிக்கமுமாயின. அப்போது அல்லாஹு தஆலா, அந்த தண்ணீரினுல் முன் வானத்தையும், செம்பினுல் இரண்டாம் வானத்தையும், இரும்பினுல் மூன்ரும் வானத்தையும், வெள்ளியினுல் நான்காம் வானத்தையும், பொன்னினுல் ஐந்தாம் வானத்தையும், முத்தினுல் ஆரும் வானத்தையும், மாணிக்கத்தினுல் ஏழாம் வானத்தையும் படைத்தான். இவ்வானங்கள் ஒவ்வொன்றின் அகலம் 500-வருஷ அடிப்பாடும், கனம் 500-வருஷ அடிப்பாடும், ஒவ்வொன்றுக்கிடையில் 500-வருஷ

அடிப்பாடுமாய் இருக்கும். அவைகளி லெல்லாம் மலக்குகளே இருக்கிறார்கள்.

பின்னர் அவ்வொளியினிடது காலிலிருந்து 7-துளிகள் விழுந்தன. அதைக் கொண்டும் அல்லாஹு தஆலா, ஏழுபூமியையு முண்டாக்கினன். அஃதெவ்விதமெனில்; மேலே சொல்லியபடி மாணிக்கமானது உருகித் தண்ணீராய், அத்தண்ணீரின் மேல் நான்கு காற்றும் அடித்தபோது உண்டான நுரையில் எள்ளளவு சிவந்த மண்ணுண்டாயிற்று. இப்படித் தண்ணீர் நுரையிலே எள்ளளவு சிவந்த மண் உண்டான ஸ்தலம் எதுவென்றால் இப்போது மக்கமாநகரத்தில் கஃபத்துல்லா இருக்கிறதே அவ்விடமா யிருக்கும்.

அப்போது அல்லாஹு தஆலா ஜிபுரீல், மீக்காயீல், இஸ்ருபீல், இஸ்ருயீல் ஆகிய இந்த நான்கு மலக்குகளின் தலைவரையும் அழைத்து, அம்மண்ணினுடைய நான்கு மூலைகளையும் பிடித்து இழுக்கும்படி யுத்தரவு செய்தான். அதுபோலவர்கள் பிடித்திழுத்தார்கள். அப்போது எள்ளளவா யிருந்த அந்த மண் விரிந்து பூமி முழுதுமாயிற்று. இவ்விதம் பூமியானது தண்ணீர் நுரையின் பேரிலிருப்பதால் அசையாதிருக்க பூமியைச் சுற்றி பச்சை மரகதத்தினால் கோஹேகாப் என்ற மலையை யுண்டாக்கினன். அது பூமியை அணைத்துக் கொண்டிருக்கும்படி நிறுத்தினன். அந்தக் கோஹகாப்மலை அணைத்ததினால் இந்தப் பூமி யசையாமலிருக்கிறது.

இன்னும் அந்த கோஹேகாப் மலையினுடைய உயரம் 500-வருஷ அடிப்பாடும், சுற்றிலும் சவுக்கம் 2000 வருஷ அடிப்பாடும் ஆகும். நிறம் பசுமையாகவே இருக்கிறது இவ்விதம் கோஹமலைக்கிருக்கிற பசுமையின் சுடர் முன் வானத்திற்கு மேற் பாய்கிறபடியால் வானம் பசுமை நிறமாகத் தோன்றுகிறது. இன்னும் அல்லாஹு தஆலா அந்த மலைக் கப்புறமாகக் கஸ்தூரியினாலேழு பூமியையும் அதற்கப்புறம் கற்பூரத்தினாலேழு பூமியையும், அதற்கப்புறம் எழுபதினாயிரம் ஜண்டாக்களு முண்டாக்கி நிறுத்தினன். அந்த ஜண்டாக்கள் ஒவ்வொன்றின் கீழே எழுபதினாயிரம் மலக்குகளிருந்து, எக்கோழும் ஹபீபு றப்பில் ஆலமீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமர்களுடைய கலிமாவால் திக்ர் செய்து கொண்டு, அல்லாஹு தஆலாவுடைய நாட்டம் நீங்காம லிருக்கின்றார்கள்.

இன்னும் அல்லாஹு தஆலா அந்த ஜண்டாக்களுக்கு அப்புறம் ஒரு பாம்பை யுண்டாக்கி வைத்திருக்கிறுன். அப்பாம்பினுடைய நீளம் 2000 வருஷ அடிப்பாடுள்ளது. அது அந்தப் பூமி அடங்கலையும் சுற்றிக் கொண்டிருக்கிறது. இன்னும் அந்தப் பூமிக்குக் கீழே அதனேடும் கூடி ஏழு பூமிகள் உண்டா யிருக்கின்றன. அதன் கீழிருக்கிற ஏழாம் பூமியில் மலக்குகளும், ஆரும் பூமியில் இபுலீஸும், இபுலீஸுடைய மக்களும், ஐந்தாம் பூமியில் தேவர்களும் நான்காம் பூமியில் பாம்புகளும், மூன்ரும் பூமியில் ஊர்வனங்களும் இரண்டாம் பூமியில் பரிசுகளும், முதலாவது பூமியில்மனிதர்களுமிருக்கிறுர்கள்.

இன்னும் இதை பற்றி வேறு ரிவாயத்தாகிறது:- பூமி சவுக்கத்திலே யிருக்கிறது. அதுவுந் தவிர இந்தப் பூமி ஏழையும் ஒரு பசுவானது தன் இரண்டு கொம்புக்கு இடையிலே சுமந்து கொண்டிருக்கிறது. அக்கொம்பிரண்டிலும் நாற்பதினுயிரம் கிளைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிற்கிடையில் 500 வருஷ அடிப்பாட்டின் தூரமிருக்கிறது. அந்தப் பசுவோ ஒரு மீன் முதுகின் பேரிலும், அந்த மீன் தண்ணீரின் பேரிலும்மிருக்கின்றன. அத்தண்ணீருடைய ஆழம் நாற்பதினுயிரம் வருஷ அடிப்பாட்டுத் தூரமா யிருக்கிறது. அத்தண்ணீர் ஒரு காற்றின் பேரிலும் அக்காற்று ஓர் இருளின் பேரிலும், அவ்விருள் நாகத்தின் பேரிலும் அந்த நாகம், ஒரு கல்லின் பேரிலும் அந்தக் கல் ஓர் மலக்கினுடைய தலையின் பேரிலு மிருக்கின்றன. அந்த மலக்கு அல்லாஹு தஆலாவுடைய குத்றத்தின்பேரி லிருக்கிறுரென்று சிலர் சொல்லி யிருக்கிறுர்கள்.

அந்த வொளியின் வலது மூக்கிலிருந்து எட்டு துளிகள் விழுந்தன. அதனுல் ஆண்டவன் எட்டு சுவர்க்கத்தைப் படைத்தான். அதில் 1-வது சுவர்க்கம் தாறுல் ஜினன், 2-வது சுவர்க்கம் தாறுஸ்ஸலாம், 3-வது சுவர்க்கம் மவ்வா, 4-வது சுவர்க்கம் குல்து, 5-வது சுவர்க்கம் நகீம், 6-வது சுவர்க்கம் பிர்தௌஸ், 7-வது சுவர்க்கம் அதன், 8-வது சுவர்க்கம் கறூர். இவ்விதப் பெயர் பெற்ற எட்டு சுவர்க்கங்களின் பூமி வெள்ளியினுலும், மணல் பொன்னினுலும், செங்கல்கள் வெள்ளியினுலும், அங்குள்ள மரங்கள் சிலது தங்கத்தினுலும், சிலது கோமேதகங்களி

னலும், அவைகளின் இலைகள் மரகதத்தினலும், பழங்கள் முத்துகளினலு மிருக்கின்றன. அப்பழங்களை தின்ன நாடினல், மரங்கள் தானக வளைந்து வந்து பழங்களை வாயிற் கொண்டு வந்து கொடுக்கும். அதன் தித்திப்பும் ருசியும் நாற்பது நாள்மட்டும் தொண்டையை விட்டு மாருமல் இனித்துக் கொண்டிருக்கும். அம்மரங்களில் பறவைகளு முண்டு. அப்பறவைகள் சிவந்த மாணிக்கத்தினலானது. அவைகளின் சிறகுகள் மரகதத்தினலும், மூக்குகள் முத்தினலு மிருக்கின்றன. அப்பறவைகளின் கறியைதின்ன நாடினல், தானே அறுப்புண்டு நெய்யில் பொரிந்து வாயில் வந்து தின்ன ஏதுவாகும்.

இன்னும் அங்குள்ள பெண்களின் முக அழகுக்குப் பதினலாம் நாள் உதயமாகும் பூரணசந்திரனும் வெட்கும். அவர்களின் பல்லினழகுக்குச் சூரியனும் வெட்குவான். அவர்களுடைய பார்வை கீழ் நோக்கும் பார்வையா யிருக்கும். இன்னும் அவர்கள் தம் புருஷனைத் தவிர வேறொருவரையும் பார்க்கமாட்டார்கள். இன்னும் அப்பெண்களோடு கூடிநாடினலும் நாற்பது நாள் அவர்கள் இன்பம் மனதில் நீங்காதிருக்கும். இன்னும் அவர்கள் அணிந்திருக்கிற ஆபரணங்களோ உவமிப்புக்கடங்காத விதவிதங்களாக இருக்கும்.

இவ்விதம் அழகையுடைய சுவர்க்கங்களில் முதல் சுவர்க்க வாசற்படியில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்னுங் கலிமா எழுதப்பட்டிருக்கும். அந்தச் சுவர்க்கத்தினுள்ளே நபிமார்களும், ஷஹீதுகளும் இருப்பார்கள். 2-வது சுவர்க்கத்தினுள்ளே நன்ருய் ஒளுச்செய்து ஆசை ஆசையுடனே அளவுகடந்து தொழுகிறவர்கள் இருப்பார்கள். 3-வது சுவர்க்கத்தினுள்ளே மிகுந்த இன்பத்துடனே ஸகாத்துச் செய்பவர்களிருப்பார்கள். 4-வது சுவர்க்கத்தினுள்ளே அல்லாஹு தஆலா விலக்காகிய காரியங்களைத் தாங்களும் விலக்காக்கி, அவ்விலக்குகளைச் செய்பவரைக்கண்டால் அதைச் செய்ய வொட்டாமல் விலக்கிக் கொண்டிருந்து, அல்லாஹு தஆலா செய்யச் சொல்லி ஏவினவைகளைத் தாங்களும் செய்து, அவ்விதஞ் செய்யாதவர்களைச் செய்யும்படி செய்கிறவர்களிருப்பார்கள். 5-வது சுவர்க்கத்தினுள்ளே, ஷஹ்வத்தையும் கல்பையும் விலக்கினவர்

களிருப்பார்கள். 6-வது சுவர்க்கத்தினுள்ளே மக்கத்திற்போய் அல்லாவுக்காக ஹஜ்ஜு செய்தவர்களிருப்பார்கள். 7-வது சுவர்க்கத்தினுள்ளே அல்லாஹ்வுக்காக பீஸபீல் செய்தவர்களிருப்பார்கள். 8-வது சுவர்க்கத்தினுள்ளே ஹறாமான செயலைக்கொண்டும் அதின் பார்வையை கொண்டும் மற்றுங்கெட்ட செயலைக்கொண்டும் விலகினவர்களும், தாய் தகப்பன்மார் முதலிய இனத்தார்களை ஆதரித்தவர்களு மிருப்பார்கள்.

இன்னும் அந்த ஒளியினிடது மூக்கிலிருந்து ஏழு துளிகள் விழுந்தன. அதினல் அல்லாஹு தஆலா ஏழு நரகத்தை படைத்தான். அதில் 1-வது நரகம் ஜஹீம், 2-வது நரகம் ஜஹன்னம், 3-வது நரகம் ஸகா, 4-வது நரகம் லயீன், 5-வது நரகம் லஸீ. 6-வது நரகம் ஹாவியா, 7-வது நரகம் ஹத்துமா; இவ்விதப் பெயருள்ள நரகங்களின் கெடுதி எவ்விதமெனில்: அல்லாஹு தஆலா அந்த நரகங்களில் நெருப்பைப் படைத்து ஆயிரம் வருஷகாலமாக அதை ஊதும்படிக்கு மலக்குகளை யேவினுன். அவர்களும் ஊதினார்கள் அப்படி ஊதுவதால் அந்த நெருப்பு வெண்ணிறமானது. பின்னர் ஆயிரம் வருஷம் ஊதினார்கள். அப்படி ஊதினதினுல் அந்த நெருப்புச்செவந்த நிறமானது. பின்னர் ஆயிரம் வருஷ மூதினார்கள். அப்படி ஊதினதினுல் அந்த நெருப்பு இருண்ட கருநிறமானது இவ்விதஞ் செய்யப்பட்ட ஏழு நரகத்தின் கீழே, வயிலென்கிற ஓடை உண்டா யிருக்கிறது. அந்த ஓடையின் கொடூர மெப்பேர்ப்பட்டதானுல் மேற்சொன்ன ஏழு நரகங்களும் அல்லாஹு தஆலாவை நோக்கி 'எங்கள் நாயனே! இந்த வயிலென்னும் ஓடையின் வாடையானது எங்கள் பேரில் தாக்காமல் நீ எங்களைக்காத்துக் கொள்'யென்று நாளொன்றிற்கு எழுதரம் துஆ கேட்கும்.

## றிவாயத்து.

ஒரு நாள் தாஜுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் பேசிக்கொண்டிருக்கும்போது, பூமியும் வானமும் திடுகிடென்றதிர்ந்தன. அவ்வதிர்ச்சியினுல் நபிகள் நாயகமவர்களுடைய மனமும் பதறி உடலுங் குலுங்கி, முகத்தின் நிறமும் வேருனது: அப்போது நபி நாயகமவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப்பார்த்து ஜிபுரீலே! இஃதென்ன காரணமென்று கேட்டார்

கள். அதற்கு ஜிபுரீலவர்கள், நபி நாயகமவர்களைப் பார்த்து முஹம்மதே! அல்லாஹு தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை உண்டாக்குவதற்கு முன்னர் நரகத்தின் கரையில் கிடந்த ஓர் கல்லின் குண்டு உருண்டு நரகத்தினுள்ளே விழுந்தது. அந்தக் குண்டு இன்றைய தினந்தான் நரகத்தின் கீழே போய் விழுந்தது. அதினால் இவ்விதம் பூமியும் வானமும் அதிர்ந்ததென்று சொன்னார்கள்.

அப்பேர்பட்ட நரகங்களில் ஒவ்வொரு வாசற்படியிலும் நெருப்பினால் எழுபதினாயிர மலைகளுண்டு. அம்மலைகள் ஒவ்வொன்றைசுற்றி எழுபதினாயிரம் காடுகளுண்டு. அக்காடுகள் ஒவ்வொன்றிற்குள் நெருப்பினாலெழுபதினாயிரம் வீதிகளுண்டு. அவ்வீதிகள் ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் வீடுகளுண்டு. அவ்வீடுகள் ஒவ்வொன்றிற்குள் எழுபதினாயிரம் வாசற்படிகளுண்டு. அவ்வாசற்படிகள் ஒவ்வொன்றிற்குள் எழுபதினாயிரம் பெட்டிகள் உண்டு. அப்பெட்டிகள் ஒவ்வொன்றிற்குள் நெருப்பினால் எழுபதினாயிரம் இரும்புச் சங்கலிகள் உண்டு. அச்சங்கலிகள் ஒவ்வொன்றிற்கும் மோதிர வளையங்கள் எழுபதினாயிர விதமுண்டு. அம்மோதிர வளையங்கள் ஒவ்வொன்றிலும் எழுபதினாயிரம் விதமான அதாபுகளுண்டு. இன்னும் அதில் எழுபதினாயிரம் விதத் தண்ணீருண்டு. அத்தண்ணீர் ஒவ்வொன்றிலும் எழுபதினாயிரம் விதக் கொதிப்பு உண்டு. அக்கொதிப்பு ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் அதாபுகளுண்டும். அவ்வதாபுகள் ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் கள்ளி மரங்களுண்டு. அக்கள்ளி மரங்கள் ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் விதப்பால் உண்டு. ஒவ்வோர் விதப் பாலில் எழுபதினாயிரம் விதப்பழங்களுண்டு. அப்பழங்கள் ஒவ்வொன்றிற்குள் எழுபதினாயிரம் விதப் பாம்பும், எழுபதினாயிரம் விதத் தேளும், எழுபதினாயிரம் விதக் குளவியுமுண்டு. அப்பாம்புகள் ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் வித அதாபும், அக்குளவிகள் ஒவ்வொன்றில் எழுபதினாயிரம் வித அதாபுகளுமுண்டு. அத்தேள்களில் ஒன்று கொட்டினால் எழுபதினாயிரம் வருஷம்வரை விஷமிறங்காது. அக் குளவிகள் கொட்டினாலும் அப்படிப்பட்ட விஷந்தான். அம்பாம்பின் விஷத்தில் ஒரு துளி பூமியில் விழுந்தால் பூமியெல்லாம் வெந்து சாம்பலாகிவிடும். இவ்வித அதாபுக

னுடைய நரகத்தின் ஆழமும் அகலமும் நீளமும் இவ்வளவென்று சொல்ல முடியாது.

இப்பேர்ப்பட்ட நரகங்களில் முதல் நரகம் குனூஹ்கபீருவென்னும் பெரும் பாவமாகிய பாதகத்தைத் தெரிந்துந் தெரியாமலுஞ் செய்த முஸ்லிமானவர்கள் இருக்குமிடமாகும். 2-வது நரகம் காபிரீன்களிருக்கு மிடமாகும். 3-வது நரகம் யாஜூஜு மாஜூஜு கூட்டத்தார்களிருக்குமிடமாம். 4-வது நரகம் ஷைத்தான்களிருக்கு மிடமாம். 5-வது நரகம் தொழுகை விட்டவரும், ஸக்காத்துக் கொடாதவரும், நோன்புபிடிக்காதவரும், ஹஜ்ஜு செய்யாதவரும், கைறு கைருத்து கொடாதவரு மிருக்குமிடமாம். 6-வது நரகம் எஹூதி, நஸாரு, மஜூஸிஇவர்களிருக்குமிடமாம். 7-வது நரகம் முனாபிக்கு, முஷ்ரிக்கு இவர்களிருக்குமிடமாம். இன்னும் கள்ளு, சாராயம், அபின், கஞ்சா முதலிய குடிப்பவரும், ஹரும் ஸினாச் செய்பவரும், வட்டி வழக்கத்தாரும், கொலைபாதகத்தாரும் மற்றும் கெடுதலாகிய குற்றங்கள் செய்பவருமிருக்கு மிடமாம்.

இன்னும் ஒளியின் காலிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹு தஆலா தஸ்பீஹைப் படைத்தான். மேவாயிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால் அல்லாஹு தஆலா ஆபே ஹயாத்தை படைத்தான். கழுத்திலிருந்து ஒரு துளிவிழுந்தது. அதனால் அல்லாஹு தஆலா பீவி மறியம் அவர்களைப்படைத்தான். பிடரியிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹு தஆலா மேன்மையயான நபிமாரைப் படைத்தான். வலது தோளிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தன. அதில் ஒரு துளியினால் அல்லாஹு தஆலா பொழுதையும், ஒருதுளியினால் பிறையையும் படைத்தான். இடதுதோளிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தன. அல்லாஹு தஆலா அதில், பகலையும் இலவையும் படைத்தான். வலது புஜத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால் அல்லாஹு தஆலா அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் படைத்தான். இடது புறத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால் அல்லாஹு தஆலா உமர் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் படைத்தான். மார்பில் நெஞ்சுப் பரப்பிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹு தஆலா உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் படைத்தான்,

மூக்கிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனல் அல்லாஹு தஆலா அலி கர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களைப்படைத்தான்.

இன்னும், அந்த ஒளியின் நெஞ்சிலிருந்து 10-துளிகள்விழுந்தன. அல்லாஹு தஆலா அதில் முதல் துளியினல் ஆரிபுகளையும், இரண்டாம்துளியினல் ஆபிதுகளையும், மூன்ரும்துளியினல் முத்தகின்களையும், நான்காம் துளியினல் பக்கீர்களையும் ஐந்தாம் துளியினல் ஆலிம்களையும், ஆரும்துளியினல் ஆஷிக்குகளையும், ஏழாம் துளியினல் பீஸபீல் செய்பவர்களையும், எட்டாம் துளியினல் மூமீன்களையும், ஒன்பதாம்துளியினல் ஸாலிஹீன்களையும், பத்தாம் துளியினல் தெளபாச் செய்பவர்களையும் படைத்தான்.

இன்னும் ஒளியின் வலது கையிலிருந்து 10 துளிகள் விழுந்தன. அல்லாஹு தஆலா அதில் முதல்துளியினல் சறுசறென்கிற காற்றையும், இரண்டாம் துளியினல் றப்றப்என்கிற காற்றையும், மூன்ரும் துளியினல் வானத்திடியையும், நான்காம்துளியினல் மின்னலையும், ஐந்தாம் துளியினல் ஸுறென்னும் குழலையும், ஆரும் துளியினல் சுவர்க்கலோகப் பெண்களாகிய ஹுறுல்ஈன்களையும், ஏழாம் துளியினல் சுவர்க்கத்துத் தோழிப் பெண்களையும் எட்டாம் துளியினல் ஸிதுறத்துல் முந்தஹா வென்னும் மரத்தையும், ஒன்பதாம் துளியினல் தூபாவென்னும் மரத்தையும், பத்தாம் துளியினல் சுவர்க்கத்திலுள்ள சகல மரங்களையும் படைத்தான்.

இன்னும், ஒளியின் இடது கையிலிருந்து 10 துளிகள் விழுந்தன. அல்லாஹு தஆலா அதில், முதல் துளியினல், துப்புரவாகிய ஷருபத் ஷருபையும், இரண்டாம் துளியினல்தேனையும், மூன்ரும் துளியினல் பாலையும், நான்காம் துளியினல் ஹவுலல் கவுதரென்னும் நீர்ஊற்றையும், ஐந்தாம் துளியினல்ஏழு சமுத்திரத்தின் நீரையும், ஆரும்துளியினல் எழுபதினயிரம் வித புட்பங்களையும், ஏழாம்துளியினல் எழுபதினயிரம் ஆறுகளையும், எட்டாம் துளியினல் எழுபதினயிரவித வாசனையும், ஒன்பதாம் துளியினல் எழுபதினயிரவித முத்துக்கள் விளையும்சமுத்திரத்தையும், பத்தாம் துளியினல் எழுபதினயிரம்வித ருசிகரத்தையும் படைத்தான்.

இன்னும், ஒளியின் வலது முழங்கையிலிருந்து 5 துளிவிழுந்தன. அல்லாஹு தஆலா அதில், முதற்றுளியினல் வெள்ளியை

யும், இரண்டாம் துளியினற், பொன்னையும் மூன்றும் துளியினல் மூஸா நபியுடைய அஸாவையும், நான்காம் துளியினல் ஸுலைமான் நபியுடைய முத்திரை மோதிரத்தையும், ஐந்தாம் துளியினல் யூஸுபு நபியுடைய அழகையும் படைத்தான்.

இன்னும், ஒளியினிடது முழங்கையிலிருந்து 5 துளிகள் விழுந்தன. அல்லாஹு தஆலா அதில் முதல் துளியினல் இப்ராஹீம் நபியுடைய ஆடுகளையும், 2-ம் துளியினல் சுவர்க்கத்தின் குதிரைகளையும், 3-ம், துளியினல் பறவை ஜாதிகளையும், 4-ம் துளியினல் நாற்கால் ஜந்துக்களையும், 5-ம் துளியினல் ஆதமையும், ஹவ்வாவையும் படைத்தான்.

இன்னும், அவ்வொளியின் வலது முழங்காலிலிருந்து 2 துளிகள் விழுந்தன. அதில், ஒரு துளியினல் அல்லாஹு தஆலா குதுஸையும், மறு துளியினல் ரூஹையும் படைத்தான். இடது முழங்காலிலிருந்து 2-துளிவிழுந்தன. அதில்ஒருதுளியினல் அல்லாஹு தஆலா மீஸானையும், மறு துளியினல் சூரியனையும், நட்சத்திரங்களையும் படைத்தான். வலது கெண்டைக்காலிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினல், அல்லாஹு தஆலா கோஹெகாப்மலையையும் அறபாத் மலையையும் படைத்தான். இடது கெண்டைக்காலிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினல் அல்லாஹு தஆலா ஸிருத்துல் முஸ்தகீம் பாலத்தைப் படைத்தான். வலது குதிக்காலிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினல் அல்லாஹு தஆலா புரூக்கை படைத்தான். இடது குதிக்காலிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினல் அல்லாஹு தஆலா துல்துலைப் படைத்தான். இடுப்பிலிருந்து 4-துளிகள் விழுந்தன. அதில், அல்லாஹு தஆலா முதல் துளியினல் காற்றையும், 2-ம் துளியினல் நெருப்பையும் 3-ம் துளியினல் தண்ணீரையும், 4-ம் துளியினல் மண்ணையும் படைத்தான்.

இவ்விதம், படைத்தான பின்னர், அல்லாஹு தஆலா அவ்வொளியைப் பார்த்து, ஏ வடிவும் வனப்புமுள்ள ஒளியே! நீ இந்த நான்கு வஸ்துக்களினின்றும் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள். அதனலுன்னை துனியாவிலுண்டாக்கி விளக்குஞ்செய்யப் போகிறேனென்று திருவுளமானன். அப்போது, ஷபீஉல் முதுனபீன் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஒளியானது, நெருப்பினிடத்திற்போய் அஸ்ஸலாமு

அலைக்கும் என்றது. அதற்கு நெருப்பு, வஅலைக்கு முஸ்ஸலாம் நூர் முஹம்மதே! என்று ஜவாபு சொன்னது. அப்போது ஒளியானது நெருப்பைப்பார்த்து, நீயாரென்று கேட்டது. அதற்கு நெருப்பு, அல்லாஹு தஆலாவுடைய படைப்புகளில் நான் ஒரு படைப்பு என்று பதில் சொன்னது. அப்போது ஒளி நெருப்பைப் பார்த்து, நீ துனியாவில் என்ன காரியஞ் செய்வாய் என்று கேட்டது. அதற்கு நெருப்பு, ஒளியை பார்த்து, என்மனதில் நினைத்தபடி எல்லாஞ் செய்வேனென்று சொன்னது. அதுகேட்டு, ஒளி நெருப்பைப்பார்த்து, படைக்கப்பட்ட அடியானுகிய உனக்கு ஒரு மனது முண்டுமோ? படைப்பாகிய அடியார்களுக்கு ஐபே ஒழிய, ஐபில் லாதவை யாதொன்று மில்லையே. அப்படி யிருக்க நீ சொல்வதைப் பார்த்தால் உன்னிடத்தில் யாதொரு ஐபுமில்லைபோல் தெரிய வருகிறதே, அப்படியுமுண்டோ, வென்று கேட்டது. அதற்கு, நெருப்பு ஒளியைப்பார்த்து "ஆம் என் இடத்தில் யாதொரு ஐபுமில்லை, அப்படி என்னிடத்தில் என்ன ஐபிருக்கிறதாகத் தோன்றுகிறது சொல்லும் நூர் முஹம்மதே! என்று கேட்டது. அதற்கு நூர் முஹம்மது, நெருப்பைப்பார்த்து, நெருப்பே! உன்னை எழுப்புகிறது காற்று, அவிப்பது தண்ணீர். இவ்வித ஐபு உன்னுக்குள் இருக்க நீ என்னில் யாதாமொரு ஐபுமில்லையென்று சொல்கிருயே என்றது. அப்போது நெருப்பானது ஒளியைப்பார்த்து, நூர்முஹம்மதே! நீர் சொன்னது சரிதான். என்ருலும் உமக்குள்ளே யாதொரு ஐபுமில்லையோவென்று கேட்டது. அதற்கு ஒளியானது நெருப்பைப் பார்த்து நெருப்பே! என்னைப் பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்லாதே. ஏனென்ருல் நான் மிகுந்த ஐபுள்ளவன் ஆனல் ஐபில்லாதவன் அரிய பெரிய நாயகனுகிய அல்லாஹு தஆலா ஒருவனே. மற்றுமுள்ளவை எல்லாம் ஐபுள்ளவை தான். ஆதலால், நெருப்பே நீ கலிமாச் சொல் என்று சொன்னது. அது கேட்டு நெருப்பு உடனே அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹதஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு என்று இந்தக் கலிமாவைச் சொல்லி றஸூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து, மிகுந்த வணக்கம் செய்தது.

பின்னர் ஒளி காற்றினிடத்தில் போய் அஸ்ஸலாமு அலைக்கும் காற்றே என்றது. அதற்கு காற்று, வஅலைக்கு முஸ்ஸலாம் நூர்

முஹம்மதே என்று ஜவாபு சொன்னது. அப்போது ஒளியானது காற்றைப்பார்த்து, நீ யாரென்று கேட்டது. அதற்கு காற்று, அல்லாஹுதஆலாவுடைய படைப்புகளில் நான் ஒரு படைப்பு என்று சொன்னது. அப்போது ஒளி காற்றைப்பார்த்து, நீ துனியாவில் என்ன காரியஞ் செய்வாய்என்று கேட்டது. அதற்குக்காற்று, ஒளியைப்பார்த்து என் மனதில் நினைத்தபடி எல்லாஞ் செய்வேன் என்றது. அதுகேட்டு ஒளி காற்றைப் பார்த்து படைப்புண்ட அடியானாகிய உனக்கு ஒரு மனதுமுண்டோ ?. ஆனால் படைப்பாகிய அடியார்களுக்கு ஐபே ஒழிய, ஐபில்லாதவை யாதொன்றுமில்லை. அப்படியிருக்க, நீ சொல்வதைப் பார்த்தால் உன்னிடத்தில் யாதொரு ஐபுமில்லை போலே தெரிய வருகிறதே அப்படியுமுண்டோவென்று கேட்டதற்குக் காற்று ஒளியைப்பார்த்து ஆம்! என்னிடத்தில் யாதொரு ஐபுமில்லை. அப்படி என்னிடத்தில் என்ன ஐபிருக்கிறதாகத் தோன்றுகிறது சொல்லு நூர் முஹம்மதே! என்று கேட்டது. அதற்கு நூர் முஹம்மது காற்றைப்பார்த்து ஏ காற்றே! எல்லார் முகத்தையும் நீ காண்பாய். உன் முகத்தை யாருங் காணமாட்டார்கள். இவ்வித ஐபு உன்னுள்ளிருக்க, நீ என்னில் யாதாமொரு ஐபு மில்லையென்று சொல்கிறாயே என்றபோது, காற்றானது, ஒளியைப்பார்த்து நூர் முஹம்மதே! நீர் சொன்னது சரிதான், என்றாலும் உமக்குள்ளே யாதொரு ஐபு மில்லையோவென்று கேட்டது. அதற்கு ஒளியானது காற்றைப்பார்த்து காற்றே! என்னைப்பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்லாதே. நான் மிகுந்த ஐபுள்ளவன். ஆனால் ஐபில்லாதவன் அரிய பெரிய நாயனாகிய அல்லாஹுதஆலா ஒருவனே. மற்றுமுள்ளவையெல்லாம் ஐபுள்ளவை தான். ஆதலால் காற்றே! நீ கலிமாச் சொல்லென்று சொன்னது. அது கேட்டு உடனே காற்று "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு" என்று கலிமாவைச் சொல்லி றஸூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த வணக்கம் செய்தது.

பின்னர் ஒளி தண்ணீரிடத்திற்போய் அஸ்ஸலாமு அலைக்கும் தண்ணீரே! என்றது. அதற்குத் தண்ணீர், வஅலைக்கு முஸ்ஸலாம் நூர் முஹம்மதே! என்று ஜவாபு சொன்னது. அப்போது

ஒளியானது தண்ணீரைப்பார்த்து நீ யாரென்று கேட்டது. அதற்
குத் தண்ணீர், அல்லாஹு தஆலாவுடைய படைப்புகளில் நின்
றும் நான் ஒரு படைப்பு என்று சொன்னது. அப்போது தண்ணீ
ரைப் பார்த்து, நீ துனியாவில் என்ன காரியஞ் செய்வாய்? என்று
கேட்டது. அதற்குத் தண்ணீர் ஒளியைப்பார்த்து, என் மனதில்
நினைத்தபடி எல்லாஞ் செய்வேனென்று சொன்னது. அதுகேட்டு
ஒளி, தண்ணீரைப்பார்த்து, படைப்புண்ட அடியானாகிய உனக்கு
ஒரு மனது முண்டோ?. ஆனால் படைப்பாகிய அடியார்களுக்கு
ஐபே ஒழிய ஐபில்லா தவை யாதொன்று மில்லையே அப்படியிருக்க,
சொல்வதைப் பார்த்தால் உன்னிடத்தில் யாதொரு ஐபுமில்லைப்
போலே தெரிய வருகிறதே, அப்படியு முண்டோவென்று கேட்ட
தற்குத் தண்ணீர் ஒளியைப்பார்த்து, ஆம் என்னிடத்தில் யா
தொரு ஐபுமில்லை. .அப்படி என்னிடத்தில் என்ன ஐபிருக்கிற
தாகத் தோன்றுகிறது சொல்லு நூர் முஹம்மதே! என்று
கேட்டது. அதற்கு நூர்முஹம்மது தண்ணீரைப்பார்த்து, ஏ
தண்ணீரே! உன்னிடத்தில் நஜீஸைக் கழுவுவார்கள். இன்னும்
நீ கட்டுப்பட்டு நிற்பாய். அதனால் உன்நிறமுங் குலைந்து நாற்ற
மெடுத்து புழுக்களுண்டாகி மிகவும் கேடுகெட்டுப் போவாயே.
இவ்வித ஐபு உன்னுள்ளிருக்க ஏன்நீ, அகந்தையாக என்னில் யா
தொரு ஐபுமில்லை என்று சொன்னாயே என்ற போது, தண்ணீ
ரானது ஒளியைப் பார்த்து நூர் முஹம்மதே! நீர் சொன்னது
சரிதான். என்றாலும் உமக்குள்ளே யாதொரு ஐபுமில்லையாவென
கேட்டது. அதற்கு ஒளியானது தண்ணீரைப் பார்த்து
தண்ணீரே! என்னைப் பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்
லாதே. ஏனென்றால் நான் மிகுந்த ஐபுள்ளவன். ஆனால் ஐபில்ல
ாதவன் அரிய பெரிய நாயனாகிய அல்லாஹு தஆலா ஒருவனே.
மற்று முள்ளவை யெல்லாம் ஐபுள்ளவைகள் தான். ஆதலால்
தண்ணீரே! நீ கலிமா சொல்லென்று சொன்னது. அது கேட்டு
உடனே தண்ணீர், "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு
வஹ்தஹு லாஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன்
அப்துஹு வரஸூலுஹு" என்று கலிமாவைச் சொல்லி ரஸூ
லுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த வணக்கம்செய்தது.

பின்னர் ஒளியானது மண்ணிடத்திற் போய் 'அஸ்ஸலாமு
அலைக்கும் மண்ணே!' என்றது. அதற்கு மண், வஅலைக்கு முஸ்

ஸலாம் நூர் முஹம்மதே! என்று ஜவாபு சொன்னது. அப்போது ஒளியானது மண்ணைப் பார்த்து நீ யாரென்று கேட்டது. அதற்கு மண், அல்லாஹு தஆலாவுடைய படைப்புகளில் நான் ஒரு படைப்பென்று சொன்னது. அப்போது ஒளி, மண்ணைப் பார்த்து நீ துனியாவில் என்ன காரியஞ் செய்வாய்? என்று கேட்டது. அதற்கு மண்ணானது, ஒளியைப் பார்த்து, நான் மிகவும் எளியவன். அதிலும் படைப்புகளி லெல்லாம் தாழ்மையானவன். ஆதலால் என்னிடத்தில் யாதொரு வல்லமையுமில்லை. அதுவுந்தவிர நான் ஒன்றுஞ் செய்யக்கூடியவனல்ல என்று மிகுந்த தாழ்ச்சியுடனே "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு" என்று கலிமாவைச் சொல்லி றஸூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த வணக்கம் செய்தது. அதுகண்டு, நூர் முஹம்மது மண்ணைக்கட்டி யணைத்து இதே சகலமானவைக்கும் ஆகுமானதென்று தெளிக்தெடுத்துக் கொண்டு போய்விட்டது.

பின்னர் வெகு காலஞ் சென்று, அல்லாஹு தஆலா மலக்குக ளிடம் பூலோகத்தில் நான் ஒரு கலீபாவை உண்டாக்குவேன் என்று சொன்னான். அது கேட்டு மலக்குகள் அல்லாஹு தஆலாவிடம், எங்கள் ஆண்டவனே! அந்த மனிதனை ஏன் உண்டாக்குகிறாய்? மனிதர்களினால் பூலோகத்திலே சண்டை, சச்சரவு, வெட்டு குத்துகள் முதலிய அனேக கெடுதலுண்டாகுமே. நாங்களெல்லாரும் அப்படி யல்லாமல் உன்னுடைய வணக்கங்களிலும், திக்ர், தஸ்பிஹுகளிலும், நற் செயல்களிலும் நீங்குதலில்லாமல் பரிசுத்தமாக இருக்கிறோமே, அது போதாதா வென்றார்கள். அதற்கு அல்லாஹு தஆலா, மலக்குகளை நோக்கி மலக்குகளே! மனிதருடைய செய்திகள் எனக்குத் தெரியுமே யல்லாமல் உங்களுக்குத் தெரியாதென்று சொன்னான். அது கேட்டு, அந்த மலக்குகள் ஒன்றும் பேசாதிருந்தார்கள்.

பின்னர் அல்லாஹு தஆலா தனது ஹபீபாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் படைப்பதற்காக ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை நோக்கி, "நீர் மதீனா முனவ்வரில் போய் மண் எடுத்து வாரும்" என்று உத்திரவுசெய்தான். உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மதீனா முனவ்வரில் போய் இப்போது நபிகள் நாயகமவர்கள் அடங்கி யிருக்கிற தலத்து மண்ணை

எடுத்துக் கொண்டு போய், அம்மண்ணையும் நபிகள் நாயகமவர்களுடைய ஒளியையும் ஒன்றாய்க் கலந்து, அதிலே சுவர்க்கத்திலுள்ள தஸனீ மென்கிற ஊற்றுத் தண்ணீர் விட்டு நன்றாய் பிசைந்தார். ஒளியால் சரீர உற்பத்தி செய்து அச்சரீரத்தை சுவர்க்கத்திலோடுகிற ஆற்றுத் தண்ணீரிலே சில தரம் அமுத்தியமுத்தி எடுத்தார்.

பின்னர் அல்லாஹுதஆலா அச்சரீரத்தை, வானம் பூமி முதலான சகல இடங்களிலும் கொண்டு போய், சகல படைப்பினங்களுக்குக் காண்பிக்கும் படியாய் மலக்குகளுக்கு உத்திரவு செய்தான். அப்படியே மலக்குகள் மூஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஒளியான சரீரத்தை எவ்விடங்களிலும் கொண்டு போய், அங்குள்ள சகல படைப்பினங்களெல்லாம் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய சரீரத்தைக் காணும் முன்னமே நபிகள் நாயகம் மூஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சரீரத்தைக் கண்டு கொண்டனர். பின்னர் அல்லாஹு தஆலா அந்தஒளியாகிய அமானத்தை ஒப்படைக்க வேண்டுமென்று நாடி, அந்த நாட்டத்தை மலக்குகளுக்கு அறிக்கை செய்தான். அம்மலக்குகள் மூஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமர்களுடைய ஒளியை நன்றாக சிங்காரித்து இந்த அமானத்தை யாரேனு மேற்றுக்கொள்ளுங்களென்று சொல்லி, மைதானில் வைத்தார்கள். மலக்குகள் அப்படி மைதானில் வைத்த ஒளியை வானம், பூமியெங்குமுள்ள படைப்பினங்களெல்லாம் பார்த்து இவ்வமானதத்தை எடுத்து ஏற்று சுமக்க எங்களாலாகாதென்று மிகுந்த தாழ்மையுடனே சொல்லிவிட்டன. பின்னர் அவ்வமானத்தை ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய ரூஹானது பார்த்து, இவ்வமானிதத்தை நானேற்றுக்கொண்டேனென்று மிகுந்த இன்பத்துடனே சொல்லி ஏற்றுக்கொண்டது.

பின்னர் அல்லாஹு தஆலா, பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களைப் படைக்கவேண்டுமென்று நாடி, பூமியில் மண் எடுத்துக்கொண்டு வாருமென்று முதலில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலமவர்களுக்கு உத்திரவு செய்தான். அவ்வுத்திரவின்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பூமியிலிறங்கி, இப்போது கஃபத்துல்லா இருக்கிறதே அத்தலத்தில் வந்து நின்று குனிந்து மண்ணெடுக்கும் போது, பூமியானது ஜிபுரீலைப்பார்த்து, "ஜிபுரீலே! அல்லாஹ்வின்

பேரில் ஆணையாக என்னிடத்திலிருந்து மண்ணெடுக்காதீர். அஃ தேனெனில், நீரென்னிடத்திலிருந்து கொண்டுபோகிற மண்ணினால் அல்லாஹுதஆலாவுடைய கலீபா உண்டாகுவார். அவருடைய அவுலாதுகள் மிகுந்த குற்றவாளியாவார்கள். அதனால், அவர்கள் பேரில் நரகத்துடைய அதாபு வாஜிபாகிப்போகும். ஆனால் நானோ மிகவும் எளிமையாகிய கால்தூசியாயிற்றே. அப்பேர்பட்ட எனக்கு அல்லாஹுதஆலாவுடைய அதாபை சுமக்க அவ்வளவு வல்லமையில்லையே. ஆதலால் நீரென்னிலிருந்து மண்ணெடுக்க வேண்டாமென்று சொல்லியது. அதுகேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் ஒன்றும் பேசாமற் போய்விட்டார்.

பின்னர், அல்லாஹுதஆலா மீக்கயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை மண்ணெடுத்து வரச்சொல்லி அனுப்பினான். அவர்களும் எடுக்க பூமி, முன்னர் ஜிபுரீலவர்களுக்குச் சத்தியஞ்செய்ததுபோல சத்தியஞ் செய்தது. அதுகேட்டுமீக்காயீலவர்களும் பேசாமல்போய்விட்டார்கள். பின்னர் அல்லாஹுதஆலா இஸ்ருபீல் அலைஹிஸ்ஸலாமவர்களை மண்ணெடுத்து வரச்சொல்லி யனுப்பினான். அவர்களுக்கும் எடுக்க பூமி, முன்னர் இரண்டுபேருக்கும் ஆணையிட்டதுபோல் ஆணையிட்டது. அதுகேட்டு இஸ்ருபீலவர்களுமொன்றும் பேசாமற் போய்விட்டார்கள். பின்னர், அல்லாஹுதஆலா இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை மண்ணெடுத்து வரச்சொல்லி அனுப்பினான். அவர்களுக்கும் பூமி முன்னர் மூன்று பேருக்கும் ஆணையிட்டதுபோல் ஆணையிட்டது. அதுகேட்டு இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பூமியைப்பார்த்து, ஓ பூமியே! நீ எவன்பேரில் ஆணையிட்டாயோ அவன் தான் என்னை அனுப்பி வைத்தான். ஆதலால் அவனது உத்திரவை நான் தட்டமாட்டேன். அவ்வுத்திரவின் பிரகாரம் உன்னிலிருந்து நான் மண்ணெடுத்துக் கொண்டு போவேனென்றுசொல்லி, சகல இடத்து மண்ணுமொன்றாகச் சேர்த்துவரும்படியாய் ஒருபிடி நிரம்ப மண்ணெடுத்துக் கொண்டுபோய், அல்லாஹுதஆலாவிடம்,யா அல்லாஹ்! நீ உத்திரவுசெய்தபடிக்கு மண்ணெடுத்து வந்தேனென்று சொன்னார்.

அப்போது அல்லாஹுதஆலா இஸ்ருயீலிடம், நானிந்த மண்ணைக்கொண்டு ஒருகலீபாவை உண்டாக்குவேன். அவருடைய ஹயாத்தைவாங்க உம்மையே ஏவுவேன். ஆதலால், இந்த மண்ணை மக்கத்திற்கும் தாயிபுக்கு மிடையிலே கொண்டுபோய் வைப்பு

மென்று உத்திரவு செய்தான். அப்படியே இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாம் அந்த மண்ணைக்கொண்டுபோய் வைத்தார்கள். பின்னர் அல்லாஹு தஆலாவின் உத்திரவுப்படி, அம்மண்ணின் பேரில் றஹ்மத்தென்னு மழைபெய்யப்பட்டது. அம்மழைத் தண்ணீரும் அம்மண்ணும் நன்ருய்க்கலந்து இரண்டுவருஷத்திற்குள், குயவன் நன்ருக மிதித்துப் பிசையும் மண்போலாயிற்று. பின்னர் இரண்டு வருஷத்திற்குள் பாண்டம் செய்கின்ற மண் போல நல்ல பதமாயிற்று. அதற்குப்பின்னர் இரண்டு வருஷத்திற்குள்ளே மனித உடல்உற்பத்தியாயிற்று. இவ்விதம் எட்டு வருஷத்திற்குள் உற்பத்தியெல்லாம் பூரணமாய் முடிந்தது.

இவ்வித மிருக்கையில், ஒரு நாள் இபுலீஸானவன் எழுபதினுயிரம் மலக்குகளோடு அவ்விடத்தில் வந்து பார்க்கும்போது, பாவா ஆதமுடைய உடல் மண்ணின்பேரில் விழுந்து கிடக்கக் கண்டு அவ்வுடலைப்பார்த்துப் பழிப்பாக இகழ்ச்சி செய்துவிட்டுப் போனான். பின்னர், ஒரு நாள் இபுலீஸ் அம்மலக்குகளுடனே அவ்விடத்திற்கு வந்தான். அப்போது அம்மலக்குகள் இபுலீஸைப் பார்த்து, இந்த மண்தானு அல்லாஹு தஆலாவுடைய கலீபா என்று கேட்டார்கள். அதற்கு இபுலீஸ் அம்மலக்குகளைப்பார்த்து "ஆம் இது தான் அல்லாஹு தஆலா இந்த மனிதனை என் வசத்திலாக்கினல் நான் இவனுக்கு மிகவும் கெடுதி செய்வேன். அல்லது என்னை இவன் வசத்திலாக்கினல் நானெருபோது மிவன் வசத்திலிருக் கமாட்டேன்" என்று சொன்னான்.

பிறகு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய உடலையும் உறுப்புகளையும் பூரணமாகச் செய்யப்பட்டபோது, முன்னர் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய உயிரேற்றுக் கொண்ட அமானத்தாகிய நபிகள் நாயக மூஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய வொளியை பாவா ஆதமவர்களுடைய நெற்றியில் அழுத்திவைக்கும்படிக்கு அல்லாஹு தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு உத்திரவு செய்தான். அதுபோலவே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி நாயகத்தின்வொளியை பாவா ஆதமவர்களுடைய நெற்றியில் வைத்தழுத்தி தேய்த்து விட்டார்கள். அதனல் பாவா ஆதமவர்களுக்கு, அழகு மிகுத முண்டாயிற்று.

இவ்விடத்தில் பாவா ஆதமவர்களுடைய உடல் பூரணமாக உற்பத்தியானநாற்பதாம் நாளைக்குப் பின்னர் அவ்வுடலில் ரூஹ்என்னும்உயிரை விடும்படி அல்லாஹு தஆலா ஜிபுரீலுக்கும், மீக்காயீலுக்கும், இஸ்ருபீலுக்கும், இஸ்ருயீலுக்கும் உத்திரவு செய்தான். அவ்வுத்திரவு பிரகாரம் அந்தநான்குபேர்களும் ஒவ்வொருவரும் 70000. மலக்குகளைக் கூட்டிக்கொண்டு வந்து பாவா ஆதமர்களுடைய உயிரைஒளியான வோர் தட்டில் வைத்து அதை யொளியான தஸ்தறினாலே மூடி எடுத்துக்கொண்டு வந்து அந்த உடலின் தலையின்பேரில் வைத்து, மூடியிருந்த தஸ்தரைத் திறந்துவிட்டார்கள். அப்போது ஏழுவானத்திலு முள்ள மலக்குகள் யாவரும், அந்த உயிரானது பாவா ஆதமவர்கள்உடலில் எவ்விதம் புகுதுகிறது எனப் பார்க்கவேண்டுமென்று வந்தார்கள். அப்போது அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்து ஓ உயிரே! அவ்வுடலுக்குள் புகுதென்றுசப்தம் வந்தது. அதுகேட்டு உயிரானது ஏழுதரம் அந்த உடலைச் சுற்றி வந்து யா அல்லாஹ்! நான் ஒளிவான வஸ்துவாயிருக்க இருளும் நெருக்கடியு முள்ளதாயிருக்கிற இந்த உடலுக்குள் எப்படிப் புகுவேனென்று சொன்னது. அப்போது அல்லாஹு தஆலா புறத்தில் நின்றும் ஓர் சப்தம், 'ஆதத்துடைய உயிரே! நீ அந்த உடலுக்குள் அருவருப்பாகவே புகுந்து, அருவருப்பாகவே வெளிவந்துவிடு' யென்று உண்டாயிற்று.

இவ்விதம் அல்லாஹு தஆலாவுடைய சப்தத்தைக்கேட்ட அந்தத் துப்பறவாகிய உயிரானது, உடனேபாவா ஆதமவர்களுடைய உடலுக்குள் மூக்கின் வழியாகப் புகுந்தது. இன்னுமோர் ரிவாயத்தில் அந்த உயிரானது பாவா ஆதமவர்களின்உச்சந்தலை வழியாகப் புகுந்ததென்றும் சொல்லப்படுகின்றது. இவ்விதம் உடலுக்குட் புகுந்த உயிரானது உச்சந்தலையையும், நெகத்தையும், முகத்தையும் இரண்டு வருஷகாலமாகச் சுற்றிக்கொண்டிருந்தது. பின்னர் கண்களில் இறங்கவே அக்கண்களின் பார்வையுண்டாகி, அப்பார்வை சரீரத்தின் மேலேயோடிப் பார்க்கும்போது சரீரமெல்லாம் மண்ணாக இருந்தது கண்டது. பின்னர் காதுகள்வரைக்கு மிறங் ககாதுகளிற் கேள்வியுண்டாகியது. இதனால் மலக்குகள் செய்யும் தஸ்பீஹை கேட்டுக் கொண்டிருந்தது.

பின்னர் மூக்குத் தண்டுவரைக்கு மிறங்க மூக்கில் தும்மலுண்டாகித் தும்மல் வந்தது. அப்போது உயிர் நன்றாக ஸ்திரப்பட்டது.

இப்படி தகாயிக்குல் அக்பாரில் சொல்லப்படுகிறது. இன்னும் கஸஸுல் அன்பியாவில் சொல்லப்படுகிறது யாதெனில், உயிர் உடம்புமுழுதும் நிறைந்த பின்னர் தும்மல் வந்து தும்பினபோது, மூக்கந் தண்டிலிருந்து றூஹானது மார்புவரைக்கு மிறங்கினது. அப்போது பாவா ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹு தஆலா வினுடைய நாட்டத்தைக் கொண்டும், இரண்டு உள்ளங்கை யையும் பூமியில் ஊன்றிக் கொண்டு எழுந்திருக்கப் போனார்கள். எழும்ப முடியாமல் போயிற்று. அது கண்டு, மலக்குகள், ஆ ஹா! இக்தென்ன ஆச்சரியம். இன்னம் பாதியுடல் மண்ணாகவே இருக்க, அதற்குள் இந்த மனிதன் எழுந்திருக்கப் பார்க்கிறானே, ஆனதால், இந்த மனிதன் ஆத்திரக்காரனாக இருப்பான்—என்று சொன்னார்கள். இன்னும் அல்லாஹு தஆலாவும் தன் வேதத்தில் மனிதன் ஆத்திரகாரனென்று சொல்லி யிருக்கிறான்.

பின்னர் றூஹானது பாவா ஆதமவர்கள் வயிறு வரைக்கு மிறங்க வயிற்றிற்குள் பசியுண்டாய், உண்ணுகின்ற தேட்ட முண்டாயிற்று. பின்னர், உயிர் உள்ளங்கால் வரைக்கும் மிறங்கி உடல் முழுமையும் நிறைந்த போது, சரீரத்துடைய மண்ணெல் லாம் இரத்தமும், சதையும், எலும்பும், சவ்வும் தோலுமாயின. அப்போது, பாவா ஆதமவர்களுக்கு உடுப்பாகச் சரீர முழுமையும் நகம் மூடிக் கொண்டிருந்தது. அப்படி யிருந்த நகஉடுப்பானது, அவர்கள் செய்த ஓர் குற்றத்தினா லெடுப்பட்டுப் போய், அதன் அடையாளத்திற்காகக், கை கால் விரல்களில்மட்டும்நகம் வைக்கப் பட்டது.

இவ்விடத்தில் பாவா ஆதமவர்களுடைய சரீரத்தில் உயிர் பூரணமாக நிறைந்த போது, அவர்களுடைய நெற்றியிலே, அல்லா ஹு தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது ஒளியை இறக்கினான். அந்த ஒளி அவர்களுடைய நெற் றியில் பதினான்காம் நாள் உதயமாகும் பூரண சந்திரனைப் போல் அறுஷுவரைக்கும் ஒளிவிட்டிலங்கிக் கொண்டிருந்தது. அப்போது அல்லாஹு தஆலா மலக்குகளை சொர்க்க லோகத்திலுள்ள ஓர் இரத்தின சிம்மாசனங் கொண்டு வரும்படியாக உத்திரவு செய்தான். அவ்வுத்திரவின் பிரகாரம் மலக்குகள் சிம்மாசனம் எடுத்துக் கொண்டு வந்து வைத்தார்கள். அச்சிங்காதனத் தினுடைய சதுரம் காற்பது மயில் யுள்ளதாயும் பொன்னி

னாலும் தங்கத்தினாலும், நவரத்தினத்தினாலும் ஜோடிக்கப்பட்ட தாயும் இருந்தது. அதின் பேரில் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை மேலான சுவர்க்கத்து உடைகள் உடுத்தி முத்து, மாணிக்கம் பதித்ததாஜென்னும் தொப்பி தலைக்கிட்டு, அழகாக உட்கார வைத்து அபூ முஹம்மதே! என்று கூப்பிட்டு, “உமது தலையை மேலே யுயர்த்திப்பாரும்” என்று சொன்னான்.

அது கேட்டு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தங்கள் தலையை உயர்த்திப் பார்த்தபோது, அர்ஷு தெரிந்தது. அந்த அர்ஷின் முந்தின திரையிலே ஓர் ஒளி யிலங்கிக் கொண்டிருக்கக் கண்டு, ஆதமவர்கள், அல்லாஹு தஆலாவிடம், ஆண்டவனே! இவ்வொளி யாருடைய வொளி யென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா, பாவா ஆதமவர்களிடம் இந்த வொளியானது ஓர் நபியினுடைய ஒளி, அந்த நபியினுடைய பெயர் முஹம்மது. அந்த முஹம்மதை, நான் உண்டாகாதிருக்கில், ஆதமே! உம்மை, வானத்தை பூமியை மற்று முண்டானவை யாதொன்றையும் படைத்தே இருக்க மாட்டேன். மேலும் இந்த முஹம்மது உம்முடைய மகனாகப்பிறப்பார். ஆதலால் தான் ஆதமே, நானும்மை அபூ முஹம்மதென்று அருமையாக அழைத்தேன் என்று சொன்னான்.

பின்னர், அல்லாஹு தஆலா இப்லீஸோடும், மற்றமலக்குகளையும் அழைத்து, ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு தஹியத்தென்னும் சஜதாச் செய்யும்படி உத்திரவு செய்தான். அது போல் மலக்குகள் யாவரும் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத் தஹியத்து ஸஜ்தாச் சொய்தார்கள். இப்லீஸ் மாத்திரம், பெருமைத் தனமாகச் செய்யாமல் மாறுபட்டு முன்கிருகி நின்றான். ஸஜ்தாச் செய்த மலக்குகளெல்லாம் தங்கள் தங்கள் தலையைத் தூக்கிப் பார்க்கும் போது, இப்லீஸ் ஸஜ்தாச் செய்யாமல் நிற்கிறதைக் கண்டு, இந்த இபுலீஸ் சிஜிதாச் செய்யவில்லையே என்று அவனை மனதில் வெறுத்து விட்டு, மறுபடி இரண்டாம் தரமும் அம்மலக்குகள் ஸஜ்தாச் செய்தார்கள். அப்போது அல்லாஹு தஆலா இபூலீஸைப் பார்த்து ஆய் இபூலீஸே! நான் இரண்டு கையிலு முண்டாக்கிய அந்த வஸ்துவுக்கு ஸுஜூது செய்ய உனக்கேன் தடங்கலாயிற்று? நீ இவ்விதம் அகங்காரஞ் செய்தாயே, அப்படியானால் நீ கீர்த்தியில் நீ உயர்ந்தவனோ? என்று கேட்டான்.

அதற்கு இப்லீஸ், அல்லாஹு தஆலாவிடம், ஆண்டவனே! நீ என்னை நெருப்பினால் படைத்தாய். ஆதமை மண்ணினால் படைத்தாய். ஆதலால் நான் அவனுக்கு உயர்த்தியாகத் தானிருக்கிறேன். இன்னும், நான் உனக்கு ஸுஜூது செய்யாதிருக்க வேறொருவனுக்கு ஸுஜூது செய்வேனா, செய்யமாட்டேன் என்றுசொன்னான். அது கேட்டு அல்லாஹு தஆலா கோபமாகி, இப்லீஸைப் பார்த்து "நீ இவ்விடத்தை விட்டு நீங்கிப் போய்விடு. கியாமத் நாள் வரைக்கும் உன் பேரில் என்னுடைய முனிவாகிய லஃனத்தை இறக்கினேன்" என்று சொன்னான். அப்போது லஃனத்துப் பெற்ற இபுலீசானவன், அல்லாஹு தஆலாவிடம் "என்னுடைய நாயனே! நீ என்னை நீக்கவும் தள்ளவுமாகிய மிடிமையானது இந்த ஆதத்தைக்கொண்டு ஏன் உண்டாயிற்று" என்று கேட்டான். அதற்கு அல்லாஹு தஆலா, இபுலீஸே நீ, முன்னாலே எழுதி வைத்திருக்கிறாயே அந்த எழுத்தை எடுத்துப் பார் என்று சொன்னான். அதுபோலவே இபுலீஸ் அவ்வெழுத்தை எடுத்துப் படித்துப் பார்த்து "என்னுடைய நாயனே! நான் கியாமத் நாள் வரைக்கும் மவுத்தில்லாமல் நீண்ட ஹயாத்தாக இருக்கவும், மனிதருடைய சதை, இரத்தம், நரம்புகளில் புகுந்திருக்கவும் எனக்குள் செய்வதுடன், மனிதர்கள் கண்ணுக்கு மறைவாகவும் வைக்க வேண்டும்" என்று கேட்டான். அதற்கு அல்லாஹு தஆலா அப்படியே கொடுத்தேன் என்று சொன்னான்.

மலக்குகள் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு தஹியத்து ஸுஜூது செய்த பின்னர், அல்லாஹு தஆலா ஆதமுக்காக கஸ்தூரியினால் ஒரு குதிரையை உண்டாக்கினான். அக்குதிரையின் பெயர் மைமூனா. அதற்கு இரு பக்கமும் முத்துகளினால் சிறகு உண்டா யிருந்தது. அதன் பேரில் பாவா ஆதம் அவர்களை ஏற்றிக் கொண்டு, பூலோகம், வானலோகம் முதலிய இடங்களிலுமுள்ள அதிசயங்க ளெல்லாவற்றையும் காண்பிக்கும் படியாய், அல்லாஹு தஆலா, ஜிபுரில், மீக்காயீல், இஸ்ராயீல் ஆகிய இம்மூவருக்கும் உத்திரவு செய்தான். அது கேட்டு அம்மூவரும் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்திற்கு வந்தார்கள். அப்படி வந்த மூன்று பேரையும் பாவா ஆதம் அவர்கள் பார்த்து அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று சலாம் சொன்னார்கள்

அவர்களும் வஅலைக்கு முஸ்ஸலாம் என்று ஜவாபு சொன்னார்கள். அப்போது ஆதம் நபிஅவர்களுக்கு அல்லாஹு தஆலா ஆதமே! இந்த ஸலாமானது கியாமத் பரியந்தம் மூமினானவர்களுக்கு அவசியமாக இருக்கட்டும் என்று சொன்னான்.

பின்னர் அம்மூவரும் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை அக்குதிரையின் பேரில் ஏற்றி, ஜிபுரீல் கடிவாளத்தையும் மற்ற இருவரும் இரு பக்கத்தையும் பிடித்துக் கொண்டு, வானம், பூமி முதலிய இடங்களில் எல்லாம் உள்ள அதிசயங்கள் யாவையும் காண்பித்தனர். பின்னர் ஆதம் அவர்களை ஜிபுரீல் சுவர்க்கத்தில் கொண்டு போய் விட்டார். அப்போது அல்லாஹு தஆலா ஆதம் அவர்களுக்கு சுவர்க்கத்தில் உண்டாய் இருக்கிற கோதுமைக்கனி தவிர மற்ற கனிவர்க்கங்களெல்லாம் தின்று கொண்டிருக்க உத்திரவு செய்தான். அப்படியே பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தின்று கொண்டு சந்தோஷமாய் இருந்தார்கள். ஆனால், அவர்களுக்குப் பக்கத்தி லிருக்க ஓர் துணை வேண்டியதற்காக அல்லாஹு தஆலா இவர்கள் நித்திரை செய்யும் போது, அவர்களுடைய இடது பக்கத்து விலா எலும்பி லிருந்து பீபி ஹவ்வாவை உண்டாக்கினான்.

பின்னர் பாவா ஆதம் அவர்கள் நித்திரை தெளிந்து கண் விழித்தெழுந்து பார்த்த போது, தமது சிம்மாசனத்தின் அருகே இனிய நகையுடனே பீபி ஹவ்வா அவர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டு, அவர்களை "நீர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு ஹவ்வா நான் உங்கள் பெண்ஜாதி என்று சொன்னார்கள். அது கேட்டு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிகுந்த சந்தோஷமாய் ஹவ்வாவைத் தீண்ட கையை நீட்டினார்கள். அப்போது அங்கு ஒரு மலக்கு நின்று ஓய் ஆதமே! ஜாக்கிரதை, கை தீண்டாதிர் என்று சொன்னார். அதற்கு பாவா ஆதம் அவர்கள், அம்மலக்கைப் பார்த்து இப்பெண்ணை அல்லாஹு தஆலா எனக்காக உண்டாக்கி யிருக்க நீர் ஏன் கை தீண்டாதே என்று விலக்குகிறீர் என்று கேட்டார். அதற்கு அம்மலக்கு பாவா ஆதத்தைப் பார்த்து, இப்பெண்ணிற்கு மஹரைக் கொடுத்து விட்டு தீண்டு என்று சொன்னார். அது கேட்டு பாவா ஆதம் அவர்கள் நான் என்னவித மஹர் கொடுப்பேன் என்று கேட்டார். அல்லாஹு

தஆலாவினுடைய உத்தரவு உண்டாயிற்று ஆதமே! நீர் முஹம்மது நபி பேரில் 20 ஸலவாத்துச் சொல்லி மஹர் தானம் செய்யுமென்று வந்தது. அதுபோல பாவா ஆதம் அவர்கள் ஸலவாத்து ஓதினார்கள். அதை ஹவ்வா கபூல் செய்து கொண்டார். பிறகு இருவரும் சொர்க்கத்தில் கூடி யிருந்து வாழ்ந்தார்கள்.

இவ்விதம் சுவர்க்கத்தில் பாவா ஆதமும், ஹவ்வாவும் சந்தோஷமாகக் கூடி இருப்பதை இபுலீஸ் கண்டு, மனம் பொறுக்காமல் அவ்விருவரையும் கெடுக்க நாடி, சுவர்க்க வாசற்படியில் மூந்நூறு வருஷம் காத்திருந்தான். அந்த மூந்நூறு வருஷத்துக்குப் பின்னர் சுவர்க்கத்திலிருந்து ஒரு மயில் வெளிவந்தது. அந்த மயிலை இபுலீஸ் பார்த்து, "ஏ மயில்களுக்கரசியே நீ! என்னை சுவர்க்கத்தில் கொண்டுபோய் விட்டால், அதற்காக நான் உனக்கொரு மந்திரம் கற்றுத்தருகிறேன். அதனாலே நீ மிகுந்த சுகத்தை அடைவாய்" என்று சொன்னான். அதுகேட்டு மயில் இபுலீஸைப் பார்த்து "நீர் சொன்ன காரியம் என்னால் ஆகாது. சுவர்க்கத்தில் ஒரு சர்ப்ப மிருக்கிறது. அதனால் தான் முடியும். ஆதலால் நான் அந்த சர்ப்பத்தை அழைத்துவருகிறேன். அதனிடம் உமது எண்ணத்தைச் சொல்லும்" என்று உள்ளே புகுந்து, சர்ப்பத்திற்கு இக் காரியங்களைச் சொல்லி தன்னுடனே கூட்டிவந்து இபுலீஸினிடத்தில் விட்டது.

அப்பாம்பை இபுலீஸ் பார்த்து "சுவர்க்கலோகத்து நாக ராஜனே! நீ எனக்கு ஒரு உபகாரஞ் செய்வாயாக? அஃதுயாதெனில், என்னை சுவர்க்கத்திற் கொண்டு போய் விடுவாயாக" என்றான். அது கேட்டு நாகம், இபுலீஸைப் பார்த்து 'நான் உம்மை எப்படி எங்கே கொண்டுபோய் விடுவேன். மலக்குகள் காவலிருக்கிறார்களே' என்று சொன்னது. அதற்கு இபுலீஸ் நாகத்தைப் பார்த்து "சுவர்க்கத்தினுள்ளே நான் வேறு நீ வேறாகப் போனால் தானே மலக்குகள் காண்பார்கள். அப்படி யில்லாமல் உன் வாயைத்திற, நான் உள்ளே புகுந்து கொள்கிறேன்" என்று சொன்னான். அச்சொல்லிற்கு நாகம் இசைந்து, வாயைத் திறந்த போது, இபுலீஸ் அதன் வாயில் உட்புகுந்தான். அந்நாகம் சுவர்க்கத்துள் நுழைந்து இபுலீஸை அங்கு ஓரிடத்தில் கொண்டு போய் விட்டது.

அங்கே இபுலீஸ் ஓர் மூலையில் உட்கார்ந்து, புலம்பிப் புலம்பி அழுதுகொண்டிருந்தான். இவ்விதம் இப்லீஸ் அழுகிறதை ஆதம் அவர்களும் ஹவ்வா அவர்களும் கண்டு, இபுலீஸை அணுகி "நீ என் இவ்விதம் புலம்பிப் புலம்பி அழுகிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு இபுலீஸ் அவ்விருவரையும் பார்த்து "நான் உங்களுக்காகவே அழுகிறேன்" என்றான். அதற்கிருவரும் இபுலீஸைப் பார்த்து, நீ எங்களுக்காக அழவேண்டிய காரணமென்ன, என்று கேட்டார்கள். அதற்கு இபுலீஸ் அவ்விருவரையும் பார்த்து 'நீங்கள் இந்த சுகமான சுவர்க்கத்தை விட்டும் இறந்து போவீர்களே அதனாலே தான் நான் அழுகிறேன்' என்று சொல்லி விட்டு மறைந்து போனான்.

இவ்விதம் இபுலீஸ் சொன்ன கபடச் சொல்லைக்கேட்ட ஆதம் அவர்களும், ஹவ்வா அவர்களும் மனங்கலங்கி இருந்தார்கள். இப்படி இருவரும் இருக்கும்போது, இபுலீஸானவன் மறுபடியும் பாவா ஆதம் அவர்கள் முன் வந்து கோதுமைக்கனியின் பிரயோஜனத்தைச் சொல்லி, அல்லாஹ்வின்பேரிலே பொய்யாணையிட்டு, ஆதமே! நீங்கள் அந்தக் கோதுமைக்கனியைத் தின்றால் மலக்குகளைப்போல எக்காலும் மவுத்தில்லாமல் இருப்பீர்களென்று சொன்னான். இவ்வாறு 70-வது விடுத்தம் வந்து வந்து சொல்லி மனதைக்கலைத்து கோதுமைக்கனியை ஆதமும், ஹவ்வாவும் தின்னும்படியாகச் செய்து வைத்தான்.

அந்தக் கோதுமைக்கனி ஆதம் அவர்களுடைய வயிற்றிற் போனவுடனே அவர்கள் சரீரத்தில் அணிந்திருந்த உடைகள் தானே கழன்று கீழே விழுந்தன. அவர்கள் தலையில் அணிந்திருந்த தாஜென்னும் தொப்பியுந்தானே பறந்து போய் விட்டது. அவர்கள் இடையிலிருந்த கச்சையையும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவிழ்த்து விட்டார்கள். பின்னர் பீபி ஹவ்வா அவர்களுடைய உடைகளும் அவ்விதம் கழன்றுவிட்டன. இவ்விதம் ஆதமும், ஹவ்வாவும் நிர்வாணியாகி, ஓடி ஓடி மரத்தண்டை ஒளியப் போனார்கள். அப்படிப்போயும் சுவர்க்கத்திலுள்ள மரங்களொன்றும் இவர்களுக்கு இடங்கொடாமல் விலகிப்போயின.

அத்தருணத்தில் பாவா ஆதம் அவர்களுடைய தலை உரோமத்தை ஒரு மரத்தின் கொம்பு வளைந்து சுழற்றிப் பிடித்துக்

கொண்டது. அப்போது பாவா ஆதம் அவர்கள், அல்லாஹு தஆலாவை நாடி "நான் இந்த வேளை நிர்வாணியாய் இருக்க, இந்த மரமும் என்னைப் பிடித்துக்கொண்டதே. இஃதென்ன ஆச்சரியம்" யென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா ஆதம் அவர்களைப்பார்த்து, 'ஓய் ஆதமே! நான் உம்மைதின்ன வேண்டாமென்று ஏவின வஸ்துவான கோதுமையை நீர் தின்றபடியினாலே உமக்கு இந்த வருத்தமெல்லாம் வந்து நேரிட்டது" என்று சொன்னான். அதுகேட்டு பாவா ஆதம் அவர்கள் மிகுந்த வெட்கமாய், மரங்களிடத்தில் எல்லாம்போய் கெஞ்சி கெஞ்சி உடுத்தித் கொள்ள இலை கேட்டார்கள். அதற்கு எந்த மரங்களும் இலை கொடாமல் சும்மாய் இருந்தன.

அப்போது சாம்பராணி மரம் ஒன்று மாத்திரம் இலை கொடுத்தது. அதற்கு அல்லாஹு தஆலா அந்த சாம்பராணி மரத்தைப் பார்த்து "ஏ சாம்பராணி மரமே! நீ ஆதத்திற்கு இலை கொடுத்ததினாலே உன்னுடைய பிசினில் யாவரு மெச்சிக் கொள்ளும்படியான வாசனையை கொடுத்தேன். என்றாலும் நீ என் உத்திரவில்லாமல் ஆதமுக்கு இலை கொடுத்தபடியால், உன்னை யாவரும் நெருப்பிற் போடும்படியாகச் செய்தேன்" என்று சொன்னான்.

பின்னர் அல்லாஹு தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், "ஆதமும் ஹவ்வாவும்; நான் தின்னவேண்டாம் என்று விலகிய கோதுமையைத் தின்றதினாலே, இனி அவர்களுக்கு சுவர்க்கத்திலிடமில்லை. ஆதலால் அவர்களைப் பூமியில் கொண்டுபோய் விடு" என்று உத்திரவு செய்தான். பின்னர் சில மலக்குகளிடம் அல்லாஹு தஆலா ஆதத்துடைய தலைமயிரை மரம் பிடித்துக் கொண்டிருக்கிறதே அதை அவிழ்த்து விடுங்களென்று உத்திரவு செய்தான்.

இந்தச் செய்தி பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தெரிந்து, அல்லாஹு தஆலாவிடம் "என் ஆண்டவனே! நீ என்னை உன் குத்றத்தான கையினாலே படைத்து மலக்குகளைக் கொண்டும் தஹியத் என்னும் ஸஜ்தா செய்வித்தாயே. அப்படியிருக்க இப்போது என்னை சுவர்க்கத்தைவிட்டும் வெளிப்படுத்துகிறாயே. அப்படி என்னை நீ வெளிப்படுத்தாதே" என்று மிகவும்

வேண்டிக்கொண்டார். அதுகேட்டு அல்லாஹு தஆலா மலக்குகளிடம் சீக்கிரத்தில் ஆதத்தைச் சுவர்க்கத்தை விட்டும் வெளிப்படுத்துங்கள் என்று கண்டிப்பான உத்திரவு செய்தான்.

உடனே மலக்குகள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கையைப் பிடித்து சுவர்க்கத்தை விட்டும் வெளியே வாரும் என்றிழுத்தார்கள். அதற்கு பாவா ஆதம் அவர்கள், நான் வரமாட்டேன் என்று சொன்னார்கள் அதை மலக்குகள் கேளாமல், ஆதம் அவர்களுடைய கையைப் பிடித்து ஆதமே! வெளியிலே போகலாம் வாரும் என்று மீண்டும் இழுத்தார்கள்.

அப்போது பாவா ஆதம் அவர்கள் அங்குள்ள மரங்களைக் கட்டிப் பிடித்தார்கள். மலக்குகள் அவர்களை தாமதிக்க விடாமலிழுத்தார்கள். அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம், "என் ஆண்டவனே! நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள் என்று துஆக் கேட்டார்கள். அந்த துஆ கபூலாகவில்லை. மறுபடியும் மலக்குகள் பாவா ஆதம் அவர்களை இழுத்தார்கள். அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அல்லாஹு தஆலாவிடம் "என் நாயனே! என் வயிற்றில் பிறக்கப்போகும் நபிமார்களுக்காக என் பிழையைப் பொறுத்து இந்தச் சுவர்க்கத்தை விட்டு என்னை வெளிப்படுத்தாதே" என்று துஆக் கேட்டார்கள். அப்போதும் அந்தத் துஆ கபூலாகவில்லை.

பின்னரும் பாவா ஆதம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் என் நாயனே! நீ எனக்கு முன்கூட்டி தெரிவித்தாயே அந்த முஹம்மது நபிக்காக என் பிழையை பொறுத்துக் கொள்என்று துஆக்கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா, மலக்குகளிடம், ஆதம் என் ஹபீபாகிய முஹம்மதை நினைத்தபடியினாலே, அவரை மெதுவாக அழையுங்கள் என்று உத்திரவு செய்தான். அஃதறிந்து, பாவா ஆதம் அவர்கள் ஜிபுரீலைப் பார்த்து, யா ஜிபுரீலே! எங்கேபோக என்னை அழைக்கிறீர், சொல்லும் என்று கேட்டதற்கு ஜிபுரீல் அவர்கள், பாவா ஆதம் அவர்களைப் பார்த்து, ஆதமே! உம்மை அல்லாஹு தஆலா எங்கே படைத்தானோ அங்கேயேகொண்டு போய் விடுகிறதற்கு அழைக்கிறேன்என்றுசொன்னார்கள். அதற்கு பாவா ஆதம் அவர்கள் ஜிபுரீலே! நீர்என்னை அங்கே கொண்டு போய் விட்டால் சீக்கிரம் இங்கே அழைத்துக் கொண்டு

வருவீரா ? அல்லது கொஞ்சநாள் சென்று அழைத்து வருவீரா என்று கேட்டதற்கு, ஜிபுரீல் அவர்கள் பாவா ஆதம் அவர்களிடம் அது விஷயம் எனக்குத் தெரியாது. அல்லாஹு தஆலாவுக்கே தெரியும் என்று சொன்னார்.

அப்போது பாவா ஆதம் அவர்கள், ஜிபுரீல் அவர்களைப்பார்த்து ஜிபுரீலே, நீர் என்னைக் கொண்டுபோய் விடும் இடத்தில், என்னோடுன் கூட இருப்பவர் யாரென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அவர்கள், பாவா ஆதம் அவர்களைப் பார்த்து, உம்மோடு கூட இருக்கிறவன், உம்மை கோதுமைக் கனியைத் தின்னச் சொன்னானே அவன் தான் என்று சொன்னார்கள். அது கேட்டு பாவா ஆதம் அவர்கள் ஐயோ, நான் பகைவன்கூட இருக்கலாயிற்றே என்று மிகுந்த துயரப்பட்டார்கள். அப்போது அல்லாஹு தஆலா, ஜிபுரீலிடம் "ஜிபுரீலே! நீர் இன்னுமேன் தாமதம் செய்கிறீர். சீக்கிரம் ஆதமை சுவர்க்கத்தை விட்டும் வெளியாக்கும் என்று உத்திரவு செய்தான். அதுகேட்டு ஜிப்ரீல் அவர்கள் பாவா ஆதம் அவர்களை தூக்கிக்கொண்டு போய் சரந்தீவிலே விட்டார்கள். அதுபோல ஹவ்வாவையும் தூக்கிக் கொண்டுபோய்ஜித்தாவில் விட்டார்கள். இப்படியேஇபுலீஸை அயில் சீமையிலும், அந்தப் பாம்பை அசுபாகன் சீமையிலும்: அந்த மயிலை ஹபசி சீமையிலும் விழும்படியாய் எடுத்து வீசி எறிந்து விட்டார்.

இவ்விதம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சறந்தீவில் கொண்டுபோய் விட்டு விட்டுப் போன பின்னர் பாவா ஆதம் அவர்கள் தாங்கள் முன்னர் சுவர்க்கத்தில் அனுபவித்துக் கொண்டிருந்த இன்பத்தையும், இபுலீஸுடைய சூழ்ச்சியில் அகப்பட்டு தாங்கள் அல்லாஹு தஆலாவுடைய ஏவலைத் தட்டிக் கோதுமை கனியைத் தின்றதினால் வந்த குற்றத்தையும் நினைத்து அழுதார்கள். இரண்டு கண்களிலிருந்து வெள்ளப் பெருக்கைப்போலக் கண்ணீர் பெருகி ஓடியது இரவும் பகலும் அழுது அழுது ஆண்டவனை நினைத்து, "என்னுடைய ஆண்டவனே! நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்" என்று கெஞ்சிக் கேட்டும் அல்லாஹு தஆலா அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளவில்லை. ஆதலால் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பொறுமை நீங்கி, நாம் இப்படி எல்லாம்

அல்லாஹு தஆலாவைக் கெஞ்சிக் கேட்டும் என் பிழையை பொறுக்க வில்லையே என்று மிகவும் பெரிய அழுகை யாக அழுதுகொண்டிருந்தார்கள்.

இவ்விதம் பாவா ஆதம் அவர்கள் மூந்நூறு வருஷகாலமாக அழுது கொண்டிருக்கையில், இவர்களுக்கு அல்லாஹு தஆலா முன்னர் தெரிவித்தானே அந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒளியின் பெருமையும் தகுதி யும் இவர்கள் மனதில் வந்து அந்த ஒளிக்கு அல்லாஹு தஆலா மிகுந்த பெருமையைக் கொடுத்திருக்கிறானே அதின் பொருட்டாவது நமது குற்றத்தைஅல்லாஹு தஆலா மன்னித்து அருள் செய்ய மாட்டானா என்ற எண்ணத்தோடும் ஆண்டவனை நோக்கி "என் ஆண்டவனே! உன்னுடைய ஹபீபாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்காக நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு என்னைக் காப்பாற்று வாயாக" என்று துஆக் கேட்டார்கள்.

இவ்விதம் பாவா ஆதம் அவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டும் துஆகேட்டகவே அல்லாஹு தஆலா அவர்களுக்குத் தெரிவித்தான், "கேளும் ஆதமே! நீர் என்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபியைக் கொண்டு என்னிடத்தில் பிழை பொறுக்கக் கேட்டபடியினால் அந்த முஹம்மதின் மகிமைக்காக உமது குற்றத்தை நான் பொறுத்துக் கொண்டேன்" என்று திருவுளமாகி, பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஜித்தாவென்னும் நகரத்தில் ஒன்று சேர்ந்துவாழும் படியாகச் சேர்த்து விட்டான்.

இவ்விதம் ஜித்தா நகரத்தில் பாவா ஆதமும் ஹவ்வாவும் ஒன்று சேர்ந்து சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். அந்நாளையில் இருபது சூலில் நாற்பது பிள்ளைகளைப் பெற்றார்கள். அப்பிள்ளை களாவன:—சீது நபி, அவருடைய பிள்ளை யானுசு, அவருடைய பிள்ளை ஹயினான், அவருடைய பிள்ளை மகுலீல், அவருடைய பிள்ளை எர்து அவருடைய பிள்ளை உகுநூஹு, அவருடையபிள்ளை இதுரீஸ் நபி, அவருடைய பிள்ளை மத்தூசல்கு, அவருடைய பிள்ளை லாமக்கு, அவருடைய பிள்ளை நூஹு நபி, அவருடைய

பிள்ளை ஷாம், அவருடைய பிள்ளை அறுபகுசு, அவருடைய பிள்ளைசாலகு, அவருடைய பிள்ளை ஐயறு, அவருடைய பிள்ளை பாலகு, அவருடைய பிள்ளை ருகுவா, அவருடைய பிள்ளை சாறுகு, அவருடைய பிள்ளை காஹூறு, அவருடையபிள்ளை ஆஸறு, அவருடைய பிள்ளை இபராஹீம் நபி, அவருடைய பிள்ளை இஸ்மாயில் நபி, அவருடைய பிள்ளை தாபித்து, அவருடைய பிள்ளை எசுஹபு அவருடைய பிள்ளை அஃறபு, அவருடைய பிள்ளை பிறஹூ அவருடைய பிள்ளை காஹூறு, அவருடைய பிள்ளை மிக்குவம், அவருடைய பிள்ளை உதுவி, அவருடைய பிள்ளை நிசார், அவருடைய பிள்ளை இல்று நபி, அவருடைய பிள்ளை இல்யாஸ் நபி, அவருடைய பிள்ளை முத்லக்கு, அவருடைய பிள்ளை குசைமா, அவருடைய பிள்ளை ஹனூ, அவருடைய பிள்ளை நுலறு, அவருடைய் பிள்ளை லாமக்கு, அவருடைய பிள்ளை பிஃறு, அவருடைய பிள்ளை காலிபு, அவருடைய பிள்ளை லுவை, அவருடைய பிள்ளை கஹ்பு, அவருடைய பிள்ளை முர்ராத்து, அவருடைய பிள்ளை கிலாபு, அவருடைய பிள்ளை குசை, அவருடைய பிள்ளை அப்துல் முனபு, அவருடைய பிள்ளை ஹாஷிம், அவருடைய பிள்ளை அப்துல் முத்தலிபு, அவருடைய பிள்ளை அப்துல்லாஹி.

இவ்விதம் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒளி, மேற் சொல்லியவர்களில் ஒவ்வொருவரிடமாக இறங்கி இலங்கினதால் அவர்களுக்கு எல்லாம் நபிப்பட்டமும், இராஜரீகமும், சுக வாழ்க்கையும் உண்டாகும் படியாய் ஆனது.

பின்னர் முடிவில் அப்துல்லாஹ் அவர்களுடைய நெற்றியிலே நூர ஒளியாக இலங்கிக் கொண்டிருந்தது. அதனால் அநேக பெண்கள் அப்துல்லா அவர்களுடைய அழகைக் கண்டு இவரை நான் விவாகஞ் செய்வேன். நீ விவாகஞ் செய்வாய் — என்று சண்டை செய்து கொண்டிருந்தனர் அப்போது அல்லாஹூ தஆலாவுடைய கட்டளைப்படி, றஜபுமாதம் முதல் வெள்ளிக்கிழமை இரவு அப்துல்லாஹ் அவர்களுடைய நெற்றியிலிருந்து இலங்கிய ஒளி அவர்களுடைய திருத்தேவியரான ஆமீனா அவர்களுடைய வயிற்றில் தரிப்பட்டது. அப்படித் தரிப்பட்டபோது அல்லாஹூ தஆலா, மலக்குகளிடம், என் ஹபீபாகிய முஹம்மது நபியுடைய ஒளியை, ஆமீனாவுடைய

வயிற்றிலே தரிபாடாக்கினேன் ஆதலால் நீங்கள் எட்டு சுவர்க்
கத்தையும் திறந்து அலங்கரித்து வையுங்கள். நரகங்களை மூடி
விடுங்கள்" என்று உத்திரவு செய்தான்.

இன்னும் நபிகள் நாயகத்துடைய ஒளி ஆமீனா அம்மா வயிற்
றிற் தரித்த அன்றிரவு புத்து சாமி களெல்லாம் மடிந்து மோதித்
தலை கீழாக விழுந்து விட்டன. இபுலீஸுடைய சிம்மாதனமும்,
இராஜாக்களுடைய சிம்மாசனங்களும் புரண்டு உருண்டு போயின.
இன்னும் ஷைத்தான் கூட்டங்கள் வானத்திற்குப்போய் வரும்
வழமையுங்கெட்டு அவைகள் வானத்திற்குப் போக முடியாமலாகி
விட்டன. இச்செய்திகளை எழுவானிலுள்ள பறவை இனங்கள்
படுவானிலுள்ள பறவை இனங்களுக்குத் தெரிவித்தன. குறைஷி
களின் ஆடு, மாடு, குதிரை, ஒட்டக மாகிய இவைகளெல்லாம்
இச்சேதிகளை யாவருக்கும் நன்றாகத்தெரியும் படிக்கு வாய்களைத்
திறந்து விரித்து உயர்ந்த சப்தத்தோடும் தெரிவித்தன.

இன்னும் நபிகள் நாயகம் ஆமீனா அம்மா அவர்களுடைய
வயிற்றில் தரிக்கு முன் காலத்தில், மக்கா முதலிய நகரங்களில்
பெரிய பஞ்சமாக இருந்தது அப்பஞ்சமும் அப்போது நீங்கி
தானிய தவசங்களும் மலிந்து, பெரிய செழிப்புண்டானது. கருகி
தீய்ந்துபோயிருந்த மரங்கள், செடிகள் செழிப்புண்டாயின.
மேலும் அன்றிரவு, ஆமினா அவர்களுடைய கனவிலே ஒரு பெரி
யவர் வந்து, "அம்மா ஆமினாவே! உன்னுடைய வயிற்றில்
இன்றைய தினம் பிள்ளை ஒன்று தரிப்பட்டிருக்கிறது. அப்பிள்ளை
நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமாயிருக்கும்"
யென்று சொன்னார்.

அஃதன்றி, நபிகள் நாயகம் வயிற்றில் தரித்த அன்று முதல்
பிறக்கும் நாள் மட்டும், ஆமினா கர்ப்பத்தில் அவர்களுடைய
காதுக்கு நன்றாகக் கேட்கும் படியாக "தாயே, உம்முடைய வயிற்
றிற் தரித்திருக்கிற பிள்ளையானவர் முஹம்மது நபியாய் இருப்பார்,
அவர் மிகுந்த வரிசையும் பெருமையு முடையவர்" என்று எந்த
நேரமும் வானத்திலிருந்து சப்தம் வரும்படியாய்க் கேட்பார்கள்.
மேலும், ஒன்பது மாதம் வரையில் பூலோகத்தில் மற்ற
கர்ப்ப ஸ்திரீகளுக்கு உண்டாகும் அடையாளங்கள் யாதொன்று
மில்லை.

இவ்விதத்தில் ஆமினு அவர்கள் கர்ப்பமாகிய ஆறும் மாதத்தில், அப்துல்லா அவர்கள் மதீனமா நகரத்திற்கு வியா பாரத்திற்காகப் போய் வருகிற வழியில், அபுவா வென்னும் தலத் தில் மவுத்தாகி அடங்கப்பட்டார்கள். அஃதறிந்து மலக்குகள் அல்லாஹு தஆலாவிடம் "அரிய பெரிய நாயனே! ஆமினு வுடைய வயிற்றில் அவதரித்த பிள்ளை எத்தீமாகி விட்டதே" என்று சொல்லி மிகவும் விசாரப்பட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா அம்மலக்குகளிடம் என் மலக்குகளே! அந்தப் பிள்ளை யினுல் பூலோகத்தில் மிகுந்த அபூர்வங்களும் அற்புதங்களும் உண்டாகும். ஆதலால் அதைக்குறித்து நீங்கள் துயரப்பட வேண் டாம். அப்பிள்ளையை வளர்க்கவும் வாழ்விக்கவும் நான் இருக்கி றேன். இன்னும் அந்தப் பிள்ளை பூமியில் பிறக்கிறதே மிகுந்த அருமை என்று நீங்கள் எண்ணுங்கள் என்று திருவுளமானுன்.

பின்னர் ஆறுவது மாதத்தில் ஆமினு அவர்கள் கனவில் ஒரு பெரியவர் வந்து "ஆமினுவே! உம்முடைய வயிற்றிற் தரித்திருக்கிற பிள்ளை இந்தப் பூலோகத்திற்கு ஆத்மீக பாதுஷாவானவராய் இருப்பார். ஆதலால் அவர் பிறந்தால் அவருக்கு முஹம்மது என்று பெயரிடுங்கள்" என்று சொல்லிப்போனுர் இவ்விதம்கடந்து வருகை யில் ஒன்பதாம் மாதத்தில், ஆமினு அவர்களுக்கு பிறசவவேதனை உண்டாயிற்று. அச்சமயத்தில் அவர்களது காதுக்கு நன்றாய் கேட்கும்படி ஓர் அசரீரியான பெரிய சப்த முண்டாயிற்று. அந்த சப்தத்தை ஆமினு அம்மா என்னவோ வென்று இருக் கையில், ஒரு வெள்ளைப் பறவை வந்து ஆமினு அவர்களுடைய நெஞ்சின் மீது சிறகினுல் தடவியது. அதனுல், அவர்களுடைய கெர்ப்ப வேதனை நீங்கினது. அச்சமயத்தில் அப்துல் முத்தலிபு கஃபத்துல்லாவுக்குப் போயிருந்தார். வீட்டில் வேறு யாருமில்லாத தருணமா யிருந்த படியால், ஆமினு அவர்கள் "நமக்கு இவ்வித மான கெர்ப்ப அவஸ்தை நேரத்தில் யாரும் உதவி துணை இல்லையே" ஏன்று வியாகூலப் பட்டவர்களாகத் தனித்திருந்தார்கள். அவ் வேளையில் தங்களுக்குத் தண்ணீர் தாகமும் பெரியதாயிருந்தது. அத்தருணத்தில் ஒருவர் வெள்ளைக் கிண்ணத்திலே தண்ணீர் கொண்டு வந்து, ஆமினு அவர்கள் கையிற் கொடுத்தார். அதை அவர்கள் வாங்கிக் குடித்தவுடனே தண்ணீர் தாகம் நீங்கினது.

பின்னர் ஆமினா அவர்கள் உடலி லிருந்து ஒரு ஜோதி வெளியானது. அவ்வொளியிலே அப்துல் முத்தலிபு வம்சத்துப் பெண்களைப் போல உயர்ந்த பெண்களில் பலர் உண்டாகி பீபி ஆமினா அவர்களைச் சூழ்ந்திருந்தார்கள். அது கண்டு ஆமினா அவர்கள் அதிசயமாகி, அப்பெண்களில் சிலரைப் பார்த்து உங்களுக்கு என்னுடைய பிரசவ வேதனை எப்படித் தெரிந்ததென்று கேட்டார்கள். அதற்கு ஒரு பெண் "நான் இம்ரானுடைய மகள் மறியம் என்றும், இன்னும் ஒரு பெண்ணானவள் நான் பிர அவ்னுடைய பெண்சாதி ஆஸியாவாக இருக்கிறேனென்றும், மற்ற பெண்கள் எல்லாம் சுவர்க்கலோகத்து ஹூறுல் ஈன்கள் என்றும் சொன்னார்கள்.

அதன் பின்னர் ஆமினா அவர்களுடைய காதிற்கு, பூமியிலே கற்கள் முதலான வஸ்துக்கள் விழுந்தா லெவ்விதம் கடகட வென்று சப்தம் கேட்குமோ அவ்வித சப்தம் ஓய்வில்லாமல் கேட்டுக் கொண்டே யிருந்தது. இன்னும் சில மலக்குகள் வெள்ளைப் பட்டுப் புடவையினால் ஆகாசத்திற்கும் பூமிக்கும் இடையில் விரிப்பு விரித்தார்கள். பின்னர் அம்மலக்குகளி லொருவர் பிள்ளை பிறந்தவுடனே அப்பிள்ளையை மனிதர்க ளொருவரின் கண்ணுக்கும் தெரியாமல் கையிலேந்திக் கொள்ளுமென்று சொன்னார். அப்போது சில பறவைக் கூட்டங்கள்—மூக்கு மரகதத்தினாலும், சிறகுகள் சிவந்த மாணிக்கத்தினாலும் உள்ளவைகளாக வந்தன.

அப்பறவைகள் பீபி ஆமினா அவர்களுடைய மடியை மறைத்து கொண்டன. அப்போது ஆமினா அவர்களுடைய கண்ணிற்கு மஷ்ரிக்கி லிருந்து மஃரிபுவரைக்கும் நான்கு திக்குகளும், அந் நான்கு திக்கிலினுள்ளவைகளும் நன்றாகத் தெரிந்தன. இன்னும் ஆமினா அவர்களுடைய பார்வையில் மூன்று கொடிகள் தெரிந்தன. அக்கொடிகளோ பச்சை நிறமுள்ள கொடிகளாக இருந்தன. அதில் ஒரு கொடி எழு வானிலும், ஒரு கொடி படுவானிலும், ஒரு கொடி கஃபத்துல்லாவின் பேரிலும் பிடிக்கப்பட்டதா யிருக்கக் கண்டார்கள்.

இவ்விதமான சமயத்திலே பூரண சந்திரனைப் போலே முக வசீகரத்தை யுடைய ஹூறுல்ஈன் பெண்க ளெல்லாம் நின்று வாழ்த்தினர்.

மூன்று லோகத்திற்கு மாண்டகையாகிய நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்,

வெய்யில் வெப்பத்திற் கிடந்து வேதனைப் படுபவர்கட்டு ஓர் குளிர்ந்த நிழலும் விரிந்த பரப்பையு முடைய ஆலவிருக்ஷம் போலவும், மழையில்லாமல் நின்று வாடும் பயிர்களுக்கு நன்றாகக் குளிரப் பெய்யும் மழை போலவும், கடலில் விழுந்தவர் கரையேற உதவி யில்லாது கலங்கும் சமயத்தில் அவர்களுக்குக் கப்பலொன்று கிடைத்தது போலவும், இருட்டை நீக்கும் சூரியனைப் போலவும், குபிரை நீக்கும் ஞானத்தைப்போலவும், பிறந்தார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினு வநபிய்யினு முஹம்மதின் வஆலா ஆல ஸெய்யிதினு முஹம்மதின் வபாரிக் வஸல்லிம்.

இவ்விதம் பூரண சந்திரனுக்கும் அதிகமான அழகோடு பிறந்த பிள்ளையாகிய ஹபீபு றப்பில் ஆலமீன், ஸெய்யிதுல் முர்ஸலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத் தாயாகிய பீவி ஆமினு அவர்கள் பார்த்தார்கள். அப்போது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை, இரண்டு கைகளின் கலிமா விரலென்னும் விரலை வானத்து நோக்க உயர்த்தினவராயும், தலையை குனிந்து ஸுஜூது செய்தவராகக் கண்டார்கள்.

மறுபடியும் ஆமினு அவர்கள் பிள்ளையாகிய நபி நாயகத்தை உற்றுப் பார்க்கும் போது, அவர்கள் கண்ணிற்குப் பிள்ளை தெரியாமல், ஒரு வெள்ளை மேகத்துண்டு வந்து மறைத்துக் கொண்டது. அப்போது, அந்த மேகத்துண்டினுள் ளிருந்து ஓர் சப்தம் பிறந்தது. அஃது யாதெனில் "என்னுடைய அழகிய ஹபீபான முஹம்மதை மனிதர்களில் யாரேனு முதலில் கை தீண்டக் கூடாது. ஆகலால் அப்பிள்ளையை எடுத்துக் கொண்டு போய், அர்ஷு, குறுஸு, சொர்க்கம், கடல், மலை, பாதாளம், ஏழு வானமும், ஏழு பூமி—இவைகள் முதலான சகலடங்களிலும், அவ்விடங்களி லுண்டா யிருக்கும் ஜின்கள், மலக்குகள் பறவை இனங்கள், மிருகஜாதி இனங்கள், ஜலஜந்துக்கள் முதலிய சகல படைப்பினங்களுக்கும் காண்பித்துக் கலிமாவை ஓதச் சொல்லிப் பின்னர் பூலோகத்திலுள்ள ஷிர்க்குகள் குபிர்களெல்லாம் நீங்கி, அல்லாஹு தஆலாவுடைய ஒருமைப் பாட்டின் வழி காண்பிக்கப்பட்டவ னென்று சொல்லி எடுத்துக் கொண்டு வாருமென்று அசரீரி சப்த முழங்கிற்று.

No. 111228

இவ்விதம், சப்த மூண்டானதின் பின்னர், அந்த வெள்ளை மேகம் விலகிப் போனது. அப்போது, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய முதுகுக்கு கீழே பச்சைப் பட்டினாலே மெத்தை யொன்று விரித்து, அதின் பேரில் சுவர்க்கத்திலுள்ள வெள்ளை பஞ்சு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. இன்னும், பிள்ளையாகிய நபிகள் நாயகத்தின் கையிலே வெள்ளை முத்தினால் மூன்று திறவுகோ லிருந்தது. அத்திறவு கோலை ஒருவர் பார்த்து, நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கையிலிருக்கும் மூன்று திறவுகோல்களில் ஒன்று வெற்றி பெருவது, ஒன்று காவலையுடையது, ஒன்று நபுவ்வத்தை யுடையது. இம்மூன்று திறவுகோலையும் பிள்ளையாகிய இந்த முஹம்மது நபி பெற்றுக் கொண்டாரென்று சொன்னார்.

பின்னர் ஒரு மேகத்துண்டு வந்தது. அதிலிருந்து, குதிரையுடைய கனைப்புபோல ஒரு சப்தமும் பறவைகள் சிறகுகளையுயர்த்தி விலாவிலடிக்கையில் வரும் சப்தம் போல ஒரு சத்தமும் மனுஷருடைய பேச்சைப் போலே ஒரு சப்தமு முண்டாயிற்று. அதிலுடனே அம்மேகம் நபி நாயகத்தை மறைத்துக் கொண்டது. அதன் பின்னர் அம்மேகத்திலிருந்து ஒருசப்தம் "இந்த பிள்ளையை எடுத்துக் கொண்டுபோங்கள். மனிதர்கள், மலக்குகள், ஜின்கள், பறவைகள், நாற்கால் மிருகங்கள், ஊர்வனங்கள் முதலிய எல்லா வஸ்துக்களும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய பெயரைச் சொல்லி சகல வஸ்துகளுக்கும் தெரியப்படுத்துங்களென்று சப்தித்தன.

பின்னரும், அம்மேகத்திலிருந்து ஒரு சப்தமுண்டாயிற்று. அதாவது:— இந்தப் பிள்ளையாகிய முஹம்மதுக்கு ஆதம் நபியுடைய குணமும், ஷீது நபியுடைய அறிவும், நூஹு நபியுடைய சாமர்த்தியமும், இஸ்மாயீல் நபியுடைய நாவும், இஸ்ஹாக் நபியுடைய இராஜரீகமும், ஸாலிஹு நபியுடைய சொல்திருத்தமும், லூத்து நபியுடைய தந்திரமும், யூஸுபு நபியுடைய அழகும், மூஸா நபியுடைய வருத்தமும், ஐயூபு நபியுடைய பொறுமையும், யூனூஸ் நபியுடைய வணக்கமும், யூஷஃ நபியுடைய ஜீஸபீலும், தாவூது நபியுடைய குரலிசையும், தானியால்நபியுடைய முஹப்பத்தும், இல்யாஸ் நபியுடைய பெருமையும், யஹ்யா நபியுடைய துப்பரவும், ஈஸா நபியுடைய தக்வாவும் ஆகிய எல்லாம் கொடுங்கள்.

இன்னும், நபிமார்களுடைய குணங்களின் சமுத்திரத்தில் முழு கச்செய்யுங்கள் என்றும் சொல்லிவிட்டு மேகம் விலகிப்போயிற்று.

அப்போது, பீபி ஆமினு அவர்கள் பிள்ளையாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பார்த்தார்கள். அந்தப் பிள்ளை தன் கையிலே ஓர் பட்டு உடைச்சுருள் வைத்துக்கொண்டிருந்தது. அதில் தண்ணீரும் ஒழுகிக் கொண்டிருந்தது. அது கண்ட ஒருவர் ஆஹா இந்தப் பிள்ளையானவர் பூலோகத்தின் வஸ்துக்களெல்லாவற்றையும், தன் கைவசமாக சுருட்டிப் பிடித்துக் கொண்டாரென்று சப்த மிட்டார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சரீரத்தில் கஸ்தூரி வாசனை கமழவும், முக மானது பதினுன்காம் சந்திரனைப்போல இலங்கவும், பீபி ஆமினு அவர்கள் கண்டார்கள். அந்நேரத்தில் மூன்று பேர் வந்தார்கள். இவர்களில் ஒருவர் கையில் வெள்ளியினுல் செம்பும் ஒருவர் கையில் மரத்தினுல் விரிப்பும், ஒருவர் கையில் வெள்ளைப்பட்டுத் துணியு மிருந்தன. அம்மூவரும் பிள்ளையாகிய நபி நாயகத்தை எடுத்து அவர்களின் சரீரத்தை ஏழுதரம் கழுவித் துடைத்து இரண்டு தோளுக்கிடை பிடரியில் நபூவத்தென்கிற மொஹர் என்னும் முத்திராங்கத்தை பதித்துப் பட்டுத்துணியினுற் பிள்ளையாகிய நபி நாயகத்தைப் பொதிந்து சுருட்டி எடுத்து, ஒருவர் தன்னுடைய இறகின்பேரில் ஒரு மணிநேர மட்டிலும் வைத்திருந்து, பின்னர் பீபி ஆமினு அவர்கள் கையில் கொடுத்துவிட்டுப் போயினர்.

அங்கே அப்துல் முத்தலிபவர்கள் இருக்கிற கஃபத்துல்லா வானது மக்காம் இபுராஹீமென்னும் தலத்திற்கு நேராக நான்கு மூலைகளுமொன்றுகச் சேர்ந்து ஸஜ்தாச் செய்துஎழுந்து பின்னர், இன்றையோடு அல்லாஹு தஆலா என்னைப் புத்துகளைக் கொண்டும், ஷிர்குகளைக் கொண்டும் பரிசுத்தமாக்கினுன் என்று சொல்லிற்று. இவ்விதம் கஃபத்துல்லா சொன்னதை அப்துல் முத்தலிபு அவர்கள் கேட்டுக்கொண்டு நிற்கும்போது, கஃபத் துல்லா வாய்விட்டு இன்றையதினம் பீபி ஆமினு அவர்களுடைய வயிற்றிலே நபி நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் இந்த கஃபா வைத் தமக்கிடமாக்கியும் கிப்லாவாக்கியும் கொள்வதுடன், இவ் விடத்தை மிகவும் பிரியம் வைத்திருப்பாரென்று சொன்னது.

அவர்களுக்கு அல்லாஹு தஆலாவுடைய றஹ்மத்தென்னும் அருள்உண்டாகுக என்று பெரிய சப்தமாகக் கூவினது.

அப்போது அங்கிருந்த சிறிய புத்துகளும், ஹுபுலென்னும் பெரிய புத்தும், முகங்குப்புற விழுந்து போயிற்று. இன்னும் அன்றிரவு கசுருச்சியத்திள்ள மாடமாளிகை, கூடகோபுரங்களெல்லாம் அதிர்ந்ததுடனே, அவ்விராச்சியத்துக் கோட்டையிலுள்ள பதினான்கு கொத்தளமு மிடிந்து விழுந்தது. இன்னும் அவ்விடத்திலுள்ள புத்துகளெல்லாம் உருண்டு புரண்டு கிழே விழுந்தன. இன்னும் எப்போதும் வற்றாத சாவாவென்னும் எரியிலுள்ள தண்ணீரும் குழீரென்று வற்றிப்போனது. இன்னும் ஆறாயிரம் வருஷந் தண்ணீரில்லாமல் வற்றிக்கிடந்தசாபா என்னும் ஆற்றிலும் தண்ணீர் நிறம்பி வெள்ளப் பிரவாகமானது. ஆயிரம்வருஷ காலமாகப் பாரிசுக்காரர் வணங்கிய அவியாத நெருப்புக்குண்டமும் புழுதி புரண்டு நெருப்பும் அவிந்து போயினது. இன்னும் இபுலீஸுடைய சிங்காதனம் மேல் கீழும் கீழ் மேலுமாகக் கவிழ்ந்துபோயிற்று.

இவ்விதம் அற்புதங்களையுடைய பிள்ளையாகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப்பெற்ற தாயாராகிய பீபி ஆமினா அவர்கட்கு, பிள்ளைப்பெறும் பெண்களுக் குள்ள தீட்டுத் துடக்கு யாதாமொன்று மில்லாமலும், பிள்ளைக்குத் தொப்பூழ்அறுத்தும் சுன்னத்து செய்தும் கண்ணிற்கு சுறுமாயிட்டும், தலைக்கு நெய்தேய்த்து மிருக்கும்படியாகவும், கஃபத்துல்லாவுக்கு வடகிழக்காக அத்தாலிபவர்கள் வீட்டில் ஜெம்ரத்பூஉஸ்தா வென்னும் தலத்தில், ரபீஉல் அவ்வல் மாதம், பனிரண்டாந்தேதி திங்கட்கிழமை இரவு பஜர் நேரத்தில் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள். அவ்வூரிலிருக்கிற சாஸ்திரிகள், நிஜூமிகளாகிய எஹூதிகள், நஸாறானிகள் முதலியவர்கட்கெல்லாம் அன்றிரவுதோற்றிய நட்சத்திரக் கணிதத்தினால், நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிறந்த சங்கதி தெரியலாகி அவர்களுடைய கூட்டத்தார்களோடும் இன்றைய இரவில் முஹம்மது பிறந்திருக்கிறாரென்று முன்னோர்களாலெழுதிய திருஷ்டாந்தரத்துடனே சொன்னார்கள்.

இவ்விதம் காரணங்கள் அத்தாட்சியோடும் பிறந்த நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு பீபி

ஆமினா அவர்கள் ஏழுநாள் மட்டும் பால் கொடுத்தார்கள். பின்னர் சுவைரியாவென்பவள் ஏழுநாள் மட்டும் பால் கொடுத்துக்கொண்டு வந்தார். குனேனென்னும் பட்டணத்தில் ஹலிமாவென்னும் பெயருடைய் பெண்மணி குடியிருந்தார். ஆனால் அந்த ஹலிமாவுடைய சரீரம் மிகவும் மெலிந்தும் வலது பக்கத்து மார்பு சூகையாயும், இடது பக்கத்து மார்பு கொஞ்சம் திரட்சியாயுமிருந்தது மேலும், அந்த குனேனென்கிற ஊரிலே பெரிய பஞ்சமொன்றுஉண்டாகி எங்கும் வாங்கித்தின்னத் தான்யவசங் கிடைக்காமல் ஜனங்கள் மிகவும் வருத்தமாகிப் பல திக்கும் போக ஆரம்பித்தார்கள்.

அப்போது ஹலிமாவும் அவர்கள் புருஷனார் ஆரீதும் இவர்களின் மூத்த மகனாகிய அப்துல்லாவும் இளைய மகனாகிய ழமுறத்தும், ஆக இந்த நான்கு பேர்களும் ஓர் கிழ ஒட்டகையுமாகப் பிரயாணமாகி மக்கமா நகரத்திற்கு வந்து அங்கே அப்துல்முத்தலிபைக்கண்டு பேசி ஆமினாரவர்கள் வீட்டிற்கு வந்தபோது அங்கு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஹலிமா அவர்களெடுத்து தங்கள் மார்போடு கட்டியணைத்தவுடனே அவர்கள் மெலிந்த சரீரமும்பருத்து, அழகுஉண்டாய், அந்தச் சூகை மார்பும் திரண்டு பால் ததும்பிற்று. அப்பாலை நாயகமாகிய பிள்ளை குடித்தார்கள். இடது மார்புப் பாலை அந்த லமுறத் தென்னும் பிள்ளை குடித்தார். ஆனால், லமுறத்துக்கு எப்போதும் பால் வயிற்றுக்குப்போதாமல் வாயைச் சப்புகிற பிள்ளை நாயகத்தின் பறக்கத்தினாலே அப்போது மார்பிலூறுகிற பால் சுறப்பினால் நிறைய குடித்துக் குடித்துக் கொப்பளிக்கும்.

இவ்விதம் நபி நாயகத்தினால் நடக்கிற அதிசயங்களை ஹலிமாவும் அவர்கள் புருஷனார் ஆரிதுங் கண்டு மிகுந்த சந்தோஷமாய் மனம் பூரிப்பு கொண்டு, சிலநாள் அங்கிருந்து பின்னர், தங்களூராகிய குனேனுக்கு வாவேண்டு மென்கிற விருப்பத்தினால், அப்துல் முத்தலிபுக்கும், ஆமினா அவர்களுக்கும் சொல்லிவிடை பெற்றுக்கொண்டு, தாங்கள் ஊரிலிருந்து ஏறிவந்த கிழஒட்டகத்தின் பேரிலே பிள்ளையாகிய நபிநாயகத்தை ஏற்றினார்கள். அப்போது அவ்வொட்டகம் திடமாக கொழுத்து மேனி மினுத்ததாய் நடந்து வருகிற வழியிலே புற்பூண்டு

செடி, கொடிகள், மரமட்டைகள், மலைதிடர், கற்காடுகள் முதலிய அனைத்தும் நபிநாயகமவர்களுக்கு சலாம் சொல்லவும், அதனாலே இத்து இறந்து உலர்ந்து வதங்கிப் பசுமையின்றிக் கிடக்கும் மரங்கள் முதலிய செடி கொடிகளும் வழியில் இரு பக்கமும் நபி நாயகத்தின் சரீர ஒளிவு தாங்கி, அவைகள் பசுமை நிறமுண்டாய்த் துளிர்த்துத் தளிரிட்டுப் பூத்துக் காய்த்துப் பழங்களைச் சொரிந்தன. இவ்வதிசயங்களை ஹலிமாவும், அவர்கள் புருஷனார் ஆரிதும், அவர்கள் கூடப் பிரயாணமாகிப் போகிற மற்றவர்களும் கண்டு, மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தவர்களாய் குனைன் என்னும் ஊர் வந்து சேர்ந்தார்கள். அவ்வூரார்களும், ஹலிமா மக்கத்திற்குபோன பாக்கியத்தினால் இப்பேர்ப்பட்ட காரணத்தையுடைய ஓர் பிள்ளை கிடைக்கப் பெற்றுவந்தாள் என்று கேள்வியுற்று வந்து நபிகள்நாயகத்தைப் பார்த்து சந்தோஷ மாகப் போவார்கள்.

இன்னும் நபிநாயகத்தின் பறக்கத்தினால் ஹலிமா வீட்டில் ஆடு, மாடு, ஒட்டகம் இவைகள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி பால் தயிர், மோர், வெண்ணை, நெய் குறைவில்லாமல் ஊரில் உயர்ந்த குடித்தனத்தாராய் வாழ்ந்தார்கள். ஊரார் மலட்டு மாடு ஆடு உள்ளவைகளை ஓட்டிக்கொண்டு வந்து, நபி நாயகத்தின் கைகளால் தடவச் செய்து அவைகளின் மலடு முதலிய நோய் தீரப்பெற்றும் பலாபலனை அடைவார்கள். இன்னும் கண் குருடு, முதலிய நோயாளிகளும் வந்து, நபி நாயகத்தின் கையை எடுத்து தம் கண் முகத்தில் வைத்துத் தடவிக்கொண்டு நோய் தீர்ந்து போவார்கள்.

இவ்விதக் காரணங்களோடு நபிகள் நாயகத்திற்கு இரண்டு வருஷமானது. இவ்விரண்டு வருஷம் பிள்ளைக்கு ஓர் துன்பமும் நேரிடவுமில்லை. ஹலிமா நபி நாயகமாகிய பிள்ளைக்கு மருந்து முதலியவைகளை சங்குகளில் வைத்தூட்டவு மில்லை. இரவு காலங்களில் பிள்ளையைத் தொட்டிலில் படுக்க வைத்துவிட்டு, அவ்வீட்டில் ஹலிமா முதலிய சகலரும் நித்திரை செய்வார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து தொட்டிலை ஆட்டுவார்கள். சந்திரன் வந்து பிள்ளைக்கு கால் கைகளைத் தடவும், இக்காரணங்களை ஹலிமா மாத்திரம் விழித் திருந்துகண்டதாகவும், கனவிற்கண்டதாகவும், சில ரிவாயத்தில்

சொல்லப் படுகின்றன. இன்னும் பிள்ளையாகிய நபிகள்நாயகத்தின் அழகு சவுந்தரியத்தையும், அவர்கள் நடத்தும் காரணங்களையும் சில பாதகர்கள் கண்டு மிரண்டனர்.

வேதாந்திகள், பிற்காலத்தில் ஒருவர் பிறந்து உலகத்தில் பல மார்க்கங்களையும் அழித்து, ஒரு மார்க்கம் உண்டாக்குவார் என்று எழுதி இருக்கிறார்களே, அப்பேர்பட்டவராயு மிருக்கலாம் ஆதலால் இப்பிள்ளையை கொலை செய்து விடவேண்டுமென்று சிலர் நாடி வந்து, ஹலிமாவைக் கண்டு மனம்மாறி பணங்களையும், தான்ய தவசங்களையும் பட்டுவஸ்திரங்களையும் கொடுத்துப் பதிலுக்குப் பிள்ளையை கொடுக்க கேட்டதாயும் சில ரிவாயத்தில் சொல்லப் படுகின்றன.

இவ்விதமாக இருக்கும் காலத்தில், ஹலிமா அவர்கள் பல காரியங்களையும் யோசித்துப் பிள்ளையும்பால்குடி மறந்திருப்பதனால் இனி நாம் பிள்ளையை பெற்றவர்களிடம் கொண்டு போய்சேர்க் காமலிருப்பது குற்ற மென்றெண்ணி, நபி நாயகத்திற்கு இரண்டு வருஷம் நிரம்பி மூன்றும் வருஷ ஆரம்பத்தில், ஹலிமா பிள்ளையை யெடுத்துக்கொண்டு மக்கத்திற்கு வந்து ஆமினுஅவர் களைக் கண்டு மரியாதைபுரிந்து பிள்ளையாகிய நபிகள் நாயகத்தைச் சிறப்பாக அவர்களிடத்தில் கொடுக்க, அவர்கள் பிள்ளையாகிய நபி நாயகத்தை ஆவலாக எடுத்து மார்போடணைத்து உச்சந்தலை முகம் முதலிய இடங்களில் முத்தமிட்டு, மனம் பூரித்து சந்தோஷமாகி அருமையாகப் பால் கொடுத்து வளர்த்துக் கொண்டு வந்த ஹலிமாவையும் அன்புடனே ஆதரித்து உபசரணை செய்தார்கள்.

இவ்விதம் ஹலிமாவும், அவள் புருஷனுர் ஆரீதும் மக்கத்தில் நான்கு மாத மிருந்து பின்னர், ஆமினுவுக்கும் அப்துல் முத்தலி புக்கும், மற்ற உறவு முறையாருக்கும், தாங்கள் ஊருக்குப் போகும் விஷயத்தைத் தெரிவித்துப் பிரயாணஞ் சொல்லிப் பிள்ளையாகிய நபிகள் நாயகத்தையும் எடுத்துக் கொண்டு குனைன் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

இவ்விதம், ஹலிமா நபி நாயகத்தை இரண்டாம்தரம் குனைன் என்னும் ஊருக்குக் கொண்டு வந்து, சிறப்பாக வாழ்ந்திருக்கையில், நாயகத்துக்கு வயது நான்காயிற்று. அப்போது ஒருநாள்

நபி நாயகம். ஹலிமாவைப் பார்த்து, "தாயே! என் சகோதரர்களான அப்துல்லாவும், லமுறத்தும் பகலெல்லாம் எங்கே போயிருந்து இரவானபோது வருகிறார்கள்? அப்படி அவர்கள் போகிறவிடத்தை எனக்கு சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு ஹலிமா நபி நாயகத்தைப் பார்த்து, "என் அருமையாகிய மகனே! அவர்கள் இருவரும் பகலெல்லாம் நமது ஆடு மாடுகளைக் காட்டிற் கொண்டு போய் மேய்த்துக் கொண்டு இரவானபோது வருகிறார்கள்" என்று சொன்னார்கள். அது கேட்டு, நபி நாயகம் ஹலிமாவிடம் "என் தாயே! நானும் அவர்கள் போகும் இடத்திற்குக் கூடப்போவேன்" என்று சொன்னார்கள். அச்சொல்லிற்கு ஹலிமாவும் இசைந்து, மறுநாட் காலையில் நபி நாயகத்திற்கு நல்ல வெள்ளைத் துணி உடுத்தித் தலைக்கு நெய்யுந் தேய்த்து கையில் பிடிக்க வோர் கோலும் எடுத்துக் கொடுத்து, தன் மக்களோடும் கூடப் போகும் மற்ற சிறுவர்களையும் பார்த்து, என் மகன் முஹம்மதைக் கூட்டிக் கொண்டு போய் நிழலுள்ளதாயும், தண்ணீருள்ளதாயும் இருக்கின்ற இடத்தில் நீங்கள் வழமை போல ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு, நேரத்தோடு பொழுதிருக்க வீடு வந்து சேருங்கள் என்று நபி நாயகத்தை முத்தி முகந்து அனுப்பி வைத்தாள்.

பின்னர் அப்பிள்ளைகள் நபி நாயகத்தை கூட்டிக் கொண்டு காட்டிற்குப் போய், ஓர் விருக்ஷத்தின் கீழே, தங்கள் தங்களிடத்திலிருந்த கறுப்புக் கம்பளங்களை விரித்து அதின் பேரில் நபி நாயகத்தைப் பாதுஷாவாக நேமித்து உட்கார வைத்து, மற்றவர்கள் எல்லாரும் ஏவலராக இருந்து விளையாடிக் கொண்டிருக்கும் போது, அவ்விடத்தில் நூதனமான இரண்டு பேர்கள், ஒருவர் கையில் ஓர் கிண்ணமும் ஒருவர் கையில் ஓர் கத்தியும் உள்ளவராக சமீபத்தில் வரக்கண்டு, விளையாடின பிள்ளைகள் எல்லாம் பயந்து திகில் அடைந்து ஓடினார்கள். அது கண்டு, நபி நாயகமும் ஓட எழுந்தார்கள். அப்போது அங்கு வந்த இருவரும் நபி நாயகத்துடைய கையைப் பிடித்து உவா மரத்தடியில் கொண்டு போய் இருக்கச் செய்து கீழே மல்லாத்திப் போட்டு நெஞ்சைக் கீறி அதிலிருக்கும் இருதய கமலத்தை கிழித்து அதன் உள்ளிருக்கும் கசடு குற்றங்கள் முதலிய அழுக்குகளான கெடுதல்களை வெளியே எடுத்து, இபுலீஸின் மாயையை மாற்றி நன்றாகக் கழுவி

அதன் உள்ளே அறிவு, பொறுமை முதலிய சகல நன்மைகளை நிரப்பிப் பொருந்தச் செய்து, கிழித்த நெஞ்சைத் தடவி மூடினார்கள். உடனே நபி நாயகம் எழுந்து தங்கள் நெஞ்சை உற்றுப் பார்க்கும் போது யாதொரு தழும்பு மில்லாதிருந்தது.

இவ்விதம், அங்கு வந்து நெஞ்சைக் கிழித்துப் பொருத்திய இரண்டு பேர்களான ஜிபுரீலும், மீக்காயீலும், நபி நாயகமவர்கள் சிரசைத் தடவி முத்தமிட்டு, புதிதாய் ஹபீபுல்லா என்றோர் பெயருமிட்டு பலவாறு புகழ்ந்து போற்றி விட்டு வானலோகம் போய் விட்டார்கள்.

பின்னர் இச்செய்தியை எல்லாம் முன்னர் இங்கு ஓடிய சிறுவர்கள் போய், ஹலிமாவுக்கும், ஆரீதுக்கும் சொன்னார்கள். அது கேட்டு அவ்விருவரும் பரிதாபமாக அலறி அழுது கொண்டு விரைவாக ஓடி வந்து பார்க்கும் போது, நபி நாயகம் வானத்தைப் பார்த்தவர்களாக இருக்கக் கண்டு, ஹலிமா "என் மகனே! முஹம்மதே!" என்று கட்டி அணைத்து முத்தமிட்டு நபி நாயகத்தின் திரேகம் எல்லாம் பார்த்தார்கள். அங்கே யாதொரு காயமும் தழும்பு மில்லாதிருக்கக் கண்டு, நபி நாயகத்திடம் மகனே! இங்கே நடந்து காரணமென்னவென்று கேட்டார்கள். அப்போது நபி நாயகம், ஹலிமாவிடம் அங்கு நடந்தவையாவும் சொல்லினார்கள். அதுகேட்டு ஹலிமா உயிரிழந்தவர்களுக்கு உயிரும், கண்ணிழந்தவர்களுக்கு கண்ணும் கிடைத்தது போல, நபி நாயகத்தைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

இவ்விதம் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்தை 20-வது வயதிலும், 40-வது வயதிலும் மிஃறாஜுக்குப் போகும் போதும் நெஞ்சைக் கிழித்து சுத்தப்படுத்தியதாக பவாயிதுல் பதுரியா முதலியகிதாபில் சொல்லப்படுகின்றது.

இவ்விதம் ஹலிமா நபி நாயகத்தைக் காட்டி விருந்து வீட்டிற்குக் கூட்டி வந்த பின்னர், ஆரிதும், ஹலிமாவும் யோசித்தார்கள்: இந்தப் பிள்ளையினால் இம்மட்டும் நடந்த காரணங்களும், சத்துருக்களுடைய அபாயங்களும் மிகவும் உண்டாயிருக்கின்றன. ஆதலால் இனி நாம் பிள்ளையை வைத்துக் கொண்டிருப்பது முறையல்லவென்று யோசித்து நபி நாயகத்தைக் கூட்டிக் கொண்டு போய் பெற்றவர்களிடம் விட்டுவிட வேண்டு மென்று ஓர் ஒட்டகை

யின் பேரில், நபி நாயகத்தை ஏற்றிக் கொண்டு குனைன் நகரத்தை விட்டும் நீங்கி மக்கத்தை நாடி வந்தனர். வழியில் ஓர் விருக்ஷத் தினடியி லிறங்கி, ஹலிமா நபி நாயகத்தை மடியில் வைத்துக் கொண்டிருக்கும்போது ஒரு மின்னல் மின்னி வீசி வந்து விழுவது போல ஒரு கை வந்து விழுந்து நபி நாயகத்தைத் தூக்கிக் கொண்டு போயிற்று. அது கண்டு ஹலிமா மடியிலிருந்த பிள்ளை மாயமாக போய் விட்டதே, இனி பிள்ளையைப் பெற்ற தாயாரிடத்தில் போய் நான் என்ன சொல்வது என்று பரிதாபத்துடனே எழுந்து அவ்விடங்களில் எல்லாம் ஓடி ஓடிப் போய்ப் பார்த்ததில், எவ் விடங்களிலும் பிள்ளையாகிய நபி நாயகத்தைக் காணாமையினால் தலையில் அடித்து மோதி முகங் குப்புறக் கீழே விழுந்து புழுதியிலே மேனி எல்லாம் புதையும்படி உருண்டு உருண்டு அழுது கொண்டிருக்கும்போது, அவ்விடத்திலே, ஓர் முதிய கிழவர் வந்து, ஹலிமாவைப் பார்த்து "ஓய் பெண்மணியே! நீர் ஏன் இந்த காட்டில் இவ்விதம் பரிதாபப்பட்டு அழுது சலிக் கிறீர்" என்று கேட்டார்; அதற்கு ஹலிமா, அம்முதிய கிழவ ரிடம், அங்கு தம் பிள்ளையாகிய நபி நாயகத்தை இழந்ததைச் சொல்ல, அதுகேட்டு, அம்முதியவர் ஹலிமாவைத் தேற்றிக் கலங்காதே என்று கூட்டிக் கொண்டு, அங்கிருக்கும் ஓர் தெய்வத்தி னிடம் போய், இந்த அம்மாள் இன்ன பேருடைய பிள்ளையை இந் தக் காட்டில் இழந்தாளாம். அப்பிள்ளையைக் கூட்டிவுதவி யாக்கி வைக்க என்று கும்பிட்டு வரம் கேட்டு நின்றார்.

அந்தத் தெய்வமாகிய சிலையானது, நபி நாயகத்தின் பேர் கேட்ட மாத்திரத்தில் முகங்குப்புறத் தரையில் மோதி விழுந்தது. அது கண்டு முதியவர் ஹலிமாவைப் பார்த்து, அம்மா! உன் மகன் முஹம்மதுடைய பெயர் சொன்ன மாத்தி ரத்தில், இந்தக் காலத்திலுள்ள தெய்வங்கள் எல்லாம் முகங்குப்புற விழுகிறதா யிருக்கின்றன. ஆதலால், நீ ஏன் அந்தப் பிள்ளையைக் குறித்துக் கவலையாகிறாய்? அவருக்கு ஏக தத்துவக் காரணனான ஆண்டவன் கிருபைப் பூரணமாக இருக்கின்றமையால் அவ்வாண்ட வன், அப்பிள்ளையை உன்னிடத்தில் சேர்த்து உதவியாக்கி வைப்பான் ஆதலால் நீ இந்தக் காட்டில் நின்று சலித்து அழவேண்டாம், நாடி வந்த இடத்திற்குப் போவென்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

அதுகேட்டு ஹலிமாவும், ஆரிதும் நோராக மக்கத்துக்கு வந்து இச்செய்தியை அப்துல் முத்தலிபுக்குச் சொன்னார்கள். அவர் கேட்டு நான்கு திசைகளிலும் ஆட்களை அனுப்பித் தேடவிட்டதில் அவர்கள் எங்குப் போய்தேடியும், நபி நாயகம் அகப்படாமையினால், எல்லாரும் துயரமாயிருக்கும்போது ஒரு சப்தம் வந்தது. அஃதென்னெனில் மக்கத்தில் கஃபத்துல்லாவுக்குத் தென்புறமாக ஒரு தோட்டமிருக்கிறது. அதில் அந்தப் பிள்ளை இருக்கிறாரென்று. இவ்விதம் சத்தம்கேட்ட உடனே, அப்துல் முத்தலிபும் சில பேருமாகப்போய் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். ஹலிமாவும் ஆரிதும் சில நாள் மக்கத்திலிருந்து, பின்னர் இருவரும் ஹுனைன் என்னும் பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

பின்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை பீபி ஆமினா தங்கள் வீட்டில் வைத்து வளர்த்துக்கொண்டிருக்கிற நாளையிலே, பீவி ஆமினா தங்கள் தாயார் வீட்டை நாடி மதீனத்துக்குப் போய் அங்கே சில நாள் இருந்து, அவ்விடம் விட்டு வருகிற வழியில் அபுவா னென்னும் ஊரில் தங்கினார்கள். அப்போது அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி பீபி ஆமினா மவுத்தானார்கள். அப்போது நபி நாயகத்துக்கு வயது ஆறும் ஒரு மாதமுமாய் இருந்தது.

இந்தச் செய்தியை அப்துல் முத்தலிபுக்குத் தெரியப்படுத்தினார்கள். அதை அப்துல் முத்தலிப்கேட்டு ஆள்களை அனுப்பி நபிநாயகத்தை வருவித்துத் தமது வீட்டில்வைத்து வளர்த்து வருகிற நாளையில், அவ்வூரில் மழையில்லாமலிருந்தது. அப்போது நபிநாயகத்தை அப்துல் முத்தலிபு அவர்கள் அழைத்துக் கொண்டுபோய் துஆ செய்கின்ற இடத்தில் நிறுத்தி நபிநாயகத்தின் கையை ஏந்தச் சொன்னார். அவர்கள்கையை ஏந்தின உடனே, அல்லாஹு தஆலா பெரு மழையைஇறக்கினான். அது கண்டு எல்லாரும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பேரில் மிகுந்த பிரியமாய் இருந்தார்கள் அப்படி இருக்கிற நாளையில் அப்துல் முத்தலிபும்இறந்துபோனார். அப்போது நபிநாயகத்துக்கு வயது எட்டும் இரண்டுமாதமுமாய இருந்தது. அதன் பின்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை அபூத்தாலிபு எடுதது வளர்த்து வந்தார்கள்.

இவ்விதம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அபூத்தாலிபுடைய வீட்டிலிருந்து வளர்ந்து வரும்போது, அவர்கள் வளர் பிறை போல் நாளுக்கு நாள் வயதில் வளர்ந்தேறிக்கொண்டே வந்து 25-வயது நிறைந்தது. அப்போது தங்கள் மனதில் வியாபாரஞ் செய்ய வேண்டுமென்று நினைத்துத் தங்கள் பெரிய தகப்பனாகிய அபூத்தாலிபினிடத்தில் வந்து தாங்கள் நினைத்த நினைவைச் சொன்னார்கள். அது கேட்டு அபூத்தாலிபு நம்முடைய பிள்ளை இப்போது வியாபாரஞ் செய்யக் கருத்தாய் இருக்கிறதே. அதற்கு நம்மிடத்தில் பொருளில்லையே, இதற்கு என்ன செய்வோம் என்று ஆலோசித்து நபி நாயமவர்களைப் பார்த்து "மகனே! நான் குவைலீதினுடைய மகளாகிய கதீஜா இடத்தில் போய் வர்த்தகத்துக்காக பொருள் கேட்கிறேன். அவர், கொடுத்தால் அதை வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு கதீஜா நாயகி வீட்டுக்குப் போனார். போன உடனே கதிஜா நாயகி அபூதாலிபுக்கு மிகுந்த மரியாதை செய்து நல்ல விரிப்பில் உட்கார வைத்து, 'மிஸ்கீனாகிய அடியாள் வீட்டுக்குத் தாங்கள் வந்த காரணமென்ன?' வென்று கேட்டார். அதற்கு அபூத்தாலிபு தாம் நினைத்து வந்ததைச் சொன்னார். அதை கதீஜா நாயகி கேட்டுத் தங்களுக்கில்லாத பொருள் யாருக்குக் கொடுக்கப் போகிறேன், அப்படியே வாங்கிக் கொண்டு போங்கள். அதற்காக நாளையதினம் வரும்போது தங்கள் பிள்ளை யாகிய முஹம்மதையுங் கூட அழைத்துக் கொண்டு வந்து வாங்கிக்கொன்டு போங்கள் என்று சென்னார்.

அதை அபூத்தாலிபு கேட்டு, மிகுந்த சந்தோஷத்துடனே வீட்டுக்கு வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுக்குத் தெரிவித்தார். மறுநாள் இருவரும் கதீஜா நாயகிவீட்டுக்குப்போனார்கள். அதை கதீஜா நாயகி கண்டு நல்ல விரிப்புகள் விரித்து அதில் இருவரையும் உட்காரச் சொல்லி மிகுந்த அன்பு ஆசாரஞ்செய்து இருவருக்கும் விருந்து கொடுத்துத் தம்மிடத்தில் ஷாம் தேசத்தில் செல்வாகும் சரக்குகள், இருநூறு ஒட்டகையிலும் இலட்சத்தொரு நூறாயிரம் தங்கக் காசும் பணிவிடை செய்ய இருபது ஆட்களும், கணக்கெழுத மைசறாவையும் போகும்படியாய் செய்து அவருக்கு சொல்லவேண்டிய புத்திமதிகளும் அனுப்பி வைத்தார். இவர் கூட அபூபக்கர் ஸித்தீக்கும், இன்னும்

சில வர்த்தகர்களும், அபூஜஹலும்மாகக் கூடி பெரிய கூட்டமாகச்சேர்ந்து ஷாம் தேசத்துக்குப் போனார்கள். மக்கத்தை விட்டும் வெளிப்பட்டு ஓரிடத்தில் போய் அன்றைய தினம் தங்கினார்கள்.

மறுநாட் பொழுது விடிந்தவுடனே எழுந்து இன்றையதினம் முன்னணியாக யார் நடக்கிறதென்று கேட்டதற்கு அபுஜஹல் நான் முன்னணியாக நடப்பேன் என்று சொன்னான். அதுபோல் அவனே முன்னணியாகப் போகும் பொழுது அவனுடைய ஒட்டகத்தின் காலே ஒரு கட்டை தட்டி ஒட்டகமும் அவனும் கீழே விழுந்ததில் அவனுடைய முகம் உடைந்து மிகுந்த வருத்தப்பட்டான். பின்னர் இப்போது யார் முன்னணியாக நடக்கிறதென்று கேட்டபோது உத்பா "நான் நடப்பேன்" என்று சொல்லித் தீரமாக நடந்து போகும்போது அவன் ஒட்டகத்தை ஓர் புலி அடித்துக் கொண்டு போய் விட்டது. பின்னர் யார் முன்னணியாக நடக்கிறதென்று கேட்டபோது, ஆஸென்பவன் "நான் நடப்பேன்" என்று முன்னாலே நடந்தான். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அவன் ஒட்டகைக்கு முன்னே ஓர்பெண் ஒட்டகை வேஷங் கொண்டு நடக்க, அதை ஆஸுடைய ஆண் ஒட்டகங் கண்டு அதன் பின்னால் ஓடி, அவனையும், மற்ற ஜனங்களையும் பாலை நிலத்தில் கொண்டுபோய் விட்டது.

அப்போது ஜனங்களுடைய நாவுகள் உலர்ந்து தண்ணீர்த் தாகம் அதிகமாகி மிகுந்த வியாகூலமாய் இருக்கும்போது, அபூபக்கர் ஸித்திக் அவர்கள், இச்செய்தியை அபுஜஹலுக்குச் சொல்லி, முஹம்மது நபியை முன்னணியாக நடப்பிக்கச் செய்தால் இவ்வேதனை எல்லாம் நீங்கிவிடும் என்று சொன்னார்கள். அது கேட்டு அபூஜஹல் முஹம்மதை முன்னே நடக்கச் சொல்லும் என்று சொன்னான். அப்படியே முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய ஒட்டையின் கயிற்றை ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் பிடித்துக்கொண்டு ஒரு நொடியில் ஷாமுடைய பாதையில் கொண்டு வந்து விட்டார்கள். அப்போது எல்லாருக்கும் நாலுதிசையும் தெரிந்து சந்தோஷமானார்கள். பின்னர் அவ்வேளையில் நாவுகள் உலர்ந்து தண்ணீர்த் தாகம் ஏற்பட்டதை நினைத்தார்கள். அக்கருத்து நபி நாயகத்துக்குத் தெரிந்து, தாங்கள் ஏறிப்போகும் ஒட்டகக் கயிற்றைஅசைத்தார்

கள். அவ்வொட்டகத்துக்கு அக்கருத்துத் தெரிந்து, தனது வலது காலைப் பூமியிலூன்றி அழுத்தி எடுத்தது. உடனே, அதிலிருந்து ஊற்று எழுந்து தண்ணீர் ஓடினது. அந்தத் தண்ணீரை எல்லாரும் குடித்துச் சந்தோஷமானார்கள்.

அன்றைய தினம் பொழுது போய் மறுநாள் காலையிலே சகல வியாபாரிகளும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுமாக எழுந்து நடக்கையில், சூரியனை இருள் வந்து மூடிக்கொண்டது. அதனால் ஒருவருடைய முகம் ஒருவருக்குத் தெரியாமல் மயங்கிய வேளையில், இந்த இருளும் முஹம்மதால் நீங்கி விடுமென்று நினைத்தார்கள். உடனே அவ்விருளும் நீங்கிப்போனது. அதை விட்டு அப்புறம்போகையில், ஒருவன் ஓடிவந்து, நபி நாயகத்தைப் பார்த்து இவ்வழியில் ஒரு பாம்பு மலை போலிருக்கிறது. அது யானை, ஒட்டகம், குதிரை, மனிதர்களை எல்லாம் தின்று விடுகிறதென்று சொன்னான். அதுகேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கீழே இறங்கி அந்த பாம்பு இருக்கும் இடத்தை நாடிப் போனார்கள். அப்போது பாம்பானது, நபியுல்லாவைக் கண்டு தன் விஷத்தைக் கக்கி மேலே எறிந்து வாயைத் திறந்து, கடிக்க வந்தது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு முழத்துண்டு கோலால் அதன் தலையில் அடித்தார்கள். அடித்தவுடனே அதனுடைய தலை துண்டாய் தெரித்துப் ப்க்கத்திலிருந்த மலையை கவ்வியது. உடனே மலையும், துண்டு துண்டாய் நொறுங்கிப் போயிற்று.

அன்றையதினம், பொழுதுபோய் மறுநாள் பிரயாணம் போகையில், மலையும் காட்டாறுமுள்ள வேரிடத்திலிறங்கி இருந்தார்கள். அப்போது, அன்றிரவு நபியுல்லாவுடைய கனவில் ஜிபுரீல் வந்து நாளை உதயகாலத்தில் வெள்ளம் வருகிறது. ஆனபடியினாலே, இவ்விடத்தை நீங்கள் அனைவரும் விட்டு இந்த மலையில் ஏறிக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதுபோலவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், மற்றப்பேருமாக அந்த மலையில் ஏறிக்கொண்டார்கள். பொழுது விடிந்த உடனே பெரும் வெள்ளம் வந்து, அந்த மலையில் மூன்று நாள் வரைக்கு மிருந்து பார்த்தார்கள். தண்ணீர் வடியவில்லை. அப்போது, நபி நாயகம், கூட விருப்பவர்கள் அனைவரையும் பார்த்து, நாளையதினம் போகலாம் என்று சொன்னார்கள். அன்றிரவு கனவில் ஜிபுரீல் வந்து நபி

நாயகம் அவர்களைப் பார்த்து 'முஹம்மதே! நாளையதினம் ஒரு மான்வரும். அதன் பின்னாலே எல்லோரும் தொடர்ந்து போங்கள்' யென்று சொல்லி விட்டுப் போனார்கள். அதுபோலவே, காலையி லெல்லோரும் ஆற்றங்கரை அருகில் வந்தபோது ஒரு மானானது வந்து, முன்னே ஆற்றி லிறங்கிப் போகக்கண்டு, அதின் பின்னாலே நபி நாயகமும், அவர்கள் பின்னாலே சகல பேருமாக நடந்து ஆற்றைத் தாண்டிக் கரை யேறினார்கள்.

இப்படி நடந்துபோகிற வழியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் ஒரு புலியும் ஒரு பாம்பும் வந்து அடி பணிந்து பேசிப்போயின. அப்புறம் போகையில், ஈஸா நபி யுடைய மார்க்கத்திலுள்ள இஸ்ரூ வென்பவர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமைக் காண வேண்டுமென்று அநேக நாளாய் காத்துக் கொண்டிருந்தார். அவருடன் கலந்து பேசிக் கொண் டிருக்கையில், அவரும் மவுத்தானார். அவரை எடுத்து அடக்கஞ் செய்து விட்டு, அப்புறம் போகையில், இவர்களிடத்தில், திருட வந்த கள்ளரை ஆறு மறித்துக்கொண்டது. பின்னர் ஷாமுக்குப் போனபோது, அவ்விடத்தில் இவர்கள் கொண்டுபோன சரக் கெல்லாம் நல்லவிலையில் விற்று லாபம் வர வியாபாரத்தொழிலை முடித்துக்கொண்டு ஷாமை விட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும், மைசரூவும், அபூபக்கர் ஸித்தீக்கும் அபூஜஹலும் மற்றவரும் மக்கம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது பீபி கதீஜா, மைசராவைப்பார்த்து வழியில் நடந்த செய்தி என்னவென்று கேட்க, அதற்கு மைசரூ ஆதியோடந்த மாக வழியில்நடந்தவைகளாகிய அபூஜஹல் முகமுடைந்ததும், உத் துபாவின் ஒட்டகையைப் புலி அடித்துக் கொண்டு போனதும், நடக்கையில் வழி தப்பிப்போனதும், இருள் வந்து மூடிக்கொண்டு வெளிச்சமானதும், பாம்பைஒரு முழத்தடியால் கொன்றதும், புலி வசனித்ததும், பாம்பு வசனித்ததும், இஸ்ராவைக்கண்டு பேசின தும்,கள்ளரை ஆறு வந்து மறித்துக் கொண்டதும், ஷாம்பட்ட ணம் போய் அவ்விடத்தில் ஆதாயமாக சரக்குகளை விற்றதும், அப் போது அவ்வூரிலுள்ளவர்களில் சிலர்வந்து சரக்கு வேண்டுமென்று மோச வார்த்தைகள் பேசிக் கோட்டைக்குள் அழைத்துக்கொண்டு போய் மெத்தையின் கீழே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமை

உட்கார வைத்து மேலே கல்லை உபாயமாக உருட்டித் தள்ளினதும், அப்படித்தள்ளப் போனவன் கையைக் கல்பிடித்துக் கொண்டதும், அக்கல்பிடித்து கொண்ட கையை நபிகள் நாயகம் பார்த்து விடும்படியாகச் செய்ததும், அங்கே ஒரு கம்மாளன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடையவடிவையும் அடையாளங் களையுங்கண்டு, இவர் பிற்கால நபியென்று கூக்குரலிட்டதும், அந்த சப்தத்தால் ஊராரெல்லாம் ஒன்றாய்த் திரண்டு வந்ததும் தாங்கள் ஷாமைவிட்டுச் சீக்கிரமாக வெளிப்பட்டு வந்ததும், வரும் வழியில் ஊசாவைக் கண்டதும், அவர் சொன்ன பேச்சுகளையும் ஒன்றையும் விடாமல் ஆதியோடந்தமாகச் சொன்னார். அது கேட்டு, பீபி கதீஜா நாயகி மிகவும் சந்தோஷமானார்.

அதன் பின்னர் பீபி கதீஜா நாயகியின்மனதிற் சந்தோஷமும், துக்கமும் ஆகஇரண்டு முண்டாயிற்று. ஏனென்றால், ஷாமு பட்டணம் போகிறவழியில் நடந்தவையெல்லாம் நினைத்து சந்தோஷமும், இப்படிப்பட்ட நபியுல்லாஹ் நம்மைக்கலியாணஞ் செய்து கொள்வாரோ மாட்டாரோ வென்கிற துக்கமுங் கலந்து உண்டாயிருந்தது. இப்படி யிருக்கும் நாளிலே, அபூத்தாலிபு ஒருநாள் அமீர் ஹம்ஸா முதலாகிய தம் இனத்தார் எல்லோரையும், அழைப்பித்து என் பிள்ளையாகிய முஹம்மதுக்கு கலியாணம் செய்யும் வயதானபடியினால் எவ்விடம் பெண்ணை நிச்சயம் செய்வோமென்று யோசனை செய்கையில் அப்போது, அபீத்தாலிபு குவைலீதினுடைய மகள் பீபி கதீஜாவைக் கேட்போமென்று சொன்னார். அதை எல்லோரும் கேட்டு சம்மதப் பட்டார்கள்.

அப்போது அபீதாலிபு அந்த வீட்டிக்குப்போய்கேட்க யாராலும் முடியாது. அமீர் ஹம்ஸாவை அனுப்பிவைத்தால் முடியுமென்று யோசனை சொல்ல, அமீர் ஹம்ஸாவை அனுப்பி வைத்தார்கள். அதற்கு அவரும் நல்லதென்று சம்மதித்து எழுந்து போய் குவைலீதினுடையை வீட்டுக்குச் சென்றார். அப்போது குவைலீது அமீர் ஹம்ஸா வருவதைக் கண்டு எதிர்ச்சென்று அழைத்து வந்து நல்ல விரிப்பில் உட்காரவைத்துச் சில நல்ல மொழிகளும் வசனித்து நீர் இந்த எளியவன் வீட்டை நாடிவந்த காரணம் என்ன வென்று கேட்டார். அதற்கு அமீர் ஹம்ஸா, என் அண்ணன் பிள்ளையாகிய முஹம்மதுக்கு உம்மிடத்தில் பெண் கேட்கவ

மென்று காடி வந்தேன் என்று சொல்ல, அதை அவர் கேட்டு மிகுந்த சந்தோஷமாய் அப்படியே ஆகட்டு மென்று சம்மதித்தார்.

அதன் பின்னர், அமீர் ஹம்சா இந்தச் செய்தியை எல்லாம் அபீத்தாலிபு முதலிய மற்று முண்டானவர்களுக்குச் சொன்னர். அவர்கள் எல்லோரும் இந்தச் செய்தியைக்கேட்டு ஆனந்தம் என்னும் சமுத்திரத்தில் மூழ்கினர்கள்.

பின்னர் நாளும்நிச்சயம்செய்து அம்மார்க்கத்திலுள்ளபடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், பீபி கதிஜா நாயகிக்கும் நிகாஹ முடித்தார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு வயது25-ம், பீபி கதீஜா நாயகிக்கு வயது 40. வேறு சொல்படி 28-ஆக இருந்தது.

மணமக்கி இருவரும் சுகமாக இருக்கிற நாளையிலே, பீபி கதீஜா நாயகி முதலில் ஸைனபையும் 2-வது றுகையாவையும், 3-வது உம்மு குல்தூமையும், அதன் பின்னர் காசிமையும், அதன் பின்னர் அப்துல்லாவையும், அதன் பின்னர் இப்ராஹீமையும், அதன் பின்னர் பீபி பாத்திமா நாயகியையும் பெற்றார்.

இரண்டு உலகத்திற்கும் பாதுஷாவாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வயது முப்பத்தெட்டு நிறைந்தது. அப்போது அவர்கள் கண்ணுக்கு எதிராக பிரகாசமான சில காட்சிகள் தெரிகிறதும் மறைகிறது மாயிருந்தன. அவ்வொளியை என்னமோவென்று பார்ப்பார்கள். சாதாரணமாய் அவ்வொளிதெரிகிறதில்லை. இவ்வதிசயத்தை இவ்விதம் காண்கிறேனென்று ஒருவரிடமும் சொல்லமாட்டார்கள். இஃதல்லாமலும் அந்தாமாயிருந்து ஒரு சத்தம்முழங்கும். அந்த சத்தத்தைக்கேட்டு இவ்விதஞ் சப்தமிட்ட வர்கள் யாரென்றறிவதற்குப் பார்த்தாலும் உருவந்தெரிகிறதில்லை. அச்சத்தம் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையகாதுக்கு மட்டும் கேட்கும் மற்றவர்களுடைய காதிற்குக் கேட்கிறதில்லை. இப்படி சில நாட் கழித்த பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வீட்டிலிருக்கிறது மில்லை. ஒரு வருடனுஞ் சேருகிறதுமில்லை. தங்கள் மனதில் நினைத்ததுபோல மலைக்குகைகளில் போய்தனித்திருப்பார்கள். இன்னும் ஹிறுமலையிலும்போய் இரண்டு நாள் மூன்று நாள் வரைக்குந் தனித்திருக் கதீஜா நாயகியின் வீட்டுக்கு வருவார்கள். பின்னுஞ் சில நாள் பீபி கதீஜா நாயகியை தங்களுடன் கூட்டிக் கொண்டுபோய் ஹிறு

மலையிலிருந்து பகற்பொழுதைப் போக்கி இரண்டு பேரும் வீட்டுக்கு வருவார்கள். இப்படி வருகிற வழியில், மக்கத்திலுள்ள மரங்களும், கல்களும், பறவைகளும், மற்று முண்டானவைகளும், அஸ்ஸலாமு அலைக்கும் யாமுஹம்மத் என்று ஸலாஞ்சொல்லும். அதையுங்கேட்டு மிகுந்த புதுமையாவார்கள்.

இப்படி முப்பத்தெட்டு வருஷமும் ஆறுமாதமுமான பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், பீபி கதீஜாநாயகியின் வீட்டில் தூங்கும்போது வித விதமான புதுமைகளாக கனவு காண்பார்கள். அக்கனவு எவ்விதங் காண்பார்களோ அவ்விதம் பொழுது விடிந்தவுடனே பலிக்கும். இப்படி நடந்து வருகிற நாளையிலே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் றபிவுல் அவ்வல் மாதம் இரண்டாந் தேதி சனிக்கிழமை இரவிலே வழக்கம் போல் ஹிறுமலையில் போய் இருந்தார்கள். அவ்வேளையிலே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தங்களுடைய அழகாகியமுகத்துடனே சிறகினை ஒடுக்கிக்கொண்டு மனிதர் வடிவுபோல் அவ்விடத்தில் வந்து, நபி நாயகத்தை அடுத்து அல்லாஹு தஆலாவுடைய தூதரே! நீர் இவ்விடத்திலிருக்கிறீராவென்று கேட்டுவிட்டுமறைந்துவிட்டார்.

மறுநாளும் அதுபோலவே நடு இரவில் வந்து முன் கேட்டபடி கேட்டு மறைந்து விட்டார். இதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லங் கேட்டு, இஃதென்ன காரணமோ தெரியவில்லை இன்று இங்கிருந்து நடப்பதை முழுதும் அறிவோமென்றெண்ணித் தாங்கள் உட்கார்ந்த விடத்தை விட்டு அப்புறம் போகாமலிருந்தார்கள். அதன் பின்னர் றபீஉல் அவ்வல் மாதம் பத்தாந் தேதி திங்கட்கிழமை இரவு, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கண்ணெதிரே உருவு தெரியும்படியாக நின்று, அல்லாஹு தஆலாவுடைய தூதராகிய நபியே! உமக்கு அல்லாஹு தஆலா ஸலாம் சொன்னானென்று சொன்னார்.

பின்னர் மரகதம், மாணிக்கம், மூத்து, வைடூரியம், செம்பவளம், புட்பாராகம் முதலியவை பதித்த ஒரு வெள்ளை உடையுங்கொண்டு வந்தார். மூதல் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் கலிமாவை ஓதி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய வலது கையிற் கொடுத்தார். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வாங்கினார்கள். வாங்கிய உடனே வானத்திற்கும் பூமிக்குமிடை ஒரே ஒளியாக பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அப்போது ஜிபுரில் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய முகத்தைப் பார்த்து, உமக்கு அல்லாஹு தஆலா இன்று முதல் நபி, பட்டங் கொடுத்தான். ஆன படியினால் உம்முடைய வேதத்தை ஓதுவீராக என்று சொன்னார். அதுகேட்டு நபிகள் நாயகம், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமுடைய முகத்தைப் பார்த்து, எனக்கு யாதொரு எழுத்தும் தெரியாதே. ஆதலால் நான் எப்படி வேதமோதுவேனென்று சொன்னார்கள்.

அதுகேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபி, ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை மெள்ள கட்டி யணைத்து நெருக்கி விட்டு வேதமோது என்று சொன்னார். அதற்கும் நபி நாயகம், நான் ஓதினவனல்லவே, ஆதலால் எனக்கு ஓதத் தெரியாதென்று சொல்லினார்கள். பின்னர் ஜிபுரீல் முன்போலவே கொஞ்சம் உரமாக நெருக்கி வேதமோதுமென்று சொன்னார். அதற்கும் நபி நாயகம் முன் சொல்லியபடியே சொன்னார்கள். அதன் பின்னர் மூன்றாவது முறையும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபிகள் நாயகமவர்களுடைய சரீரமெல்லாம் வியர்க்கும்படியாக பலமாகக் கட்டியணைத்து வேதமோது என்று சொன்னார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்னை என்ன ஓதச் சொல்கிறீர்? என்று கேட்டார்கள்.

அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிகள் நாயகத்தைப் பார்த்து இக்ரஃ என்னும் ஸூராவை ஓதச் சொன்னார். அதைக் கேட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எழுத்துத் தவறாமலும் சொல் பிறழாமலும், பொருள் வேறாகாமலும் நன்றாய்த் திருத்தமாக 'மாலம் யஃலம்' வரைக்கும் ஓதினார்கள். அதை ஜிபிரீல் அலைஹிஸ்ஸலாம் கேட்டு மிகுந்த சந்தோஷத்துடனே போய் விட்டார்.

அதன் பின்னர் நபிகள் நாயகம் அம்மலையி லிருக்கப் பயந்து குளிர் ஜுரத்தோடு தங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அதை பீபி கதீஜா நாயகி கண்டு, மிகுந்த கலவரப்பட்டு இதென்ன புதுமை என்று கேட்டார். அதற்கு நபி நாயகம், பீவி கதீஜா நாயகிக்கு ஆதியோடந்தமாக அவ்விடம் நடந்தவையெல்லாஞ் சொன்னார்கள். அது கேட்டு கதீஜா நாயகி, மிகுந்த சந்தோஷமாய் முதலில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமிடம் ஈமான் கொண்டார்கள்.

பொழுது விடிந்தவுடனே அபூபக்கர் ஸித்தீக், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மிடத்திற்கு வந்தார். அப்போது அபூபக்கர் ஸித்தீக்கின் முகத்தை நபியுல்லா பார்த்து, நீர் கலிமா ஓதுமென்று சொன்னார்கள். அதற்கு அபூபக்கர் ஸித்தீக்கு "முன்னுமுள்ள நபிமார்கள் யாதொரு காரணங்களைக் காண்பிக்காமல் தீனில் அழைக்கவில்லை. அப்படி நீர் ஏதாவது ஒரு புதுமையை காண்பித்தால் நானும் ஈமான் கொள்ளுவேன்" யென்று சொன்னார்.

உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அபூபக்கர் முகத்தைப் பார்த்து இன்றிரவு தூங்கும்போது உமது மடியிலே சந்திரனுஞ் சூரியனும் விளையாடும் படியாகக் கண்டீரோ அது போதுமானது என்று சொன்னார்கள். அது கேட்ட உடனே அபூபக்கர் ஸித்தீக் கலிமா ஓதி ஈமான் கொண்டார். அபூபக்கர் ஸித்தீக் தம் இனத்தார்களில் நல்ல அறிவாளிகளுக்கு இச்செய்தியைத் தெரிவித்தார். அவர்கள் கேட்டு சந்தோஷமாகித் தங்களில் ஆரிதினுடைய மகன் ஸைதென்பவரும், அப்துர் றஹ்மானும், ஸுபைறும், தல்காவும், ஸஃதும் ஆகிய இப்பேர்பட்ட தலைவர்களும் உதுமானும் கலிமாச் சொல்லி ஈமான் கொண்டார்கள்.

இப்படி யிருக்கிற சமயத்தில், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுக்கு வஹிவராதிருப்பதினால் அவர்கள் மனதில் மிகுந்த வியாகூலமாக இருந்தார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் குர்ஆனிலுள்ள முஸம்மிலெனும் ஆயத்தைக் கொண்டு வந்து கொடுத்தபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய மனம் மிகுந்த சந்தோஷத்தினால் பூரித்தது. அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தொழுகையின் முறையும் உலுவின் முறையுங் காண்பித்துக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்கள். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் இதை முஸ்லிமாகிய அஸ்ஹாபிமார்களுக் கெல்லாம் கற்பித்துக் கொடுத்தார்கள். அதை அவர்களெல்லோருங் கற்றுக் கொண்டு அப்படியே நடந்து வருகிற வேளையிலே அதாவது, நபி பட்டம் வந்த வருஷத்திலே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துக்கு "நீங்கள் இருட்டிலும் யாருமில்லாத விடத்திலும் தொழ வேண்டியதில்லை. எல்லோரும் பார்க்கும் படியாகத் தொழுது கொள்ள அல்லாஹு தஆலா சொன்னான்" என்று ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வஹி கொண்டு வந்து

சொன்னார். அப்படியே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்களுடைய அஸ்ஹாபிமார்களுக்கு உத்திரவு செய்தார்கள். அதுபோல் அவர்களும் அன்று முதலாக எங்கே அவர்களுக்கு சுத்தமான இடம் அகப்படுமோ அங்கே எல்லாம் தொழுது கொண்டு வந்தார்கள்.

அப்படித் தொழுது கொண்டு வருகிற காலையில், ஒரு நாள் ஸஃது என்பவர் ஒரு மரத்தடியில் உலுச்செய்து தொழுகையில் இருந்தார். அப்போது, சில காபிர்கள் அவ்விடம் வந்து அவர் நிற்கிறதும், றுக்கூவு செய்கிறதும், ஸுஜூது செய்கிறதும், இருப்பிருக்கிறதும், ஸலாம் கொடுக்கிறதும் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியப்பட்டு சஃதைப் பார்த்து, ஸஃதே! உமக்கு என்ன கேடு, எப்படி வந்து பிடித்ததென்று கேட்டார்கள். அப்போது, ஸஃதுக்கு மிகுந்த கோப முண்டாகி, அவர்களைப் பார்த்து, ஒ காபிர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவன் தூதர் முஹம்மது நபியையும் விட்டு விட்டு, கல்லை வணங்குகின்ற காபிர்களாக இருக்கின்றீர்கள். ஆதலால், அவைகளை விட்டுவிட்டு, இனி நீங்கள் இஸ்லாத்தில் வாருங்களென்று கூப்பிட்டார். அதைக் கேட்டு அந்தக் காபிர்கள், மிகுந்த கோபமாய் ஒருவருக்கொருவர் வாதிக்கலானார்கள். சஃதென்பவர் அவ்விடத்திற் கிடந்த ஒட்டகையின் எலும்பினால் ஒருவன் தலையில் அடிக்க, அந்த அடியால் அவன் தலையுடைந்து இரத்தம் வெளிப்பட்டது. அதை அவர்கள் கண்டு, இருவரையும் விலக்கிவிட்டுப் போய் விட்டார்கள். அதன் பின்னர், இச்செய்தியெல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிடம் சஃது வந்து சொன்னார்.

அதன் பின்னர், நபிப்பட்டம் வந்த ஐந்தாவது வருஷத்தில் ஓரிரவு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வீட்டிலே தனித்திருந்து கொண்டு, தங்கள் இரண்டு கைகளையும் ஏந்தி, அல்லாஹு தஆலாவைப் பல விதமாகப் புகழ்ந்து, ஆண்டவனே! உமர் கத்தாபையாவது, அல்லது அபுஜஹலையாவது, என் வசமாகும்படி செய்தால், நான் தீனை வளர்த்துக்கொண்டு வருவேனென்று துஆக் கேட்டார்கள். அன்றிரவு கழிந்தும் பொழுது விடிந்ததும், அபூஜஹல் தன்னினத்தவராகிய ஒலீது, உத்துபா, உமாறு, உக்பா, ஷைபா இப்பேர்ப்பட்ட தலைவர்களெல்லோரையும் ஒன்

ளுகச் சேர்த்து, இந்த முஹம்மதினால் நமது மார்க்கமெல்லாங் கெட்டுப் போகிறதே, ஆதலால் அவனை எவ்விதத்திலாவது கொல்பவர் யாரென்று கேட்டான். அதற்கு அங்கிருந்த யாவரும் வாய் திறக்காமல் சும்மாயிருந்து விட்டார்கள். அப்போது உமர்கத்தாப் எழுந்து அந்த முஹம்மதை நான் கொன்று வருகிறேனென்று வெளிப்பட்டுப்போனார். அப்படி இவர் போகிற வழியில் ஒரு மாடானது மேய்ந்துகொண்டிருந்தது. அம்மாடு உமர் போகிற வேகத்தைக் கண்டு, ஓ உமரே! நீர் எங்கே போகிறீர் என்று கேட்டது. அதற்கு உமர் நான் முஹம்மதை வெட்டப் போகிறேனென்று சொன்னார். அதுகேட்டு மாடு, ஓ உமரே! முதலில் நீரென்னை வெட்டினீரேயானால்தான் அந்த முஹம்மதை வெட்டுவீரென்பதற்கு சந்தேகமில்லை யென்றது. அதைக் கேட்டு, உமர் கத்தாபு மிககோபமாக அம்மாட்டை வெட்டினார். அது இவர் வெட்டுக்கு அகப்பட வில்லை. முன்னால் வெட்டினால் பின்னால் வரும், பின்னால் வெட்டினால் முன்னால் வரும். இப்படி ஓடி ஓடி இவர் வெட்டுக்கு அகப்படாமல் அஸறு வேளை வரைக்கும் இவரை வருத்திவிட்டது.

அப்போது உமர் பொழுது போகிற வேளையாயிற்றே. நாளை தினம் முஹம்மதை வெட்டலாமென்று திரும்பிப்போய் அபூஜஹல் முதலிய மற்றுமுண்டானவர்களுக்கு இச்செய்தியைச் சொன்னார். அதை அபூஜஹல் கேட்டு, உமரே! நீர் அந்த முஹம்மதுடைய சூனியங்களில் இப்படிப்பட்ட அனேக சூனியங்களைக் கண்டாலும் முன்னர் கொண்ட உறுதியை மறக்காதீர் என்று சொல்லிவிட்டு எல்லோரும் வீடுபோய் சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் உமர் கத்தாபும் தன்வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அன்றிரவுப்போய்ப் பொழுது விடிந்தவுடனே, உமர் எழுந்து முஹம்மதை வெட்டவேணுமென்று நினைத்து கஃபாவுக்கு வந்தார் வந்த விடத்தில் அங்கே ஓர் புதுமையைக் கண்டு நேராகத் திரும்பித் தன் சகோதரியாகிய பாத்திமா வீட்டிற்கு வந்தார். அங்கே பாத்திமா நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுக்கு ஈமான் கொண்டு புர்கான் வேதத்தை கப்பாப் என்பவரிடத்தில் பாடங்கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளையில் உமறு கத்தாபும் போனார். பாத்திமா உமரைக்கண்டு பயந்து,

கப்பாலை யொளித்து வைத்து விட்டு வீட்டின் வாசற்படியில் வந்து நின்றார். அப்போது உமர் கத்தாபு தமக்கையாகிய பாத்திமாவுடைய முகத்தைப்பார்த்து நீங்களென்ன ஓதிக்கொண் டிருந்தீர்களென்று கேட்டார். அதற்கு பாத்திமா பயந்து, நாங்க ளொன்றும் ஓதவில்லை. முன்னுள்ள வேதத்தை ஓதிக் கொண்டு மிருந்தோ மென்றார். அது கேட்டு மிகுந்த கோபத்துடனே உமர் கத்தாபு, தன்கையிலிருந்த ஆயுதத்தினால் தமக்கையாகிய பாத்திமாவின் தலையிலடித்தார்.

அவ்வடியினால் அவர் தலையுடைந்து இரத்தம் வெளி யானது. அவ்விரத்தத்தைக் கண்டவுடனே உமர் கத்தாபுடைய மனதிலிருந்த கோபமும் ஆத்திரமும் எடுபட்டுப் போயிற்று. அப் போது மிகுந்த வணக்கத்துடன் உமர்கத்தாபு தமக்கையாகிய பாத்திமாவைப் பார்த்து நீங்கள் ஓதிக்கொண்டிருந்ததை எனக்கு சொல்லுங்களென்று பலதரம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டார். இவ்விதம் கெஞ்சிக் கேட்டதைப் பார்த்து பாத்திமா யோசித்து இப்போது உமறு நல்ல மனதுடனே கேட்கிறார். இனி யொளிக்கக் கூடாதென்று உமரைப்பார்த்து நாங்கள் ஓதியது புறுக்கான் வேதமென்று சொன்னார். அப்போது உமர்கத்தாபு தமக்கையாரைப் பார்த்து அவ்வேதத்தை என்கையிற் கொடுங்கள், நான் பார்க்கவேணுமென்று கேட்டார். அதற்குத் தமக்கையார் உமர் கத்தாபினுடைய முகத்தைப் பார்த்து, நீர் சுத்தமாயில்லாமலி ருக்கிறீர். ஆதலால் நீர் ஸ்நானம் செய்து கொண்டு சுத்தமான உடையு முடுத்திக்கொண்டு வந்தால் அந்த வேதத்தை உமது கையிற் கொடுப்பேனென்று சொன்னார். அதுகேட்டு உமறு கத்தாபு உடனே போய் முழுகிக் குளித்துத் துப்பறவாகியஉடையு முடுத்துக்கொண்டு வந்தார்.

வந்தவுடனே அவ்வேதத்தைப் பாத்திமா எடுத்துக் கொண்டு வந்து உமர் கையிற்கொடுக்க, அதை அவர் வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டு, தமக்கையின் முகத்தைப் பார்த்து "முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எங்கே யிருக்கி றார்கள், எனக்குச் சொல்லுங்கள். நான் ஈமான் கொள்ளுகிறேன்" என்று சொன்னார்கள். அதுகேட்டு பாத்திமா நபியுல்லாஹ் இருக்கு மிடத்தைச் சொன்னார். உடனே உமர் கத்தாபு நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இருக்கும் இடத்தை தேடிப் போய் ஈமான்கொண்டு இஸ்லாத்தில்சேர்ந்தார்.

அன்று முதல் தீனனது பூமியில் வேரூன்றிப் படர்ந்தது. இந்த சங்கதியை காபிரீன்கள் கேட்டு மிகவும் திகிலடைந்தார்கள். பின்னர் தீனுல் இஸ்லாம் மார்க்கம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. அப்போது காபிர்கள் இஸ்லாத்தில் வர நாடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மிடத்தில், என்னென்ன காரணங்களை மனதில் நினைத்துக்கேட்டார்களோ அந்தக் காரணங்களை எல்லாம் காண்பித்து எல்லோரையும் இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டு வந்தார்கள். இப்படி நடக்கிற நாளையிலே அபூஜஹல், திமஷ்கு பட்டணத்தை ஆளுகின்ற ஹபீபு இராஜனுக்கு, இச் செய்தியை எல்லாங் குறித்துக் காகிதமெழுதி அவரை மக்கத்திற்கு அழைப்பித்தான். அந்த ஹபீபரசனும் மக்கத்திற்கு வந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பற்றி, முன்னுள்ள வேதங்களிற் சொல்லியபடி இவர் அல்லாஹு தஆலாவுடைய தூதரென்பது நிஜமாக இருந்தால், நாம் நினைத்தபடி சந்திரனைப் பூமியில் வரவழைப்பார்; அப்படியானல் ஈமான் கொள்ளுவோமென்று உறுதி கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அழைப்பித்து நீர் அல்லாவின் தூதரென்பது நிஜமேயானுற் சந்திரனை அழைப்பியும். அப்படி நீர் சந்திரனை அழைப்பித்தால் நாங்கள் எல்லோரும் ஈமான் கொள்ளுவோமென்று சொன்னார்.

அப்படியே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அம்மாவாசை இரவில்சந்திரனை அழைப்பித்தார்கள். அதைகண்டு ஹபீபு ராஜா மிகவும் சந்தோஷமானர். அதன் பின்னர் அவ்விடத்தில் வெகு காலகாக ஒருபிறவி தசைக்கட்டியா யிருந்தது. அதையும் பெண்ணுருவாகச் செய்தார். இவையெல்லாம் ஹபீபு ராஜாவும் அவர் மந்திரிமார்களும் அவர் சேனைகள் யாவரும் கண்டு நிஜமாக இவர் அல்லாஹு தஆலாவினுடைய தூதரென்று எல்லோரும்கலிமாச்சொல்லி ஈமான் கொண்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிகுந்தமரியாதையும்செய்து தங்கள் திமிஷ் பட்டணம் போய்ச்சேர்ந்தார்கள். இவ்விதமான காரணங்கள் எத்தனையோ, நபி நாயகமவர்கள் ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களைத் தீனில் சேர்த்துக்கொண்டு வருகிற நாளையிலே ஒரு விசேஷம் நடைபெற்றது. அதாவது!

## மிஃருஜு செய்த புதுமை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஓர் இரவு சபா மறுவா மலைக்கிடையில் பீவி உம்மு ஹபீபா வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அவ்விரவு நாய்களும் குலைக்கவில்லை. இருட்டும் மின்னலும் இடியுமாயிருந்தன. அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் மிகுந்த அழகுடனே சிங்காரித்துக்கொண்டு வந்தார். அவருக்கு இரண்டு பக்கமும் சிறகுகள் மரகதத்தினலும், முத்துகளினலும் சிங்காரித்திருந்தன. அச்சிறகுகள் ஆறு நூறு ஆகும். அதில் ஒவ்வொர் சிறகுக்கிடையில் ஐந்நூறு வருஷத்துப் பயண தூரம். அவருடைய நெற்றியில் கலிமாவும் எழுதி யிருந்தது. இந்தச் சிங்காரத்தோடும் அவர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை தட்டி யெழுப்பினர். அப்போது, நபியுல்லா ஜிபுரில் அலைஹிஸ்ஸலாமைப் பார்த்து, இந்நேர இரவில் என்னிடத்திற்கு நீர் ஏன் வந்தீரென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபி, நாயகத்தைப் பார்த்து, உம்மை அல்லாஹு தஆலா மிஃருஜுக்கு அழைத்துவரச் சொன்னன். அதற்காக வந்தேனென்று சொன்னர்.

அதுகேட்டு, நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மிஃருஜுக்குப்போக சந்தோஷமா யிருக்கிற வேளையில், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமும் அவருடன் றூக்காயிலுமாகப் புருக்என்னும் வாகனத்தைக்கொண்டு வந்தார்கள். அந்த புருக்கினுடைய வடிவு கழுதையிலும் உயரம், கோவேறு கழுதையிலும் மட்டம், முகம் வெள்ளையாய் மனிதர் முகம்போலும், தலை குதிரையின் தலைபோலும், நெஞ்சு புலியின்நெஞ்சுபோலும், கால் யானையின் கால்போலு மிருந்தன. அந்த புருக்கின் இருபக்கமும் சிறகுகளிருந்தன. அதனுடைய இரண்டு கண்ணுக்கிடையில் கலிமா எழுதியிருந்தது. இன்னும், அநேக விதமாகவெல்லாம் சிங்காரித்திருந்தது. அந்த புருக்கின்பேரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நபிப்பட்டம் பெற்ற பனிரண்டாம் வருஷம் றஜபுமாதம் இருபத்தேழாந்தேதி திங்கட்கிழமை இரவில் ஏறிக்கொண்டு போனதாக ஜினனுஸ்ஸியர் என்னும் கிதாபிற் சொல்லப்படுகிறது.

பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை ஜிபுரீல் (அலை) புராக்கில் ஏற்றிக்கொண்டு போகிறவழியில், ஒரு மலையானது மிகுந்த பிரகாசமாகத் தெரிந்தது. அந்த மலையைக்கண்டவுடனே,

ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபி நாயகத்தைப்பார்த்து, அல்லாஹ்வு டையறஸூலே! நீர் இந்த இடத்திலிறங்கி இரண்டு றக்ஆத்துத் தொழுதுகொள்ளுமென்று சொன்னார். அப்படியே நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் தொழுது, புறுக்கின்மேலேறிக் கொண்டு போகும்போது, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து, யாஜிபுரீல்! இம்மலையின் புதுமை யென்னவென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல், இம்மலை மூஸா நபி அல்லாஹு தஆலாவுடனே பேசிய மலையென்று சொன்னார். பிறகு நபிகள்நாயகம் அப்புறம் கடந்துபோகையில், இருண்டகாடாகவும் முள் நெருங்கிய இடமாகவும் ஒரு இடம் தெரியக்கண்டார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபி நாயகத்தைப் பார்த்து, முஹம்மதே! நீர் இவ்விடத்திலும் இரண்டு றக்ஆத்து தொழுது கொள்ளுமென்று சொன்னார். அப்படியே நபி நாயகம் தொழுது கொண்டு போகிறபோது, நபி நாயகம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத் தைப்பார்த்து ஜிபுரீலே! இதன் புதுமையைச் சொல்லுமென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல், யாறஸூலல்லாஹ்! இது ஈஸா நபி பிறந்த இடமென்று சொன்னார்.

அதைக்கேட்டுக் கொண்டு நபி நாயகம் அப்புறம் கடக்கை யிலே, "றஸூலே நான் சொல்லுகிற சொல்லானது நலமானதா யிருக்கும். ஆதலால் அச்சொல்லை நீர் நின்று கேளுமென்று சப் தம்வந்தது. அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து, முஹம்மதே! இந்தச் சொல்லுக்குப் பதிற்சொல்லாதீர் என்று சொன்னார். பின்னர் நபி நாயகம் அவ்விடத்தைத்தாண்டி அப்புறம் போகையிலே, இடது புறத்திலிருந்து ஓர் சத்தம் வந்தது. முஹம்மதே! அதற்கும் பதில் ஜவாபு சொல்லாதேயும் என்று ஜிபுரீல் சொன்னார். பின்னர் நபிநாயகம் அவ்விடத்தையும் விட்டு அப்புறம்போகையில், அநேக விதமான புதுமைகளெல்லாங் கண்டு பைத்துல் முகத்திஸுக்குள்போய், அநேக நபிமாரை யெல்லாம் தொழவைத்து அவ்விடத்தில் அநேக வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டு, முதல் வானத்திற்குள் போனார்கள். அங்கே ஓர் பெரியவர் இருக்கக்கண்டு நபி நாயகம், ஜிபுரீலிடம், இவர்கள் யாரென்று கேட்டதற்கு, ஜிபுரீல், நபிஸல்லல் லாஹு அலைஹி வஸல்லத்தைப் பார்த்து, இவர்தான் உம்முடைய

தகப்பனாகிய ஆதம் அலைஹிஸ்ஸலாம். ஆதலால், நீர் இவருக்கு ஸலாஞ் சொல்லுமென்று சொன்னார்.

உடனே நபி நாயகம் ஸலாம் சொன்னார்கள். அதற்கு பாவா ஆதம் அவர்கள், ஜவாபு சொல்லித் துஆவுஞ்செய்தார்கள். பின்னர் நபி நாயகம் முதல் வானத்தை விட்டு இரண்டாம் வானத்தில் போனார்கள். அவ்விடத்தில், எஹ்யா நபியையும் ஈஸா நபியையுங் கண்டு அவர்களுக்கும் ஸலாம் சொல்லிசில பேச்சும் பேசிக்கொண்டு, அவ்விடம் விட்டு நாலாம் வானத்திற்குப் போனார்கள். அவ்விடத்தில் இத்ரீஸ் நபியைக்கண்டு ஸலாம் சொல்லிக் கலந்து பேசிக்கொண்டு அவ்விடம் விட்டு ஐந்தாம் வானத்திற்குப் போனார்கள். அவ்விடத்தில் ஹாறூன் நபியைக்கண்டு ஸலாம் சொல்லிக் கலந்து பேசிக்கொண்டு அவ்விடம் விட்டு, ஆறும் வானத்தினுள் பிரவேசித்தார்கள். அவ்விடத்தில் மூஸா நபியைக் கண்டு ஸலாம் சொல்லிக் கலந்து பேசிக்கொண்டு அவ்விடம் விட்டு ஏழாம் வானத்தினுள் போனார்கள்.

அவ்விடத்தில் பைத்துல் மஃமூரென்னும் பள்ளி வாசலின் சுவரில் இபுராஹீம் நபி அவர்கள் சாய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு ஸலாம் சொல்லிச் சில பேச்சுகள் பேசிக்கொண்டு, பின்னர் சிதுரத்துல் முந்தஹா வென்னும் இலந்தை மரத்தடியில் போனார்கள். அந்த மரத்தடியிலிருந்து நாலு ஆறுகள் புறப்பட்டு ஓடுகின்றன. அதில் இரண்டு ஆறு பூமிக்கு வருகின்றன. அந்த ஆற்றின்பேர் நீலாறும், புறாத்தாறுமாம். மற்ற இரண்டாறு சுவர்கத்தினுள்ளே போகிறது. அந்த மரத்தின் அருகே போனவுடனே, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபி நாயகத்தைப் பார்த்து யாறஸூலுல்லாஹ்! இந்த மரத்துக்கு அப்பால் வர எனக்கு அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவில்லை யென்று சொன்னார். அது கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஜிபுரீலைப் பார்த்து, நீர் என்னை இவ்விடத்தில் தனியாய் விட்டு விட்டுப் போகிறீரா வென்று சொன்னார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் இதற்கு மேல், இவ்விடத்திலுள்ள மலக்குகள் உம்மை அழைத்துக் கொண்டு போவார்கள் என்று சொல்லி யாறஸூலுல்லாஹ்! நீங்கள் அல்லாஹுத் தஆலாவிடத்தில் போகிறபடியினாலே, என் மனதில் ஓர் கோரிக்கையிருக்கிறது. அஃ தென்ன வென்றால், நாளை கியாமத்தில் அல்லாஹுத் தஆலா சிறுத்

துல் முஸ்தகீம் பாலத்தை நரகத்தின் முதுகின் மேல் வைத்து உங்கள் உம்மத்துகளை நடக்கும் படியாய் உத்திரவு செய்வான். அப்போது அவர்கள் அதின் பேரில் நடப்பார்கள். அவர்களுக்கு அந்த நரகத்தின் சூடும், வருத்தமும் நேரிடும். அவ்வேளையில் சிறுத்துல் முஸ்தகீம் பாலத்தின் பேரில் என்னுடைய சிறகை விரித்து, அதன் பேரில் எல்லோரும் நடக்கும்படியாக உத்திரவு வாங்கிக் கொண்டு வாருங்களென்று சொன்னார்.

பின்னர், இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹு தஆலாவின் உத்திரவின்படி, ஒளியினால் றப்றப் என்னும் தகத்தைக் கொண்டு வந்தார். அதற்கு முன்னால் மூத்தினால் எழுபதினாயிரம் திரைகளிருந்தன. அத்திரை ஒவ்வொன்றிற் கிடை 500 வருஷத்து வழியுண்டு அந்தத் திரைகளை யெல்லாம் தாண்டி அந்த றப் றப் என்னும் சிம்மாதனத்தருகே சேர்ந்தார்கள். அவ்விடத்தில், அர்ஷானது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தையும், அந்த சிம்மாதனத்தையும் ஏற்றுக் கொண்டது. அப்போது, என் ஹபீபே! இன்னும் அருகே நெருங்கி வாருமென அல்லாஹு தஆலாவின் சப்த முண்டாயிற்று. அதுகேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தங்கள் காலிலிருக்கும் பாதாட்சையைக் கழற்றி விட்டு ஏறவேண்டு மென்று மனதில் எண்ணினார்கள். அந்த வேளையில் அர்ஷானது கிடுகிடென்று அசைந்தது. அப்போது 'என்னுடைய ஹபீபே! உம்முடைய பாதரட்சையை கழற்றாமல் அர்ஷில் ஏறுங்கள். அதனுடைய அசைவு நிற்குமென்று ஒரு சப்தம் வந்தது. உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், முன்னால் மூஸா அலைஹிஸ்ஸலாம் 40-நாள் நோன்பு வைத்துப் பின்னர் பாதரட்சையைக் கழற்றி கீழே விட்டுத் தூர்சினா மலையிலேறி வாருமென்று உத்திரவு மிட்டீரே அந்த இடத்தை விட இந்த இடம் ஆயிரம் பங்கு பெருமையில் உயர்த்தியானதாயிற்றே. இதன் மேல் நான் என்னுடைய பாதரக்ஷயை கழற்றாமல் எப்படி ஏறிவருவேனென்று சொன்னார்கள்.

உடனே அல்லாஹு தஆலா, என்னுடைய ஹபீபே! நான். மூஸா அலைஹிஸ்ஸலாமை பாதரட்சையை கழற்றி விட்டுத் தூர்சினா மலையில் ஏறச்சொன்னது ஏனெனில், அந்த மண் அவர் காலிற்பட்டு அதனால் அவருக்கு மிகுந்த பெருமை உண்டானது. ஆனால் உம்முடைய பாதரட்சையின் மண் இந்த அர்ஷில்.

பட்டால் அர்ஷுக்கு மிகுந்த பெருமையைக் கொடுக்க நாடி யிருக்கிறேனென்று திருவுளமானன். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அப்படியே, அர்ஷின் மேலேறிப் போனார்கள். அவ்விடத்தில் இருபுறமும் பார்க்கும்போது, வலது புறமாக 312 மின்பரும், இடது புறமாக முத்தினலும் மாணிக்கத்தினலும் கோமேதகத்தினலும் செவந்த பவளத்தினலும் புஷ்பராகத்தி னலுமான வெகு உன்னதமான பளபளப்பு 'மினு மினுப்புமாகச் சோடித்து மிகுந்த உயரமாகவும் ஒரு மின்பர் கட்டியிருந்தது.

அதை நபிநாயகம் பார்த்து, இதனுடைய அதிசய மென்ன வென்று ஜிபுரீலைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு அல் லாஹ்வின் புறத்தாலே அந்த வலதுபுற மிருப்பவைகள் மற்று முள்ள நபி மார்களுக்காகும்; இடது புறமாயிருப்பது முஹம்மதே! உமக்கு என்று சப்தம் வந்தது. அதாவது வலது புறம் சொர்க்கமும், இடது புறம் நரகமுமிருப்பதால், முஹம்மதே, நீர் அந்த இடது புறமாக உட்காருவீரேயானல் உம்முடைய உம்மத்திலுள்ள வர்களில் குற்றவாளிகள் நரகத்தில் கிடந்து மிகுந்த வேதனைப்படுவார்கள். அதைக் கண்டு நீர் என்னை நாடி துஆக் கேட்பீரானல், நான் அவர்கள் குற்றத்தைப் மன்னித்துக் கொள்வேன். அவர்களுக்கு நீரும் ஷபா அத்து செய்வீர். அதனல் உம்முடைய உம்மத்துகள் நெடுங்காலமாக நரகத்தின் வேதனையில் அகப்படமாட்டார்களென்று சொன்னன்.

பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை றப்றப் என்னும் சிம்மாசனமானது, கிப்ரியாவென்னும் திரைக்குள் கொண்டு போய் விட்டு மறைந்து விட்டது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுக்கு, அவ்விடத்தில் மனதில் மிகுந்த பயங்கரம் தோன்றியது. அந்த வேளையில் நிடீ ரென்றுநபி நாயகமே! உங்களுடையநாயன் வணக்கத்திலிருக்கிறன் என்று அபூபக்கர் ஸித்தீக்குடைய சப்தத்தைப் போலொரு சப்தம் வந்தது. அதை நபி நாயகம் கேட்டு இவ்விடத் திலிருந்து அபூபக்கர் ஸித்தீக்குடைய சப்தத்தைப் போல ஒரு சப்த முண்டாயிற்றே. இதன் காரணமென்ன வென்று, தங்கள் மனதில் பல பல விதவாக எண்ணுகையில், அவர்களுடைய மனதி லிருந்த பயம் வெளிபட்டு திடச்சித்தமாயிற்று.

அப்போது நாயகம்முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், என் நாயனே! நீ வணக்கத்தைக் கொண்டும் துப்புரவா யிருக்கிறாய். இன்னும் இவ்விடத்தில் அபூபக்கர் ஸித்திக்குடைய சப்தத்தைப்போல வந்த சப்தமும் எனக்குத் தெரியவில்லையே என்று அல்லாஹ்வை நோக்கி கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா என்னுடைய ஹபீபே! என்னுடைய வணக்கமானது உமது பேரிலும், உமது உமத்துக்கள் பேரிலும் நான் செய்கிற றஹ்மத்தாயிருக்கும். இன்னும் நீர்இவ்விடம் வந்தவுடனே மனதில் பயங் கொண்டபடியால், உம்முடைய பயம் நீங்கும்படியாக உம்முடைய தோழராகிய அபூபக்கர் ஸித்தீக்கைப்போல ஒரு மலக்கை உண்டாக்கி இவ்விடத்தில் பேசவைத்தேன். அந்த சப்தம் உமது காதில் விழுந்தவுடனே உமது மனதில் பயம் நீங்கிப் போனது என்று திருவுளமாகினான். பின்னர், நபிகள் நாயகம் ஒளி வினாலானஎழுபதினாயிரம் திரைகளைக் கடந்து காப கவுசைன் என்னும் தலத்தைச்சேர்ந்து, அவ்விடம் அஹதியத்தினுடைய ஒளியைக்கண்டு தங்கள் தலையை ஸஜ்தாவில் வைத்தார்கள்.

அப்போது, என்னுடைய ஹபீபாகிய நபியே! எனக்காக என்ன காணிக்கை கொண்டு வந்தீரென்று அல்லாஹு தஆலா வுடைய சப்தம் வந்தது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நான் காணிக்கையாக அத்தஹிய்யாத்தை கொண்டு வந்தேனென்று சொன்னார்கள். அதற்கு அல்லாஹு தஆலா எனது ஹபீபே! இதை உம்முடைய உம்மத்தினர்களுக்கும் தொழுகையிலே கடைசியிலே ஓதச் சொல்லும் என்று கூறி பின்னுந் திருவுளமானான் எனது ஹபீபே! நான் வானம், பூமி, மலை, கடல், குகை, பாதாளம், அர்ஷு, குர்சு, லவ்ஹு, கலம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், சுவர்க்கம், நரகம், மலக்குகள், மானிடர்கள், ஜின்கள், ஊர்வனம், நடப்பவைகள் முதலிய மற்று முண்டான படைப்புகள் யாவற்றையும் உம்முடைய முஹப்பத்தைக் கொண்டு உண்டாக்கினது, இல்லாவிட்டால் யாதொன்று முண் டாக்கேனென்று சொன்னான்.

பின்னும் இவ்வேளையில் உமக்கு வேண்டுமானவை யெல்லாம், என்னிடத்தில் கேட்டுக்கொள்ளும். நான் தருகிறேன் என்று திருவுளமாகினான். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தலையை ஸஜ்தாவில் வைத்து என் நாயனே!

என்னுடைய உம்மத்துகள் மிகுந்த குற்றவாளிகள். அவர்களுடைய குற்றத்தைப் பொறுத்துக்கொள். இன்னும் அவர்களை நரகத்தின் நெருப்பைக்கொண்டும் தப்பவை என்று சொன்னார்கள். உடனே அல்லாஹு தஆலா நான் உம்முடைய உம்மத்துகளின் குற்றத்தை மூன்றில் ஒரு பங்கைப் பொறுத்துக் கொண்டேன் என்று சொன்னான். அதை கேட்டு நபி நாயகம் பின்னும் ஸஜ்தா செய்து கேட்டார்கள். அப்போது அரை பாகம், பொறுத்துக் கொண்டேன் என்று சொன்னான். அதைக் கேட்டு, நபி நாயகம் பின்னும் ஸஜ்தாச் செய்து கேட்டார்கள். அப்போது, உமது உம்மத்துகள் எவ்வளவு பாவஞ் செய்தாலும் பொறுத்துக் கொள்வேன். ஷிர்க்கு குபிராகியகுற்றத்தை பொறுக்க மாட்டேன் என்று சொன்னான். இவ்விதம் அல்லாஹு தஆலா விடத்தில், நபி நாயகம் அநேக விஷயங்களைப்பற்றி பேசிவிட்டு திரும்பி மக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள்

---

## ஹிஜ்ரத் போன சிறப்பு.

நபிநாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அல்லாஹு தஆலாவின் உத்தரவின்படி, தீனுல் இஸ்லாத்தை பூலோகம் எங்கும் பெருகும்படியாகச் செய்து கொண்டு வருகிற நாளையில், அபூஜஹல், அபூசுபியான், ஒலீது, உத்துபா இப்பேர்ப் பட்ட தலைமை காபிர்கள் எல்லாரும் ஒன்றாகச்சேர்ந்து, நம்முடைய பழைய மார்க்கத்தை முஹம்மத் என்பவர் பாழ்படுத்தித் தன்னுடைய புதிய மார்க்கத்தை உண்டாக்கி தன் மார்க்கத்தில் வரும்படியாகச் சூனியன் வஞ்சனையால் கேட்கிறவர்களுக்கு அற்புத காரணம் என்று காண்பிக்கிறார், நம் இனத்தில் உள்ளவர்களை ஒருவருக்கொருவரை ஆக ஒட்டாமல் குடியைக் கெடுக்கின்ற முஹம்மது என்பவனை எவ்விதத்திலாவது கொல்லவேண்டும் என்று யோசனை செய்துகொண்டு இருக்கிறவேளையில், பெரியமனிதர்போல் வடிவும், நரைத்த தாடியுமாக அந்த சபையாரிடத்திற்கு இபுலீசானவன் வந்து, மிகுந்த வணக்கமாய் நல்ல யோசனை சொல்பவன்போல இவர்களைப் பார்த்து, "சபையோரே! நான் மிகுந்த பெரிய மனிதன், மிகுந்த யுக்தியான யோசனை சொல்லக் கூடியவன். இன்னும் என்னிடத்தில் மிகுந்த திரவியமும் மிகுந்த மனிதர் கூட்ட

முண்டு. நான் உங்களுக்கு உதவியாக வந்தேன்" என்று சொன்னான். அப்போது அந்த பெரிய மனிதனைப் பார்த்து, நம்முடைய தெய்வத்தையும், நம்முடைய பழைய மார்க்கத்தை யும் பொய் என்று, கூறி தன்னுடைய சூனியத்தால் பாமரர் களுக்கு காரணம் என்று காண்பித்து சகல ஜனத்தையும் விரோதஞ் செய்கின்ற முஹம்மதை எவ்விதமாக கொல்லுகிற தென்று அபூஜஹல் கேட்டான்.

அதற்கு இபுலீஸ், அந்த முஹம்மது நித்திரை செய்யுஞ் சமயத்தில் தலையை அறுத்துக் கொண்டு, ஒருவருக்கும் தெரியா மல் வந்து விட்டால் நமது காரியம் எல்லாம் பலிக்கும், இல்லா விட்டால் பலிக்காது என்று சொன்னான். அதை எல்லோரும் கேட்டு, இதுவே நல்ல யோசனை என்று ஒத்துக்கொண்டு, அப் பொழுதே மிகுந்த வீரியமும் சாமர்த்தியமுள்ள குறைஷி வம்சத்தார்களில் இருபதுபேரைத் தயார்செய்து, நீங்கள் இன்றைய இரவு முஹம்மது என்பவனுடைய தலையை அறுத்து வாருங்கள் என்று கட்டளை யிட்டான்.

இவ்விதம் இவர்கள், கெட்ட யோசனை செய்து கொண்டிருக் கையில், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமிடம் வந்து, பகல் அபூஜஹல் முதலாகிய காபிர்கள் உங்க ளுடைய தலையை இன்றைய இரவு அறுக்க யோசனை செய்து ஆள்களும் தயார்செய்து வைத்திருக்கிறார்கள். ஆனதால் நீங்கள் ஹஜ்றத் அலியை உங்களுடைய விரிப்பிலே படுக்க வைத்து விட்டு, நீங்களும் அபூபக்கர் ஸித்திக்குமாக மதீனத்திற்கு ஹிஜ்றத்தாகிப் போய் விடுங்கள், உம்முடைய தீனுல் இஸ்லாமானது மிகுதியாய் பெருகும் என்று சொல்லிவிட்டுப் போனார்.

பின்னர் இந்த விஷயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அபூபக்கர் ஸித்தீகுக்குத் தெரிவித்தவுடனே, அன்றிரவு தங்களுடைய விரிப்பில் ஹஜ்றத்து அலியைப் படுக்கவைத்து விட்டு தாங்களும் அபூபக்கர் ஸித்தீக்குமாக மதீனத்திற்கு ஹிஜ் றந்தானார்கள். அந்த நாள் றபீஉல் அவ்வல் மாதம் முதல் தேதி திங்கட்கிழமை இரவு, நபிப்பட்டம் பெற்ற பதின் மூன்றாம் வருஷம், மிஃறாஜுக்குப் போய் வந்த எட்டாமாதம், நபிக்கு ஐம்பத்து மூன்றாம் வயதா யிருந்தது.

அதன் பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துடைய தலையை அறுக்க வந்த அவ்விருபது காபிரான பேர்களும், வீட்டைச் சுற்றி வளைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹு தஆலா பெரிய தூக்கத்தை விட்டான். அதனால் அவர்களுக்கு நபிகள் நாயகமும், அபூபக்கர் ஸித்திக்குமாக வெளியே புறப்பட்டுபோனது தெரியவில்லை.

அதன் பிறகு இபுலீஸானவன் வந்து தூங்குகிற காபிர்களை எழுப்பி, முஹம்மதும் அபூபக்கர் ஸித்தீக்குமாக ஓடிப்போய்விட்டார்களே, நீங்கள் ஏன் காத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் கத்திகளை உருவிக்கொண்டு வீட்டினுள்ளே நுழைந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் படுக்கும் விரிப்பை பார்த்து, அருகே நெருங்கினார்கள் அதில் ஹஜ்ரத் அலி படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து "முஹம்மது எங்கே?" என்று கேட்டார்கள். அதற்கு அலி (ரலி) அவர் எங்கேயோ நான் அறியேன் என்று சொல்லி விட்டார்கள்.

அது கேட்டு இவர்கள் ஊரரெல்லாம் தேடிப் பார்த்தார்கள். எவ்விடத்திலும் நபி நாயகம் அகப்படவில்லை. அந்தச் செய்தியை அபூஜஹலுக்குத் தெரிவித்தார்கள். அதை அபூஜஹல் கேட்டு, முஹம்மதும் அபூபக்கருமாக மதீனத்திற்கு ஓடிப் போய் விட்டார்கள் என்று எனக்கு நன்றாய் தோன்றுகிறது. ஆதலால் இப்போதே நீங்கள் பின்றொடர்ந்து போனால் தவுர் மலையில் அதஹில் என்னும் குகையில் ஒளிந்து கொண்டிருப்பார்கள். அவ்விடத்தில் தேடினால் அகப்படுவார்கள் என்று சொன்னான். அதைக் கேட்டு குறைஷிக் காபிர்கள் எல்லாம் அபூபக்கர் ஸித்தீக்கின் வீட்டிலும் தேடிப் பார்த்து, அங்கேயும் இவர்கள் இல்லாமையால் மதீனத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்.

இந்தச் செய்தியை நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்திடம், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, நீங்கள் இரண்டு பேரும் இந்த அதஹில் என்னும் குகைக்குள் புகுந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்களைக் குறைஷிக் காபிர்கள் மிகுந்த வருத்தஞ் செய்வார்கள் என்று சொன்னார்கள். இவ்விதம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னதை நபி நாயகமவர்கள்

கேட்டு உடனே அந்த மலைக் குகைக்குள் புகுந்து கொண்டார்கள். அப்போது அல்லாஹு தஆலாவின் உத்திரவின் படி, நூலிழைக்கும் பூச்சி குகை வாசற்படியில் நூலிழைத்து விட்டது. இன்னும், அதில் இரண்டு புறு முட்டை இட்டுக் கூடுங் கட்டிக் கொண்டது. அதின் மேல் பழையதாய்த் தெரியும் படியாக ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் மண்ணையும் சேற்றையும் எடுத்தெறிந்து போய் விட்டார்.

அப்போது அந்தக் குறைஷிக் காபிர்கள் எல்லாரும் மலையைச் சுற்றிலும் கல் காடுகள், புதர்கள், செடிகள் குகைகள், பள்ளங்கள் முதலான இடங்கள் எல்லாம் தேடினார்கள். எங்கும் காணவில்லை. ஆனால், இபுலீஸுக்கு மட்டும் நபியுல்லா ஒளிந்துக் கொண்டிருக்குமிடம் தெரியும். அதனால் அவன் நரம் மனிதர் வேஷம் தரித்துக் கொண்டு போய் முஹம்மது இருக்குமிடத்தைக் காண்பித்து விடவேண்டுமென்று எண்ணினான். அப்போது அல்லாஹு தஆலாவின் உத்திரவின்படி, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தமது சிறகினால் இபுலீஸை அடித்து அவனை முஹித்என்னுஞ சமுத்திரத்தில் எறிந்து விட்டார்.

அதன் பிறகு குறைஷிக் காபிர்கள் எல்லாரும் அங்கே தேடிப்பார்த்து வருகையில் ஒரு குகையைக் கண்டு சிலர் இதில் முஹம்மது ஒளிந்து கொண்டிருப்பார் என்றும், சிலர் இதில் எப்படி நுழைவார் என்றும், சிலர் இதில் இல்லை என்றும், சிலர் எங்கேயும் இல்லாமல் எவ்விடம் போய் விட்டாரோ என்றும் பேசிக்கொண்டு நிற்கையில், அந்தக் குகையிலிருந்து இரண்டு புறுக்கள் வெளியே பறந்து வந்தன. அதைக் கண்டு அங்கே போய்ப் பார்த்தார்கள். அந்தக் குகையின் வாசற்படியில் நூல் பூச்சி நூலிழைத்திருந்தது. அதில் புறுவும் முட்டை யிட்டிருந்தது. குப்பையும் சேத்தையும் மண்ணும் தூசியுமாயிருந்தது. இதில் முஹம்மது இல்லை என்று பேசிக்கொண்டு போய் விட்டார்கள்.

அதன் பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்தக் குகையினுள்ளே மூன்று நாள்வரைக்கும் வணக்கத்திலேயே இருந்தார்கள். மேலும், அந்தக் குகையினுள் பாம்புத் தேளும் மிகுதியாய் இருந்தன. அதை அபூபக்கர் ஸித்தீக்கு கண்டு

தங்கள் மேலிருந்தபுடவை, தலையிலிருந்த பாகைமுதலிய துணிகள் எல்லா வற்றையும் கிழித்து வளைகள் எல்லாவற்றையும் மூடினார்கள். அதன் பின்னர் ஒரு வளையை மூடத் துணி யாதொன்று மில்லாமையால் தங்களுடைய குதிக்காலை வைத்துஅந்த வளையை மூடிக் கொண்டார்கள். இது இப்படியிருக்க, அல்லாஹு தஆலா ஜீவஜந்து ஹைவான்களுக்கு இன்ன காலத்தில் என்னுடைய ஹபீபான முஹம்மது நபி மதீனத்திற்கு ஹிஜறத்தாய் இவ்வழியாக வந்து இக்குகையிலிருப்பார் என்று தெரிவித்திருந்தான். அதனால் நபி அவர்களைக் காணவேணுமென்று ஒரு பாம்பு வந்து அந்தக் குகையிலிருந்தது. அதின் மூக்குக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துடைய மேனியில் வீசுகின்ற கஸ்தூரி வாசனை வீச, அது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தை காணவேணும் என்று வெளியிலே புறப்பட வந்தது. அப்போது அபூபக்கர் ஸித்தீக்கு தங்களுடைய குதிக்காலால் அப்பாம்பு வர முடியாமல் வளையை அடைத்துக்கொண்டார்கள். அதனால் பாம்பானது காலைக் கடித்தது. அப்படிக் கடித்தும் அபூபக்கர் ஸித்தீக் தங்கள் காலை எடுக்காததினால் அதன் விஷம் தலைக்கேறினது.

அந்தச் சமயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தி மேல்நோக்கிப் பார்க்கும்போது, அபூபக்கரவர்களுக்கு விஷமேறியிருந்ததைக் கண்டு, அபூபக்கரைப்பார்த்து "நீர் ஏன்இந்த ஹாலாயிருக்கிறீர்" என்று கேட்டதற்கு; அவர் "யாரஸூலே! இந்தக் குகையிலோர் பாம்பு இந்த வளை முகத்திலிருந்து வெளியேவர வந்தது. அதை நான் வரவிடாமல் என் குதிக்காலால் மூடிக்கொண்டேன். அதனால் அப்பாம்பு என்னைக் கடித்ததின் பேரில் விஷமேறி யிருக்கிறது" என்று சொன்னார்கள். அதுகேட்டு நபி நாயகம், அபூபக்கர் ஸித்தீக்கைப் பார்த்து, உமது காலை யெடுஎன்று சொன்னார்கள். உடனே அவர்கள் காலை யெடுத்தார்கள். பின்னர் வளையிலிருந்து அப்பாம்பும் வெளியே வந்தது. அதை நபி நாயகம் பார்த்து; ஏ பாம்புப! நீயேன் அபூபக்கர் ஸித்தீக்கைக் கடித்தாயென்று கேட்டார்கள். அதற்கு அப்பாம்பு நபி நாயகத்தைப்பார்த்து 'இருலோகத்திற்கும் நாயகமான வள்ளல் முஹம்மதே! நான் உங்களைக் காணவேணுமென்று அநேக காலமாக இம்மலையில்

காத்திருந்து இன்றையதினம் தாங்கள் சமீபத்தில் வந்திருப்பதைத் தெரிந்து, நான் உங்களைக் காண வந்தேன். வழியை இவர் அடைத்தபடியால் கடித்தேனென்றுசொல்லி, மிகுந்த அன்புடனே பணிந்து கலிமாவும் ஓதி ஈமான் கொண்டு அடிபணிந்து போய்விட்டது. பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் வாய் நீரை மூன்றுதரம் தொட்டு அபூபக்கர் ஸித்திக்கு அவர்கள் காலில் பாம்பு கடித்தவிடத்தில் தடவினார்கள். உடனே அவ்விஷம் இறங்கி விட்டது.

பின்னர் நாலாம் நாள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அபூபக்கர் ஸித்தீக்குமாக, அந்தக் குகையை விட்டும் புறப்பட்டுப்போகையில், அபூஜஹலுடைய தூதர்களிலொருவனான சுறுக்காஎன்பவன் உருவின கத்தியுடன் மிகுந்த ஆரவாரத்துடன் குதிரையின் மேலேறி ஓட்டமாக ஓடிவந்தான். அவனைக்கண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அந்தக் குதிரையின்காலைப் பிடித்துக்கொள்ளென்று பூமிக்கு உத்திரவுகொடுத்தார்கள். உடனேபூமியானது அவனதுகுதிரையின் காலைப்பிடித்துக்கொண்டது. அப்போதவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தை மிகவும்கெஞ்சி "நாயகமே! என்குதிரையின் காலைப்பூமி விடும்படி செய்யுங்கள்" யென்று சொன்னான். அதுகேட்டு, நபி நாயகம் குதிரையின் காலை பூமி விடச்செய்தார்கள். மறுபடியும் அவன் துர்க்குணத்தைவிடாமல், நபிநாயகத்தின்பேரில்பாய திரும்பினான். இப்படி மூன்றுதரம் பூமி அவனையும் அவன் குதிரையின்காலையும் பிடித்துக்கொள்ளச் செய்தார்கள்.

அதன் பின்னர் அவன்பயந்து ,வந்த வழியே திருப்பிப்போய் விட்டான். அப்படியவன் போகிறவழியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தை தேடிவருபவர்களுக்கெல்லாம், நான் வெகு தொலைதூரம் வரைக்கும் போயிருந்தேன், அந்த முஹம்மதை எவ்விடத்திலுங்காணவில்லைஎன்று சொல்லி அவர்களை வரவிட்டாமல் வந்த வழியே அழைத்துக்கொண்டுபோய் விட்டான். பின்னர் நபிகள் நாயகம் வருகிறசெய்தியை அவ்வழியிலிருக்கிற கிறுவுல் அமீனென்கிற பட்டணத்தை ஆளும் புரிதா அஸ்வமீனென்னும் பாதுஷா கேள்விப்பட்டு தன்னினத்தார்களில் 700-பேருடன் அங்கே வந்து நபி நாயகத்தைக்கண்டு அடிபணிந்து தீனுல் இஸ்லாம்மார்க்கத்திலாக ஈமான் கொண்டார்கள்.

பின்னர் அவ்விடத்தை விட்டு றபீவுல் அவ்வல் மாதம் 16-ந் தேதி திங்கட்கிழமை தினம் நபி நாயகம் குபாவென்னும் தலத்திற் சேர்ந்தார்கள். அவ்வூரில் அநேக ஜனங்களும் ஈமான் கொண்டார்கள். பின்னர் நபி நாயகம் அவ்வூரில் நாலுநாள் வரைக்கும் இருந்தார்கள். இந்தச் செய்தி மதீனத்தாருக்குத் தெரிந்து, அங்குள்ள பெரிய தலைவர்களும் ஹஜ்றத்து உமறும், அமீர்ஹம்ஸாவும் மற்றுமுள்ள அஸ்ஹாபிமார்களுமாக அவ்விடத்திற்கு வந்து, நபி நாயகத்தைக் கண்டு மூலாகத்செய்தார்கள். பின்னர் றபீவுல் அவ்வல் மாதம்20-ந்தேதி வெள்ளிக்கிழமை தினம் மதீனம் வந்து சேர்ந்து, அபூஅய்யூபு வீட்டில் இருந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மக்கத்தை விட்டு மதீனத்திற்கு ஹிஜ்றத்தாகபோன பத்தாம்வருஷம் மறுபடியும் மக்கத்திற்கு அஸ்ஹாபிமார்களுடனே ஹஜ்ஜுல் விதா என்னும் கடைசி ஹஜ்ஜுக்கு வந்து, துல்ஹஜ்ஜு மாதம் எட்டாம் தேதி அறபாத் மலைக்கு அஸ்ஹாபிமார்களுடன் போய் இரண்டு றக்அது அதொழுது கொண்டு இருக்கும் போது, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் கடைசியாக கீழ்க்கண்ட ஆயத்தை வஹி கொண்டு வந்தார்கள்.

அந்த ஆயத்தின் பொருளாவது :—முஹம்மதே! இன்றேடே உம்முடைய தீனுல் இஸ்லாம் நிறைவாயிற்று. இன்னும் என்னுடைய நிஃமதது முடிவாயிற்று. இன்னும் உங்களுடைய தீனில் இஸ்லாத்தைக் கொண்டு நானும் ராஜியானேன் என்பதாகும். இதை யறிந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நமக்கு இப்பூலோகத்தை விட்டுப் பிரிய முடிவு நாளாய் வருகிறதென்று தெரிகது கொண்டார்கள். பின்னர் ஹஜ்ஜு செய்து முடித்துக் கொண்டு அவ்வூரிலே தங்கள் தாய் தகப்பனிருந்த வீடுகளைப் பார்வை யிட்டுக் கொண்டு, மக்கத்தை விட்டு மதீனத்திற்கு வரப் பயணமானார்கள். தங்களுடைய அஸ்ஹாபிமார்களிடம் நான் இன்னும் வருகிற வருஷத்திற்கு மக்கத்திற்கு வர முடியாதென்று திருவுளமானார்கள்.

இச்சங்கதியை அஸ்ஹாபிமார்களெல்லாரும் கேட்டு மிகவும் துயரப்பட்டழுதார்கள். அதன் பின்னர் அன்றைய தினமே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்துக்கு விலாவின் பக்கம் வலி யுண்

டாகி, அதனாலே தாங்கள் 13-வேளைத் தொழுகையை அபூபக்கர் ஸித்தீக் அவர்களை இமாமாக நிற்க வைத்து அவர்களுக்குப் பின்னின்று தாங்களும் தொழுது கொண்டே மதீனம் வந்து சேர்ந்தார்கள்.

பின்னர் ஸபர்மாதம் கடைசிப் புதன்கிழமை தினம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தலைநோவுஞ் சுரமுமாய், பீபி மைமூனா வீட்டிலிருக்க, மற்ற பீபிமார்களெல்லாம் நபி நாயகத்தைப் பார்க்க வேண்டி அவ்வீட்டுக்கு வந்தார்கள். அப்போது நபியுல்லா இந்த பீபிமார்களில் ஒருவருடைய தோளிலே கையை வைத்துக் கொண்டு அவ்வீட்டை விட்டு பீபி ஆயிஷா வீட்டிற்கு வந்து, அவர்களுடைய மடியிலே தங்கள் தலையை வைத்துப் படுத்துக் கொண்டார்கள். அப்போது பீபி ஆயிஷா, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்துடைய முகத்தைப் பார்த்து, ஏன் தங்களுடைய சரீரம் கனத்திருக்கிறதென்று கேட்டார்கள். அதற்கு நபி நாயகம் பீபி ஆயிஷாவைப் பார்த்து, எனக்குப் பிரிவு நாள் அடுத்து வந்ததென்று சொன்னார்கள்.

அது கேட்டு பீபி ஆயிஷா வெகுநேரம் தன்னை மறந்து நடு நடுங்கி, மிகுந்த பெருமூச்சு விட்டு ஆயாசப்பட்டார்கள். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கண்டு, பீபி ஆயிஷாவுடைய முகத்தைப் பார்த்து "ஆயிஷாவே! எல்லாரும் மவுத்துடைய ருசியை ருசித்தே தீரவேணுமென்று தைரியமான வார்த்தைகளெல்லாஞ் சொல்லி மனதைத் தேற்றினார்கள். பின்னர் வெள்ளிக்கிழமை நாள் வந்தது. அன்றைய தினம் ஹஜரத் பிலால் பாங்கும் ஸலாத்துஞ் சொன்னவுடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நான்கு பேர்களையும் அழைத்து, அவர்களுடைய தோளிலே கையை வைத்துக் கொண்டு மிகுந்த வருத்தத்துடனே மஸ்ஜிதுக்கு வந்து சேர்ந்து, அங்கு சூழ்ந்திருந்த அஸ்ஹாபிமார்களைப் பார்த்து, எனக்கு உடம்பு ருஹத்இல்லாத படியினாலே அபூபக்கர் ஸித்தீகை இமாமத்துச் செய்ய ஏற்படுத்துகிறேன். அவர் பின்னால் நீங்கள் எல்லோரும் நின்று தொழுது கொள்ளுங்களென்று சொன்னார்கள்.

அதைக் கேட்டு அஸ்ஹாபிமார்களெல்லாம் தேம்பி அழுதார்கள். அப்போது வருத்தத்துடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இமாமாக நின்று தொழுவித்தார்கள் பிற்கு

தங்கள் அஸ்ஹாபிமார்களுக்கு வஸியத்துச் சொல்லத் தொடங்கினார்கள். அஃதென்னவெனில் :—என்னுடைய சகோதரர்களான அஸ்ஹாபிகளே! அல்லாஹு தஆலா எனக்கு அனுப்பிய வஹிப்படி அதிலுள்ள நன்மை தீமைகளையெல்லாம் நானுங்களுக்குத் தெரியப்படுத்தி விட்டேன். இப்போது எனக்கு கடைசி முடிவு வேளை நெருங்குகிறது. ஆனதால் நீங்கள் மகா எச்சரிக்கையாய் எனக்குப் பின்னால் நடந்து கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். அதுகேட்டு அஸ்ஹாபிமார்களெல்லாரும் திடுக்கிட்டு மெய்ம்மறந்து மனங்கலங்கிப் பெருமூச்சிட்டு அழுதார்கள்.

அந்த சமயத்தில் ஹஜறத் அபூபக்கர் ஸித்தீக் எழுந்து கைகட்டி நின்றுகொண்டு, யாறஸூலே! இன்றிரவு நானொரு கனவு கண்டேன். அஃதென்னவெனில் என் மகளாகிய பீபி ஆயிஷாவினுடைய முக்காடு மேலே பறந்து போகும்படியாய் கண்டேனென்று சொன்னார்கள். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டு, அபூபக்கரைப் பார்த்து 'அது உம்முடைய மகள் ஆயிஷா விதவை யாவதற்குள்ள அடையாளம்' யென்று சொன்னார்கள்.

பின்னர் உமரிபுனு கத்தாபு எழுந்து கைகட்டி நின்று கொண்டு "யாறஸூலல்லாஹ்! இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன். அஃதென்ன வெனில், என்னுடைய நீதம் என்னை விட்டு மறையக் கண்டேன்" என்று சொன்னார். அதை ஸெய்யிதுல் முர்ஸலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டு, உமர் கத்தாபவர்களைப் பார்த்து, "உமறே! அந்த நீதம் நானுயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். பின்னர் ஹஜ்ரத்து உதுமான் எழுந்து கைகட்டி நின்று கொண்டு, நபி நாயகத்தைப் பார்த்து, யாறஸூலல்லாஹ்! இன்றை இரவு நானொரு கனவு கண்டேன். அஃதென்ன வெனில், குர்ஆனிலிருந்து ஒரு ஏடு பறந்து போகக் கண்டேனென்று சொன்னார். அது கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், உதுமான் றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து, உதுமானே! அந்த குர்ஆனுடைய ஏடானது என்னுடைய றூஹா யிருக்கும். பறந்து போனது என் உடலை விட்டு உயிர் பிரிந்து போவதாகும் என்று சொன்னார்கள். அதன் பின்னர் ஹஜ்ரத்து அலி எழுந்து கைகட்டி நின்று கொண்டு நபி

நாயகத்தைப் பார்த்து யா நபி! இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன். அஃதென்ன வெனில் என் கையிலிருந்த கேடகம் ஒடிந்து போகக் கண்டேனென்று சொன்னார்கள். அது கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அலியை பார்த்து, அலியே! அந்த கேடகம் நானுயிருக்கிறேன். ஒடிந்து போனது நான் இவ்வுலகத்தை விட்டுப் பிரிவதாகும் என்று சொன்னார்கள்.

பின்னர் இமாம் ஹஸன் ஹுஸைன் எழுந்து கைகட்டி நின்று நாயகத்தைப் பார்த்து, இன்றைய இரவு நாங்களொரு கனவு கண்டோம். அஃதென்னவெனில் ஒரு பெரிய விருட்சம் வேரோடு கீழே சாயும்படி கண்டோமென்று சொன்னார்கள். அதை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கேட்டு, இமாம் ஹஸன், ஹுஸைன் அவர்களைப் பார்த்து, அந்தப் பெரிய மரம் நானு யிருக்கிறேன். அது இந்தப் பூலோகத்தை விட்டுப் பிரிவதென்று சொன்னார்கள்

பின்னர் பீபி ஆயிஷா எழுந்து கைகட்டி நின்று கொண்டு, நபி நாயகத்தைப் பார்த்து, யாறஸூலுல்லாஹ்! இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன். அஃதென்னவெனில், என்னுடைய வீட்டின் தூணானது கீழே விழக் கண்டேன் என்று சொன்னார்கள். அதை நாத்திமுன்னபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லங் கேட்டு ஆயிஷாவைப் பார்த்து, பீபி ஆயிஷாவே! இந்தக் கனவை எந்தப் பெண் பிள்ளை காணுகின்றாளோ அவளுடைய புருஷன் இறந்து போவாரென்று சொன்னார்கள். இச் சொல்லைக் கேட்ட வுடனே எல்லா பீபி மார்களும், எல்லா அஹ்லபைத்களும், எல்லா அஸ்ஹாபிமார்களும் வாய் விட்டு அழுது துணி கிழித் தெறிந்து தலை மேல் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு கதறினார்கள். அதை ஷபீவுல் முதுனபின் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பார்த்து, என்னுடைய தோழன் மார்களே! எனக்கு மிகுந்த வருத்தமா யிருக்கிற தென்று சொன்னார்கள்.

பின்னர் றபீவுல் அவ்வல் மாதம் இரண்டாம் நாள் திங்கட் கிழமை தினம், அல்லாஹு தஆலா இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாமி டம், "ஏ இஸ்றயீலே, நீர் மிகுந்த பயபக்தியாகவும், அன்பாகவும் உம்முடைய கோரமுகத்தை யொளித்து ஓர் முகமாக

வும் நல்ல அன்புள்ளவராகவும் மனிதர் வடிவெடுத்துக் கொண்டு என் ஹபீபாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமிடத்திற்குப் போய், கைகட்டி மிகுந்த அதபாக அவரை சுவர்க்க லோகத்துக்கு அழைத்துவாரும். இன்னும், நீர் அவரது உத்திரவில்லாமல் வீட்டினுள் புகுத வேண்டாம். அவருடைய பிரியமில்லாமல் அவருடைய உயிரையும் வாங்கவேண்டாம்" என்று உத்திரவு செய்தனுப்பினான்.

அந்தப்படி இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கிற வீட்டின் வாசற் படியில் வந்து நின்று கைகட்டி மெதுவாகக் கூப்பிட்டார். அந்த சப்தத்தால் வீடுகளெல்லாம் அதிர்ந்தன. அப்போது பீபி பாத்திமா "என் தகப்பனுக்கு உடம்பு வருத்தமாயிருக்கிறது; நீர் இப்போது பார்க்கவும பேசவும் கூடாது" யென்று சொன்னார்கள்.

அதை இஸ்றாயீல் கேளாதவர் போல், அடிக்கடி கூப்பிட்டார். அந்த சப்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காதில் விழுந்து, அவர்கள் கண்ணை விழித்து, பீபி பாத்திமாவே! அஃ தென்ன சப்தமெனறு கேட்டார்கள். அதற்கு பீபி பாத்திமா நாயகி நபி நாயகத்தைப் பார்த்து, என் தகப்பனாரே! ஒரு அறபியானவர் கையிலே கத்தி பிடித்துக் கொண்டு வந்து வீட்டினுள்ளே வரக் கேட்டார். அதற்கு நான் இந்த வேளை வரக்கூடாதென்று சொன்னேன். அதை அவர் கேளாமல் அடிக்கடி சப்தமிட்டுக் கொண்டிருக்கிறாரெனறு சொன்னார்கள். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டு, பீபி பாத்திமா நாயகியைப் பார்த்து, பாத்திமாவே! அவர் அறபியானால் நீர்பேச வென்றதற்குப் போய் விடுவார். அவர் அறபியரல்ல. அவர் பெண்களை விதவைகளாக்குகிறவர். பிள்ளைகளை எத்தீமாக்குகிறவர். அவரை வீட்டுக்குள் அழையு மென்றார்கள். அது கேட்டு பீபி பாத்திமா நாயகி, அவரை வீட்டினுளளே அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

இவ்விதமாக மலக்கல் மவுத்து, வீட்டுக்குள்ளே வந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்தின் முன் மிகுந்த அன்புடனே நின்றார். அவருடைய முகத்தைப் பார்தது நபி நாயகம் என்னுடைய உடற் பிறபபானவரே! நீர் என்னைக் கண்டு பேச வந்தீரா? என்று கேட்டார்கள். அதற்கு, மலக்கு நபி நாயகமவர்

ளைப்பார்த்து, மலகுலே! தங்கள் உத்திரவின்படி தங்கள் உயிரை வாங்க வந்தேனென்றார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், மலக்குல் மவுத்தைப் பார்த்து, மலக்கல் மவுத்தே! நீர் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வருமளவும் தாமதஞ் செய்யுமென்று சொன்னார்கள். இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமும் வந்தார். அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரைப் பார்த்து, ஜிபுரீலே! அல்லாஹு தஆலா எனக்கு 90-வயது அளித்திருக்கிறேனென்று சொன்னானே, இப்போது எனக்கு வயது 63-தானே யாகி யிருக்கிற தென்று சொன்னார்கள் அதற்கு ஜிபுரீல், "முஹம்மதே! உமக்கு மிஃறாஜில் வயது 27 சென்று போயிற்று" யென்று சொல்லி, பின்னும் முஹம்மதே! நீர் உம்முடைய இஷ்டப்படி எத்தனை காலம் வரைக்கும் நீர் பூலோகத்தி லிருக்க மனமிருக்கிறதோ அத்தனை காலம் வரைக்கும் வாழலாம் என்று அல்லாஹு தஆலா உமக்குச் சொல்லும்படிக்குத் திருவுளமா யிருக்கிறானென்று சொன்னார். அதற்கு நபியுல்லா ஜிபுரீலைப் பார்த்து, அல்லாஹு தஆலாவினுடைய இஷ்டம் எப்படி இருக்கிறதென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் சொன்னார், அவனுடைய இஷ்டம் உம்மை சுவர்க்கத்திற்கு அழைக்க நாட்டமாயிருக்கிறது. ஏனென்றால் நரகத்தில் நெருப்பைத் தணிய வைத்துச் சுவர்க்கத்தை அலங்கிர்தஞ் செய்து அந்த சுவர்க்கத்திலுள்ள ஹூறுல் ஈன்களை யெல்லாம் சிங்காரித்துக் கொள்ளுங்கள், என் ஹபீபாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வருகிறார். நீங்களெல்லோரும் அவருக்குப் பணிவிடைசெய்ய வேண்டுமென்று கட்டளை யிட்டிருக்கிறான் அதினால் எனக்குத் தெரியுமென்று சொன்னார்

அது கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஜிபுரீலைப் பார்த்து, ஜிபுரீலே! நான் அல்லாஹு தஆலாவின் கட்டளையாகிய உத்திரவுக்கு சம்மதித்து இருக்கிறேனென்று சொல்லிப் பின்னும், ஜிபுரீலிடம் நீர் இன்னும் இந்தப் பூலோகத்தில் எனக்குப் பின் எத்தனை தரம் வருவீரென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் நான் பத்து தரம் வருவேன். அப்படி வருவதில் முதலிலே சபரென்னும் பொறுமையும், 2-வது ஷறமென்னும் வெட்கத்தையும், 3-வது முஹப்பத்தென்னும் பிரியத்தையும், 4-வது அதலென்னும் நீதத்தையும், 5-வது பறக்கத்தென்னும்

வாழ்வையும், 6-வது ஸகாவத்தென்னும் தருமத்தையும், 7-வது சதகாத்தென்னும் நிஜத்தையும், 8-வது ஹலாவென்னும நற்றொழிலையும், 9-வது இல்மென்னும் கல்வியையும், 10-வது குர்ஆனுடைய எழுத்தையும், ஆக பத்து காரியத்தையும் முடித்துக்கொண்டு போகத்தான் வருவேனென்று சொன்னர்.

அது கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து, என் உம்மத்துகளுடைய ஹால் எனக்குப் பின்னல் எப்படியாகுமென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபி நாயகத்தைப்பார்த்து, றஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா உம்முடைய உம்மத்துகள் அடங்கலையும் என்னுடைய அமானமாக்கினல் அந்த உம்மத்துகளைக் காப்பாற்றி கியாமத்து நாளையில் உமது வசம் ஒப்புவிப்பேன் என்று உமக்கு தெரிவிக்கும்படி திருவுளமாயிருக்கிறன் என்று சொன்னர்.

அது கேட்டு மிகுந்த சந்தோஷமாய்ப் பின்னும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமிடம் என் மையத்துக்கு குசல் கொடுப்பவர் யார்? கபனிடுபவர் யார்? ஜனஸாத் தொழுவிக்கிறவர் யார்? என்னை எவ்விடத்தில் அடக்கஞ் செய்கிறது என்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், உடனே அல்லாஹு தஆலாவிடத்தில் போய்க்கேட்டு வந்து, நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமிடம் உம்மைக் குளிப்பாட்டவும் தொழுவிக்க அபூபக்கர் ஸித்தீக் இருக்கிறர். கபனிட ஹலறத் அலி இருககிறர். பீபீ ஆயிஷா வீட்டில் அடக்கஞ் செய்ய இடமாகும். இவ்விதம் அல்லாஹு தஆலா அருளினன் என்று சொன்னர். பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களுடைய அஸ்ஹாபிமார்களுக்கு வஸிய்யத்துச் செய்யத் தொடங்கினர்கள். அதாவது:— நபி நாயகமவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து, என் அன்பர்களே, நீங்கள் ஹறும் ஹலால்களை அறிந்து, ஹலாலைச் செய்து ஹறுமை விலக்கி நடவுங்கள். இன்னும் ஸகாத்து கொடுங்கள். பகீர்களுக்கு ஒத்தாசை செய்யுங்கள். பெண்ஜாதி, பிள்ளை, உற்றர் உறவினர் மற்ற எல்லோர் பேரிலும் கிருபை வையுங்கள் அவர்களை வருத்தப்படுத்தாதீர்கள். இவ்விதம் அநேக விதமான வஸிய்யத்து எல்லாம் செய்து கொண்டிருக்கையில், அருகிலிருந்த அஸ்ஹாபிமார்கள் அந்தத் துயரத்தால் அழுதழுது தன்னை மறந்து விட்டார்கள்.

அப்போது பிபி பாத்திமா மிகுந்த துயரமாக நின்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பீவி பாத்திமாவைப் பார்த்து, அம்மா பாத்திமாவே நான் போன 6-வது மாதம் நீ என்னிடம் வருவாய் என்று சொல்லித் திடச்சித்தம் செய்தனர். பின்னர், நபி நாயகம் இஸ்ரூயீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து உம்முடைய அலுவலை முடித்துக்கொள்ளும் என்று சொன்னார்கள். உடனே அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துடைய மார்பிலே தமது கையை வைத்தார். வைத்தவுடனே பெரிய மலையை எடுத்து மார்பில் வைத்தால் எவ்வளவு கனமுண்டோ அவ்வளவு கனமாயிருந்தது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மலக்குல் மவுத்தைப்பார்த்து, எனக்கே ஸக்ரூத்திநுடைய வருத்தம் இப்படி யிருந்தால், என்னுடைய உம்மத்துகள் மிகுந்த எளியவர்களாயிற்றே, அவர்கள் இந்த வருத்தத்தைப் பொறுக்கமாட்டார்களே. ஆகையால் அவர்களுடைய வருத்தத்தை எல்லாம் எனக்குக் கொடுத்து அவர்களை ரூஹத்து செய்வீராக என்று சொன்னார்கள்.

அப்போது மலக்குல் மவுத்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பார்த்து, யாறஸூலே தங்களுடைய ரூஹை நான் மிகவும் எளிதாக வாங்குகிறேன் என்று சொனனர்.

யாராவது பறுலுத் தொழுகை தொழுது முடிந்தவுடனே ஆயத்துல் குருஸி ஓதுவார்களே யானல் அவர்களுடைய உயிரை தாயானவள் பிள்ளைக்குப் பால் கொடுத்து அந்தப் பிள்ளை பால் குடித்துக் கொண்டே தூங்கும்போது, அத்தாயானவள் எப்படி மார்பை பிள்ளைக்குத் தெரியாமல் இழுத்துக் கொள்வாளோ அப்படிப்போலே அவர்கள் உயிரை வாங்குவேன் என்றும் சொன்னர்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மறுபடியும் அஸ்ஹாபிமார்களுக்கு "நீங்கள் ஒருவருடைய புரணி பேசாமலிருந்து, உங்களுடைய கல்பாகிய மனக்கண்ணாடியைப் பரிசுத்தமாக வையுங்கள்" என்று வஸிய்யத்துச் செய்தார்கள். அப்போது அஸ்ஹாபிமார்கள் நபி நாயகத்தைப்பார்த்து, றஸூலல்லாஹ்! கியாமத்து நாள் எப்போது வரும் என்று கேட்டார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கலிமா விரலைக் காட்டினார்கள். அது கண்டு அஸ்ஹாபிகளில் சில பேர் கியாமத்து நாள் ஒரு வருஷத்தில் வரும் என்றும், சில பேர் நூறு வருஷத்தில் வரும்

என்றும், சில பேர் ஆயிரம் வருஷத்தில் வரும் என்றும், சில பேர் அல்லாஹ் ஒருவனே அறிவான் என்றும் பல பல விதமாகப் பொருள் வைத்துக் கொண்டார்கள். அவ்வேளையில் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய றூஹு பிரிந்து சொர்க்க லோகம் போய் சேர்ந்தார்கள் (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.)

அப்போது மதீனத்திலுள்ள அஸ்ஹாபிமார்களும் மற்று முண்டான ஜனங்களும், நாம் இனிமேல் என்ன செய்வது. இரு லோகத்திற்கும் பாதுஷாவாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்கள் நமக்கு நானாவிதமாகிய அறிவுகளைச் சொல்லிக் கொண்டு, சகல ஜனங்களுக்கு தலைக்குநிழல் போலவும், உடலுக்கு உயிர் போலவும், பூவுக்கு மணம் போலவும், வெயிலுக்கு நிழல் போலவும், பயிருக்கு வேலி போலவுமிருந்து பாதுகாத்து வந்தார் களே. இனிமேல் நாம் யார்முகத்தைப் பார்ப்போம். இனி யாரி டத்தில் புத்திமதி கேட்போமென்று உணவு தண்ணீர் அருந்தா மல் மதீன முழுதும் அன்றிரவு மிகுந்த துக்கமாகிய சமுத்திரத்தில் மூழ்கினார்கள்.

இன்னும் வானம், பூமி பறவைகள், நாற்கால் மிருகங்கள், ஊர்வனங்கள், மலை, மரம் முதலியவை களெல்லாம் இனி நாமிருந்து என்ன பிரயோஜனமென்று சஞ்சலப்பட்டன இப்படி எல்லாப் படைப்புகளும் விசனத்தோ டிருக்கையில், அஸ்ஹாபிமார்களும் அஹ்லெபைத்களும் மிகுந்த துயரப்பட்டு அழுது சஞ்சலித்துப் பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல முடைய புனித சரீ ரத்தை நல்லமணத்துடனே யெடுத்து, பீபி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய முபாறக்காகிய வீட்டில் நல்லடக்கஞ் செய் தார்கள். ஸல்லல்லாஹு அலாமுஹம்மத் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இரத்தின முஹம்மது காரண சரித்திரம் முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
111228

PRINTED AT SHAHUL HAMEEDIA PRESS, MADRAS 5. 29—1—51

வெளிவந்து விட்டது!     முதல் பதிப்பு.

# பத்ஹுர் ரஹ்மான்
# பில் பிக்ஹின் னுஃமான்.

## (ஹனபி மதுஹபுக் குரியது)

பிரயோஜனமான கல்வி பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி நம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிர யோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமை யாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோ ஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவித மான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல் புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓதவேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால்தான் தெரியும்.

விலை ரூ. 2—12—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹு ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## எங்களது புஸ்தகங்களுள் சில:—

| | |
|---|---|
| நஸ்ஹுல் ஹதீது வ பத்ஹுல் மஜீது | 6—4—0 |
| அன்வாருல் குர்ஆன் 1-வது ஒளி (அல்ஹம்து ஜுஸ்உ தர்ஜுமா) | 0–12—0 |
| அன்வாருல் குர்ஆன் 2-வது ஒளி (யாஸீன் ஸூரு தர்ஜுமா) | 0—8—0 |
| ஹஸரத் ஆயிஷா நாயகி ஜீவிய சரித்திரம் | 1—9—0 |
| நபி நாயகத்தின் திருவாக்கியம் | 2—0—0 |
| முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம் | 2—8—0 |
| தரீக்குல் ஜன்னா | 3—0—0 |
| பத்ஹுற் றஹ்மான் பில்பிக்ஹின் நுஃமான் | 2—0—0 |
| மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ யிலாஹின்னிகாஹ் | 2–15—0 |
| ஹஸரத் கதீஜா நாயகி (ரலி) அவர்களின் ஜீவிய சரித்திரம் | 1—4—0 |
| சுல்தான் சிக்கந்தர் (அலை) கிஸ்ஸா | 0—8—0 |
| முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம் | 2—7—0 |
| கல்ஸர் நாமா | 0—2—0 |
| விறகு வெட்டியார் கிஸ்ஸா | 0—4—0 |

SCANNED

கிடைக்குமிடங்கள்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பிராஞ்ச் ஆபீஸ் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 194, கைஸர் தெருவு, கொழும்பு 11. (ஸிலோன்.)